# வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்வு



இயேசுவிடம் நெருங்கிச் சேருவதற்கு உதவி செய்யும் வேதாகம அடிப்படையிலான ஜெபங்கள்

# பதிப்புரிமை

Scripture quotations are from the Holy Bible Tamil - OV. Published by: The Bible Society of India. Used by permission. All rights reserved.

குறிப்பிடப்படாதவரையில் இங்குப் பயன்படுத்தப்பட்டு இருக்கும் அத்தனை வேதாகம வார்த்தைகளும் இந்திய வேதம சங்கத்தாரால் வெளியிடப்பட்ட பரிசுத்த வேதாகமம் தமிழ்-OV-ல் இருந்து எடுக்கப்பட்டு அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் புத்தகத்தின் செய்திகள் இலவசமாகப் பயன்படுத்தப்படலாம்.

இதனைத் தொகுத்தவர்கள், அச்சிட்டவர்கள் மற்றும் டிஸ்ற்றிபியுட்டர்கள் எந்த விதமான மருத்துவ மற்றும் மனநலம் சம்பத்தப்பட்ட சேவைகளைத் தரவில்லை. இந்தப் புத்தகத்தகமும் மருத்துவ அல்லது மன நலம் சம்பத்தப்பட்ட பிரச்சனைகளை கையாளும் நோக்கத்துடன் எழுதப்படவில்லை.

ஆங்கிலத்தில் முதலாவது 2016-ல் அச்சிடப்பட்டது

தமிழில் மொழிபெயர்த்தவர்: பா. ஸ்டீபன் இராஜேஷ்

தமிழ்ப் பதிப்பு : 2019

Tamil: 2019

www.victoriouschristianlife.info

# பொருளடக்கம்

**நன்றி** i

**பின்னனி** ii

**முன்னுரை** *1*

**மனம்திரும்புதல்** *11*

**மன்னிப்பு** *27*

**ஆழமான மனம்திரும்புதல் மற்றும் மன்னிப்பு** *37*

*தெய்வீகமற்ற உறவுகளில் இருந்து விடுதலை* *38*
*குற்றப்படுத்தும் தீர்ப்புகளில் இருந்து மீட்கப்படுவது* *45*
*எதிர்மறையான வார்த்தைகளில் இருந்து விடுதலை* *53*
*பணப் பிரச்சனைகளில் இருந்து விடுதலை* *61*
*தெய்வீக சுதந்திரத்தினை மீட்டெடுப்பது* *68*

**ஞானஸ்நானங்கள்** *81*

**கர்த்தருக்கு செவிகொடுத்து கீழ்ப்படிவது** *89*

**ஜெப ஊழியத்திற்கான நடைமுறை காரியங்கள்** *99*

*ஜெப ஊழியத்திற்கான ஆலோசனைகள்* *99*

*குழந்தைகளுக்கு ஊழியம் செய்யும் போது அவசியமான கூடுதல் நெறிமுறைகள்* *103*

*விடுதலைக்கான கூடுதல் வழிகாட்டுதல்* *105*

*பரிந்துரைக்கப்படும் ஊழிய நேரத் திட்டம்* *107*

**பின் இணைப்பு** *111*

*புதிய ஏற்பாட்டில் உள்ள மனம்திரும்புதல் அட்டவணை* *112*

*சில பொதுவான மனம்திரும்புதல் காரியங்கள்* *114*

*உங்கள் குடும்ப சரித்திரத்தை உண்டாக்குங்கள்* *120*
*தலைமுறைகளின் ஆசீர்வாதத்தைக் கொண்டுவர ஜெபம்* *124*
*கிறிஸ்துவில் நான் யார்* *128*
*வேதாகமத்தை கற்றுக் கொள்வது எப்படி* *131*
*சுகத்திற்காக ஜெபிப்பது* *134*

*மற்றவர்களுடனும், கர்த்தருடனும் நாம் சரியாக இருப்பது பற்றி வேதாகமம் என்ன கூறுகின்றது* *139*

*பணம் குறித்து வேதாகமம் சொல்லுவது என்ன* *141*

# நன்றி

*இதனைத் தொகுத்தவர்கள் இந்தச் செய்தியை தங்களது இதயத்தில் தந்ததற்காகவும், இதனை அதிகமான முறை எழுதி சரிப்படுத்த தந்த திறன் மற்றும் பொறுமைக்காகவும் கர்த்தருக்கு நன்றி செலுத்துகின்றனர்.*

*இந்தப் புத்தகத்தை ஊக்கப்படுத்திய எல்லெல் ஊழியங்களுக்கு நன்றி தெரிவிக்கின்றனர். மேலும், எலியா ஹௌஸின் ஸ்தாபகர்களான ஜான் மற்றும் பவுலா சண்ட்ஃபொர்ட் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றனர். அவர்களது முன்னோடி பணி பெரிதான உற்சாகத்தையும், வழிகாட்டுதலையும் தந்துள்ளது.*

# பின்னனி

*எனது பதினோராவது வயதில் நான் கிறிஸ்தவளாக மீண்டும் பிறந்த அனுபவம் பெற்றேன். அதைத் தொடர்ந்து சில வருடங்கள் இயேசுவைக் குறித்து மிகவும் விருப்பம் உள்ளவளாக இருந்து, பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானத்தையும், சுகமாக்கும் வரத்தையும் பெற்றேன். ஆனால், வருத்தமான விஷயம் என்னவெனில், நான் எனது பள்ளிப்படிப்பை முடித்து, பள்ளியை விட்டுச் சென்றதும், இயேசுவின் மீது எனக்கு இருந்த விருப்பம் குறைந்தது. இதன் காரணமாய் அடுத்த முப்பது ஆண்டுகள் பின்மாற்றம் அடைந்து, விருப்பம் குறைந்து போய், தீர்க்க முடியாத அனேக பிரச்சனைகளால் எரிச்சலடைந்து வாழ்ந்து கொண்டிருந்தேன்.. வனாந்தரத்தில் இருந்த இஸ்ரவேலரைப் போன்று, எனது வாழ்கை சுற்றிக் கொண்டே வந்தது. ஆனால் வாக்குத்தத்த தேசத்திற்குள் நுழையவில்லை. சில நேரங்களில், நான் இதனைக் குறித்து கவலை அடைந்தேன். சில நேரம் அதைப் பற்றி யோசிப்பதை விட்டு விட்டேன். எனது அப்பா இறந்ததும், மரணத்திற்குப் பிறகு வாழ்வு இருக்கின்றதா என்றும் ஒரு மனிதன் எதன் அடிப்படையில் பரலோகம் அடைய முடியும் என்றும் நான் நினைத்துப் பார்க்க வேண்டிய நிலை உண்டானது. இதனால் இயேசுவின் மீது மீண்டும் ஆர்வம் கொண்டேன். ஆனால் இந்த முறை நான் பாவத்தில் வாழ்ந்து கொண்டிருந்தேன். அதனை விட்டு எப்படி வெளியே வர முடியும் என்று அறியாதிருந்தேன்.*

*சில ஆண்டுகளுக்குப் பின்பு, நான் பெயரளவில் ஆலயத்திற்குச் செல்லும் ஒருவரைத் திருமணம் செய்தேன். எங்களது திருமணம் ஆரம்பத்தில் இருந்து மோசமாகவே இருந்தது. ஆனால் அதன் மூலமாக என்னை மீண்டுமாய் இயேசுவிடம் இழுப்பதற்கு கர்த்தர் பயன்படுத்தினார். வேதாகமத்தினைத் தியானிப்பதைப் பற்றி, ஜெபிப்பதைப் பற்றித் தீவிரமாய் சிந்திக்க ஆரம்பித்தேன். பிரச்சனையான நேரத்தில் எனது திருமண வாழ்வில் ஆசீர்வாதம் பெற நான் ஜெப ஊழியத்திற்குச் சென்றேன். அங்கு தான் என்னைக் கடந்த காலங்களில் காயப்படுத்திய மக்களை (எனது பெற்றோர், எனது ஆசிரியர்கள், எனது கணவர்) மன்னிக்க வேண்டும் என்றும், எனது குறிப்பிட்ட பாவங்களைக் குறித்து*

*மனம் திரும்ப வேண்டும் என்றும் கர்த்தர் விரும்புகின்றார் என்பதை உணர்ந்தேன்.*

*அதன் பின்பு கொஞ்ச நாளில், மனம் திரும்புவது குறித்தும், மன்னிப்பைக் குறித்தும் நான் அதிகமாகக் கற்றுக் கொண்டேன். அதனை எனது வாழ்வில் செயல்படுத்தினேன். நான் கற்றுக் கொண்ட ஒவ்வொரு காரியமும் எனது வாழ்வில் பெரிய விடுதலையைக் கொடுத்தது. நான் வித்தியாசமாக உணர்ந்தேன் பிரகாசமாக மீண்டுமாய் இயேசுவானவரைக் குறித்தும், பரிசுத்த ஆவியானவர் குறித்தும் நான் விருப்பம் பெற்றேன். பல ஆண்டுகளுக்குப் பின்பு, எனது தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்திற்குப் பின்பு, எனது கணவரும் மீண்டும் பிறந்த அனுபவம் பெற்றார். அதன் பிறகு அவரும் பரிசுத்த ஆவியினாலும், தண்ணீரினாலும் ஞானஸ்நானம் பெற்றார். இப்போது அவரும் ஜெப ஊழியத்திலும், உள்ளார்ந்த சுகப்படுதலிலும், விடுதலையிலும் விருப்பமுள்ளவராய் இருக்கின்றார். ஊழியத்தினைத் தேடி, ஜெப ஊழியர்களால் சீஷத்துவப்படுத்தப்பட்டு, அனேக புத்தகங்களை வாசித்தோம். அதன் பிறகு மிக விரைவில் நாங்கள் முழு நேர ஊழியத்திற்கு என்று அழைக்கப்பட்டோம். சூழ்நிலைகள் மாறினதால் நாங்கள் மிகவும் மகிழ்ந்தோம். பெருமை எங்களுக்குள் வந்தது. நாங்கள் எங்களது நண்பர்களை விட்டு விட்டு, வீட்டினை விற்று, நாங்கள் சிறப்பாக செயல்படுகின்றோம் என்று நினைத்தோம். ஆனால், காரியங்கள் நாங்கள் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை என்பதினால் நாங்கள் மனம் சோர்ந்து போனோம். எங்களது பெருமை, மன்னிக்கமுடியாததன்மை, இன்னும் மற்ற சில பாவமான எண்ணங்கள் வெளிப்பட்டன. இந்தக் குறைகளைச் சீர்படுத்த நாங்கள் எங்களை சுட்டு எரிக்கும் அக்கினியின் நடுவே செல்ல வேண்டியிருந்தது. என்றாலும், சில மாதங்களில் எங்களது பொறுப்புகளில் இருந்து நீக்கப்பட்டோம். இதன் பின்னர் எந்த ஒரு வேலை அல்லது ஊழியமும் இல்லாமல் இருந்தோம். ஆனால் இணைந்து ஆண்டவரைத் தேடி, நாங்கள் என்ன செய்ய விரும்புகின்றார் என்று அறியும் விருப்பம் எங்களில் இருந்தது. கர்த்தரைக் கேட்பதையும், ஊழியத்தில் ஈடுபடுவதையும் எது தடை செய்கின்றது என்று எங்களால் அறிய முடியவில்லை. ஆகவே எங்களது நாட்களை வேத தியானத்திலும், ஜெபத்திலும்*

செலவழித்தோம். எங்களிடம் சில ஜெப கையேடுகள் இருந்தன. அவைகளைப் பயன்படுத்தி நாங்கள் நினைவுகூரமுடிந்ததை எல்லாம் நினைத்து ஜெபித்தோம்[1]. எங்களில் ஒருவர் ஜெபிக்கையில், மற்றவர் கவனித்தார். அப்படி கவனிக்கின்றவரும், (பரிசுத்த ஆவியானவரின் துணையுடன்) தங்களது வாழ்வில் உள்ள ஜெபத்தில் ஒப்புக்கொடுக்கப்பட வேண்டிய அதிகமான காரியங்களை நினைவு கூர்ந்தார். இப்படி வாரங்கள் கடந்தன. இறுதியாக, நாங்கள் நிறைவு செய்தோம். இனி ஜெபிக்கப்படவேண்டிய காரியம் குறித்து எங்களால் நினைவுகூர முடியவில்லை. எங்களைக் கட்டி இருக்கும் எந்த ஒரு காரியத்திலிருந்தும் விடுவிக்கக் கர்த்தரிடம் வேண்டி அழுதோம். “இப்போது நான் உங்களைப் பயன்படுத்த முடியும்” என்று அவர் கூறுவதைத் தெளிவாகக் கேட்க முடிந்தது. “வந்து களிகூருங்கள்!” என்னும் மறந்து போன ஒரு பாடல் எங்கள் செவிகளில் தொனித்தது. மிக விரைவில், கர்த்தர் எங்களது அழைப்பைப் பற்றிப் பேசினார். அந்த அழைப்பில் எங்களை நிறுத்தினார்.

இந்தக் கையேடானது நாங்கள் பயன்படுத்திய ஊழிய ஜெபங்களை ஆதாரமாக வைத்து எழுதப்பட்டு உள்ளது. வாசிக்கின்றவர்கள் புரிந்துக்கொள்ள வசதியாக, பின்னர் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட்டு, ஜெபிக்க வசதியாக, ஜெபத்தின் வேதாகம அடிப்படையை விவரமாக எழுதி இருக்கின்றோம்.

விசுவாசிகள், "தங்களைப் பின்னே இழுக்கும் எதனையும் தூர எறிந்து விட்டு" சபையின் வேலையை விடுதலையுடன் செய்வதற்கு இந்த கையேடை ஒரு கருவியாகக் கர்த்தர் பயன்படுத்துவார் என்பது எங்கள் நம்பிக்கை. இது கர்த்தர் எங்களை விடுவிக்கப் பயன்படுத்திய கருவி. இதனை அச்சிடுபவர்களையும், மொழிபெயர்ப்பவர்களையும், மறுஆய்வு செய்பவர்களையும் விடுவிக்கக் கர்த்தர் இதனைப் பயன்படுத்தி உள்ளார். நீங்கள் விரும்பினால் கர்த்தர் உங்களையும் விடுவிக்க இதனைப் பயன்படுத்துவார். ‘வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்வை’ வாழுங்கள்!

---

1. பென்னண்ட் ஜோன்ஸ்: ‘பேசிக் மினிஸ்ற்றி ப்ரேயர்’, 1996 (வெளியிடப்படாதது), எல்லெல் ஊழியங்களின் கில்ண்ட்லி மனோர் டைரக்டராக இருந்தபோது எடுக்கப்பட்ட தனிப்பட்ட குறிப்புகள், ஹிரி. அனுமதிபெற்றது.

# முன்னுரை


## *வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்வு*

கர்த்தரானவர் பரலோகத்தின் கீழே இருக்கின்ற அனைத்து ஆவிக்குரிய வரங்களையும் விசுவாசிகளாகிய நம் அனைவருக்கும் தருகின்றார். **(எபேசியர் 1:3).** நாம் 'பூரணமான வாழ்வு' வாழ வேண்டும் என்பதே கர்த்தருடைய விருப்பம். **(யோவான் 10:10 பின் பாகம்)** அவர் செய்ததை விட நாம் பெரிதானவைகளைச் செய்வோம் என்று இயேசுவானவர் கூறினார். **(யோவான் 14:12-14).** விசுவாசியின் வாழ்வு எப்போதும் எளிதாக இருக்காது. நாம் விரும்புவது போல் எல்லாம் நடந்துவிடாது. ஆனால் மிகக் கஷ்டமான நேரத்தில் கூட நாம் மனதிலே சமாதானத்தையும், சரியான பதிலையும் கொண்டு இருக்க வேண்டும். இதுவே வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்வு. நாம் நமது வாழ்வின் எல்லா இடங்களிலும் வெற்றியுடன் வாழவில்லை என்றால், கர்த்தர் நமக்குத் தந்ததை சாத்தானானவன் இன்னும் கொன்று, திருடி, அழித்துக்கொண்டிருக்கின்றான் என்று அர்த்தம். **(யோவான் 10:10 முன்பாகம்)** இது கர்த்தர் நமக்காக விரும்புவது அல்ல.

> உள்ளார்ந்த சுகம் தனிப்பட்ட, தேசிய மற்றும் உலகளாவிய எழுப்புதலுக்கு மிகவும் முக்கியம்.
> (ராபர்ட் ஃபெட்வெய்ட், எலியா ஹௌஸ், 2014)

'வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்வு' என்பதின் நோக்கம் ஜெபங்கள் மற்றும் போதனைகளின் மூலமாக நம்மை இயேசுவிற்குச் சமீபமாய் வருவதற்கு உதவி செய்து, பரிசுத்த ஆவியினால் வலுப்படுத்தி, இயேசுவானவர் செய்த அற்புதங்களைச் செய்வதே ஆகும். **(லூக்கா 24:46-49; அப்போஸ்தலர் 3:19-20, 4:29 பின்பாகம் 30; எபேசியர் 4:11-16, பிலிப்பியர் 3:10-11).** இந்த வகையான ஊழியம் 'உள்ளார்ந்த சுகப்படுத்தல்' என்று அழைக்கப்படும். காரணம் இது நமது இதயத்தில் உள்ள காயங்களை சுகப்படுத்த பயன்படுகின்றது. இது சரீர சுகத்தையும் உண்டாக்கி, பிசாசின் ஆளுகையில் இருந்தும் விடுவிக்கலாம். சிலர் இதனை 'ஆவிக்குரிய ஆலோசனை', 'ஜெப ஊழியம்', 'இதயத்தின் சுவிசேஷ ஊழியம்' (தூய்மைப்படுத்துதல்) என்றும் கூறுவது உண்டு. (பின் இணைப்பில் சரீர சுகம் பற்றிய ஒரு பகுதி உள்ளது)

மத்தேயு 12:33 இல் இயேசுவானவர் பரிசேயர்களுடன் பேசும்போது, "மரம் நல்லதென்றால், அதின் கனியும் நல்லதென்று சொல்லுங்கள்; மரம் கெட்டதென்றால், அதின் கனியும்



கெட்டதென்று சொல்லுங்கள்; மரமானது அதின் கனியினால் அறியப்படும்" என்றார். நாம் வெற்றி வாழ்வு வாழ்கின்றோமா இல்லையா என்பதை அறிய நமது வாழ்வின் 'கனிகளைப்' பார்க்க வேண்டும். அது கலாத்தியர் 5:22-23 போல் இல்லாமல், கலாத்தியர் 5:19-21 போன்று காணப்படும் என்றால், நாம் வெற்றிகரமான வாழ்வு வாழவில்லை, இன்னும் பாவத்திற்கே அடிமையாக இருக்கின்றோம் என்று அர்த்தம். **(யோவான் 8:34).** ஒரு விவசாய காட்சி ஒன்றைப் பயன்படுத்தலாம். மரத்தின் கனி நன்றாக இல்லை என்றால், அதன் வேர்களில் பிரச்சனை இருக்கலாம் புழுக்களால் பாதிக்கப்பட்டு இருக்கலாம் அல்லது சத்து குறைவினால் பாதிக்கப்பட்டு இருக்கலாம். **(லூக்கா 13:6-9).** வேர்கள் நன்றாக இருந்தால், கனியும் நன்றாகவே இருக்கும். நமது 'வேர்' கிறிஸ்துவில் ஆழமாக வேரூன்றி, நமது வாழ்வு அவரில் கட்டப்பட வேண்டுமென்று அப்போஸ்தலனாகிய பவுல் நம்மை உற்சாகப்படுத்துகின்றார். **(கொலோசெயர் 2:7).** இப்படிச் செய்வதினால், நமது வாழ்வில் நிரந்தரமான கனிகளை உண்டுபண்ண முடியும். **(யோவான் 15:16).**

ஆகவே, நமது வாழ்வில் கனிகள் நன்றாக இல்லை என்றால், நமது ஆவிக்குரிய வேர்களில் ஏதோ பிரச்சனை இருக்கலாம். உதாரணமாக, இன்னும் மனம் திரும்பியிராத பாவம் நமது வாழ்வில் இருக்கலாம். அல்லது மக்கள் தங்களைப் பல ஆண்டுகளுக்கு முன்பாகக் காயப்படுத்தியவர்களை உண்மையாக மன்னிக்காமல் இருந்திருக்கலாம். தங்களைக் காயப்படுத்திய அல்லது பாதித்த இந்த சம்பவம் பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது என்று சொல்லி மறந்திருக்கலாம். இது மன்னிப்பு அல்ல. இது மறதி. மன்னிப்பு என்பது நாம் விரும்பி செய்வது, நாம் மன்னிக்க விரும்பி மன்னிக்கின்றோம் காரணம், '...கர்த்தர் நம்மை மன்னித்தார்...' **(கொலோசெயர் 3:13).**

நமது வாழ்வு நமது வாழ்வின் அனுபவங்களால் உருவாக்கப்படுகின்றது. தாயின் கருவறையில் கூட நமது அனுபவம்

இப்படித்தான். ***(சங்கீதம் 139:13-16; ஏசாயா 49:1).*** நாம் வளர வளர இந்த அனுபவங்களின் மூலமாக கற்றுக்கொண்டு பதில் கொடுக்கின்றோம். நமது குழந்தைப்பருவத்தில் திடகாத்திரமான மனித வளர்ச்சி பற்றி அறிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால்:

- மக்களையும், கர்த்தரையும் நம்புவது எப்படி என்று[2] ***(சங்கீதம் 22:9);***
- நமது விருப்பங்கள் மற்றும் உணர்வுகளை தெய்வீக வழியில் எப்படி கையாளுவது என்று ***(எபேசியர் 4:23, 6:4);***
- கர்த்தரில் நாம் யார் என்றும், அவரில் நம்பிக்கையாக இருப்பது எப்படி என்றும் ***(உபாகமம் 6:49; பிலிப்பியர் 4:13);***
- நமக்கான கர்த்தருடைய வழி நடத்துதலை பகுத்தறிவது ***(எரேமியா 29:11; யோவான் 10:27).***

நமது கடந்த கால வாழ்வில் நமக்கு உண்டான காயங்களுக்கு நாம் கொடுத்த தெய்வீகமற்ற பதில் நிமித்தமாக நாம் கர்த்தர் விரும்புகின்றபடி வாழ முடியவில்லை. உதாரணமாக, நாம் குழந்தையாக இருந்த போது கோபத்தை எப்படி தெய்வீக முறையில் கையாள வேண்டும் என்று கற்றுக்கொள்ளாததினால், ***(எபேசியர் 4:26-27),*** நாம் பெரியவர்கள் ஆன பிரகும் குழந்தைகள் போன்று நடந்து கொண்டு, உறவுகளைப் பாதிக்கும் வண்ணமாக அதிகமான அளவில் கோபப்படுவோம். நமது பின்னான வாழ்வில் உண்டாகும் பல பிரச்சனையானது குழந்தைப்பருவத்தில் நமது நடந்தவைகளுக்குச் சரியாக பதில் கொடுக்காததினால் மட்டுமே நேரிட்டது. கர்த்தரே மீட்பர். அவர் மட்டுமே நமது பாதிக்கப்பட்ட வாழ்வை மீட்க முடியும்!

இந்தப் போதனையானது நம்முடைய வாழ்வில் கெட்ட கனிகளையும், அதன் அடிப்படைக் காரணங்களையும் அடையாளம் காண்பது பற்றியது. இப்படிச் செய்வதினால் அந்த அடிப்படைக் காரணத்தினை இயேசுவின் இரத்தத்தின் மூலமாக சரிப்படுத்தி, மனம்திரும்புதலின் ஈவின் மூலமாகவும், அவர் நமக்குத் தரும் மன்னிப்பின் மூலமாகவும் இன்னும் விடுதலையாக்கப்படமுடியும்.


> விடுதலை என்பது நாம் என்ன செய்ய விரும்புகின்றோமோ அதனை செய்வதற்கான உரிமை அல்ல, ஆனால் அது கர்த்தர் விரும்புவதைச் செய்வதற்கான வல்லமை.

சில நேரங்களில் ஒரே பாவத்தில் கிறிஸ்தவர்கள் மீண்டும் மீண்டும் விழுவதுண்டு. விடுதலை பெறக்

2. ஜான் மற்றும் பவுல சண்ட்ஃபோர்ட்; 'ரிஸ்டோரிங்க் த கிரிஸ்டியன் ஃபேமிலி', 2009, கரிஸ்மா ஹௌஸ்

கடினமாக முயன்றாலும், இன்னும் சிக்குண்டே காணப்படுவார்கள். இத்தகைய சூழ்நிலைகளில் அவர்கள் கிறிஸ்தவ சகோதரர்கள், சகோதரிகளின் உதவியின் மூலமாக நன்மை பெற முடியும். **(கலாத்தியர் 6:1).**

'சாதாரணமான', மறுபடியும் பிறந்த அனுபவம் உடைய சபை அங்கத்தினர் களுக்கு மற்ற சாதாரணமான மக்கள் இயேசுவுடன் நடப்பதற்கு உதவி செய்து, (சீர்படுத்தி), சபையைக் கட்டி எழுப்புவதில் முக்கியமான பொறுப்பு உண்டு. **(எபேசியர் 4:12).** இந்த 'சாதாரண மக்களின்' பங்கு என்பது யோசுவாவைச் சுற்றிலும் நின்ற மனிதர்களைப் போன்றவர்களாகக் காண முடியும். **(சகரியா 3:4).** ஆண்டவர் அவரைப் பரிசுத்தப் படுத்திய போது அவரது அழுக்கான வஸ்திரங்களைக் கழற்றும்படியாகக் கட்டளைப் பெற்றார்கள். அவர்கள் லாசரு உயிருடன் எழும்பியபோது சுற்றிலும் நின்று பார்த்த சாதாரண மக்களைப் போன்றவர்கள். **(யோவான் 11:43-44).** கர்த்தரால் தரப்பட்ட ஒரு பூரணமான வாழ்வினை அனுபவித்து மகிழும் படியாக, லாசருவின் கல்லறை ஆடை களைக் கழற்றிப் போட இயேசுவானவர் கூறிய கட்டளைகளைப் பின்பற்றினார்கள்.



சில நேரங்களில் நம்மிடம் மீண்டும் மீண்டுமாய் உண்டாகும் பாவங்கள் நமக்குள்ளே உண்டாவதில்லை. அது முந்தின தலைமுறையில் இருந்து நம் மீது வந்ததாக இருக்கும். நமது முன்னோர்களைக் குறித்து அறிக்கை செய்து மன்னிப்பதின் மூலமாக,[3] **(நெகெமியா 9:2).** நம் மீதும் நமது குடும்பங்களின் மீதும் உள்ள பாவத்தின் அதிகாரம் தடுக்கப்படும். கர்த்தர் கொடுக்கும் குடும்ப ஆசீர்வதங்களை நாம் இன்னும் அதிகமாக அனுபவிக்க முடியும். அப்படியே, குற்றச்சாட்டுகள், தெய்வீகமற்ற உறவுகள், எதிர்மறையான வார்த்தைகள், அல்லது பண விஷயங்கள் போன்றவை கிறிஸ்துவில் நமக்குக் கிடைக்ககூடிய பூரணத்தைப் பெறுவதில் இருந்து நம்மைத் தடுக்க முடியும். இது பின்வரும் அத்தியாயங்களில் விரிவாக விளக்கப்பட்டு உள்ளது.

3. நாம் நமது முன்னோர்களின் பாவத்தை அறிக்கை செய்யலாம். ஆனால் அவர்கள் சார்பாக நாம் மனம்திரும்ப முடியாது.

இதனைத் தொகுத்தவர்கள் இந்த ஜெபங்கள் அனைத்தையும் பயன்படுத்தி இருக்கின்றனர். கர்த்தர் அற்புதமான வழிகளில் பதில் தந்து உள்ளார். அதில் இருந்து, அவர்கள் இந்த ஜெப செய்தியை பல்வேறு கலாச்சாரத்தைச் சார்ந்த மக்களுடன் பகிர்ந்து, பயன்படுத்தி, கல்வி அறிவு உள்ளவர்களுக்கும், கல்வி அறிவு இல்லாதவர்களுக்கும் இதனை கற்றுக் கொடுத்துள்ளனர். உண்மையாகவே கர்த்தரிடம் நெருங்கிச் சேர விரும்பும் மக்களுக்கு உதவி செய்யும்படியாக இந்த சாதாரண மக்களை கர்த்தர் எப்படி அற்புதமாய் பயன்படுத்துகின்றார் என்பதைக் கண்டு வியந்துள்ளனர். நீங்கள் இதனை வாசிக்கையில் உங்களுக்கு தனிப்பட்ட விதமாயும், மற்றவர்களுக்கு உதவி செய்ய உதவும் வண்ணமாகவும் இதில் சிலவற்றைக் கண்டுபிடிப்பீர்கள் என்பதே அவர்களின் நம்பிக்கையும் ஜெபமுமாக இருக்கின்றது. எல்லாரும் எல்லா இடங்களிலும் வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்வு வாழ வேண்டும் என்பதே அவர்களது ஆசை.

## பாவமும் சுத்திகரிப்பும்

கர்த்தர் பரிசுத்தர். அப்படி என்றால் அவரில் பாவம் இல்லை என்று அர்த்தம். கர்த்தர் சுத்திகரிக்கப்பட்டவர் அல்லது எல்லாரிடமும், எல்லாவற்றிடம் இருந்தும் பிரிக்கப்பட்டவர். அவர் பரலோக மகிமை நிறைந்தவர். அவரது சமூகத்தில் பாவம் இருக்க முடியாது. அவரது பிரசன்னத்தில் வருவதற்கு நாம் பரிசுத்தமடைய வேண்டும். இது நம்மால் ஆகின்ற காரியம் அல்ல ஆனால் கர்த்தரால் ஆகும். நாம் ‘மறுபடியும் பிறந்து’ கிறிஸ்து இயேசுவில் ‘புதிய படைப்பாக’ மாறும் போது, கர்த்தர் இதனை நமக்காகச் செய்கின்றார். எனினும், அத்தனை கிறிஸ்தவர்களும் 'இரட்சிக்கப்பட்டு இருந்தும்' பாவத்தைத் தொடர்ந்து செய்கின்றனர். இன்னும் சிலர் கடந்த காலத்தின் பாவங்களினால் பாதிக்கப்படுகின்றனர்.

வேதாகமத்தில் உள்ள அத்தனை ‘நிருபங்களும்’ விசுவாசிகளுக்கு என்றே எழுதப்பட்டு இருக்கின்றது. விசுவாசிகள் தங்கள் பாவத்தினை விட்டு விட வேண்டும் என்று அடிக்கடி சொல்லப்படுகின்றனர்.

> வேதாகமம் என்பது மனிதன் எவ்வாறு பாவத்தில் முழுவதுமாக சீரழிந்தான் என்பதையும், கர்த்தர் இயேசு கிறிஸ்துவில் அதனை எப்படிச் சீர்ப்படுத்தினார் என்பதையும் சொல்லும் ஒரு பதிவு.
>
> (சார்லஸ் ஹெச் ஸ்பர்ஜன்)

காரணம் அது விசுவாசிகளுக்கு இடையே பிளவு உண்டாக்கி, அவிசுவாசிகள் இயேசுவை விட்டுத் தூரமாக நிற்கும்படி செய்கின்றது. இது இன்றும் நடக்கின்றது. கர்த்தருடைய குணாதிசயத் தினைப் பெறும்படியாக நம்முடைய பாவத்தினை நம்மை விட்டு விலக்குவது (சுத்திகரிப்பது) பூமியில் நம்முடைய வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து நடக்கின்றது. இப்படி நாம் உண்டாக்கும் கர்த்தரின் குணாதிசயம் அல்லது கனியே நித்தியம் வரை செல்லுபடி ஆகும். ***(மத்தேயு 7:17-23; 2 கொரிந்தியர் 5:10; கலாத்தியர் 5:19-26; வெளிப்படுத்தல் 22:14-15).***

*"ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள். நாய்களும், சூனியக்காரரும், விபசாரக்காரரும், கொலைபாதகரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள். சபைகளில் இவைகளை உங்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்படிக்கு இயேசுவாகிய நான் என் தூதனை அனுப்பினேன்...."* ***வெளிப்படுத்தல் 22:14, 15-16 முன் பாகம்)***

> வேதாகமம் உங்களை பாவத்தினை விட்டுத் தூரப்படுத்தும் அல்லது பாவம் உங்களை வேதாகமத்தினை விட்டுத் தூரப்படுத்தும்.
> (டி.எல். மூடி)

மனித இனம் ஆதாம் மற்றும் ஏவாளிடம் இருந்து அரம்பித்தது என்று வேதாகமம் பதிவு செய்துள்ளது. மனிதர்கள் கர்த்தருடன் ஐக்கியமாக இருக்கும்படியாகவே கர்த்தரால் படைக்கப்பட்டு உள்ளனர். பின்னர் ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தனர். முழு மனித இனமும் பாவிகளானார்கள். கர்த்தரை விட்டுப் பிரிக்கப்பட்டனர். ***(ஆதியாகமம் 3).*** ஒரே ஒரு கீழ்படியாமையின் செயலின் காரணமாய் (ஆதாம் மற்றும் ஏவாளின் பாவம்) நமது பரிசுத்தம் இழக்கப்பட்டது. அந்த நேரத்தில் தான் கர்த்தரானவர் சாத்தானிடம் வேதாகமத்தின் முதலாவது தீர்க்கதரிசன வார்த்தையைப் பேசினார். சாத்தானுடைய தலை ஸ்திரியின் வித்தினால் நசுக்கப்படும் என்ற வார்த்தையின் அடிப்படையில் தான் முழு வேதாகமும் உள்ளது. ***(ஆதியாகமம் 3:15).*** இது இயேசுவையும், அவரது வாழ்வையும், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல்: பாவம் மற்றும் மரணம் மீதான வெற்றி, மேலும் மனிதர்கள் மற்றும் கர்த்தர் இடையேயான மனம் பொருந்துதல் பற்றிப் பேசுகின்றது.

*நாம் நித்திய காலமாக கர்த்தரை விட்டு பிரிந்திருக்க கர்த்தர் விரும்ப வில்லை. ஆகவே நாம் அவருடன் மனம் இசைந்து காணப்பட ஒரு வழியை உண்டாக்கினார்: நமக்காக மரித்து, நமது பாவம் மற்றும் கீழ்படியாமைக்காக விலைக்கிரயம் கொடுக்கும்படியாகத் தனது ஒரே குமாரனை அனுப்பினார். இயேசுவானவர் தேவக்குமாரனாகப் பரலோகத்தில் அனுபவித்தவைகள் எல்லாவற்றையும் விட்டு விட்டு, பூமியிலே வாழும்படியாக ஒரு சாதாரண மனிதனாக மாறினார். அனைத்து விதங்களிலும் இயேசுவானவர் நம்மைப் போலவே காணப்பட்டு நாம் சந்திக்கும் அதே தூண்டுதல்களுக்கு உட்பட்டு இருந்தார். ஆனால் பாவம் செய்யவில்லை. **(எபிரெயர் 4:15, 7:26).** பிதாவாகிய தேவன் சொல்லவும் செய்யவும் விரும்பியதை மட்டுமே சொன்னார். செய்தார். இதுவே இயேவானவரின் வாழ்வை நம்முடைய வாழ்விற்கான சரியான உதாரணமாக மாற்றுகின்றது.*

*நம் ஒவ்வொருவருக்காகவும் இயேசுவானவர் சிலுவையில் ஒரு குற்றவாளியைப் போன்று மரித்தார். எல்லா காலத்திலும், நம்முடைய எல்லா பாவங்களுக்காகச் செலுத்தப்பட்ட சரியான பலி அவரே. அவர் ஒரு போதும் பாவம் செய்ததில்லை. ஆனால், நம்மைக் கர்த்தரிடம் சேர்க்கும்படியாகப் பாவிகளுக்காக மரித்தார். **(1 பேதுரு 3:18).** இயேசு நமக்காக மரித்தார் என்று நம்பி நம் பாவங்களை மீட்கும்படியாக அவரிடம் கேட்கும்போது நாம் கர்த்தருடன் நெருங்கிய உறவைப் பெறமுடியும். அதன் மூலம் வரும் அனைத்து நன்மைகளையும், கர்த்தருடன் நித்திய வாழ்வினையும் அனுபவிக்க முடியும். இதன் காரணமாய் நம்மில் கர்த்தர் மீதும், விசுவாசிகள் மீதும் ஒரு 'மாறிய இதயம்' மற்றும் எண்ணமும் உண்டாகும். நம்முடைய வாழ்வில் உள்ளார்ந்த மற்றும் வெளியரங்கமான மாற்றங்கள் உண்டாகும். இதனைத்தான் வேதாகமம் '**மீண்டும் பிறப்பது**' என்று அழைக்கின்றது. **(யோவான் 3:3).***

*நாம் நம்மையே பரிசுத்தமாக்க முடியாது; அது கர்த்தருடைய கிருபையின் செயல். ஆனால் நாம் மறுபடியும் பிறந்த போது நாம் புது படைப்பாகின்றோம்; பழைய பழக்கங்கள் ஒழிந்து போனது. நாம் மீண்டும் புதிதாக ஆரம்பிக்கின்றோம். இயேசுவை நமது ஆண்டவரும் இரட்சகருமாக நாம் ஏற்றுக்கொள்ளும் போது நமது சில பழக்கங்கள் மற்றும் நோக்கங்கள் உடனடியாக மாறுகின்றது: நாம் பாவத்திற்கு மரித்து, கிறிஸ்துவில் உயிரடைகின்றோம்! எனினும், நமது பழைய சுபாவங்கள் அப்படியே மறைந்து போவதில்லை என்று அனுபவம் நமக்குக் கூறுகின்றது. நாம்*

கிறிஸ்தவர்களாக முதிர்வடையும் போது, ஒவ்வொரு வழியிலும் நாம் இயேசுவைப் போன்று மாற வேண்டும். இதனை ஒரு யுத்தக்களம் என்று பவுல் குறிப்பிடுகின்றார். ***(ரோமர் 7:14-25).*** இத்தகைய யுத்தக்களங்களை வெல்லுவதற்கான பதில் எப்போதும் இயேசு கிறிஸ்துவிடம் உள்ளது. நாம் அவரது உதவிக்காக எப்போதும் கேட்டாக வேண்டும். நமது சிறப்பான முயற்சிகளும், நன்றாக இருப்பதற்கான விடாமுயற்சியும் இயேசுவானவர் நமக்காகப் பெற்ற வெற்றியை நமக்குத் தர மாட்டாது. நம்மை இயேசுவானர் போன்று மாறுவதற்கு பரிசுத்த ஆவியானவரின் உதவியைத் தேட வேண்டும் என்று அனேக வேத வார்த்தைகள் நம்மை வலியுறுத்துகின்றன.

*''மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.''* ***(ரோமர் 8:13-14).***

*"நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்."* ***(கொலோசெயர் 3:1).***

*"தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே.''* ***(கொலோசெயர் 3:10).***

ஆவிக்குரிய முதிர்ச்சி உண்டாக நாம் சுயத்திற்குச் சாக வேண்டும். நாம் நமது பெருமை, சுயதிருப்தி, சுய சார்பு, கர்த்தருக்குக் கீழ்ப்படியாமை போன்றவைகளை, அவர் நம்மை மன்னித்து, மாற்றும்படியாக விட்டுவிட வேண்டும். நமது வாழ்வில் 'சுயம்' என்பது 'கிறிஸ்து' என்று மாற வேண்டும். நம்மில் தொடர்ந்து தவறுகள் காணப்படலாம். ஆனால், வெற்றிகரமான கிறிஸ்தவர்கள் இயேசுவைப் போன்று இருக்கவும், அவரை நெருக்கமாக அறிந்து கொள்ளவும் ஆழமான ஆசை உடையவர்களாய் இருப்பார்கள்.



நாம் சில வழிகளில் ஸ்பாஞ் போன்றவர்கள். நம்மை சுற்றிலும் உள்ள நிலையை உறிஞ்சுகிறோம். யாருடன் நேரம் செலவிடுகின்றோமோ அப்படியே மாறுகின்றோம். கர்த்தருடைய

*பிரசன்னத்தில் நாம் அதிகமாக நேரத்தைச் செலவிடும் போது, (ஜெபத்தினாலும், வேத வாசிப்பினாலும்), நமது இதயத்தை மாற்ற இயேசுவையும் பரிசுத்த ஆவியானவரையும் அதிகமாக அனுமதிக்கின்றோம், அப்படிச் செய்வதினால், நாம் இன்னும் இயேசு போன்று மாறுகின்றோம். பின்னர் சோதனைகள் மற்றும் பாடுகளினால் நாம் மிகவும் நெருக்கப்படும்போது, நாம் காண்பிக்கும் குணங்கள் பரிசுத்த ஆவியின் கனிகளான: அன்பு, சந்தோசம், சமாதானம், நீடிய பொறுமை, சாந்தம், தயவு, விசுவாசம், இச்சை அடக்கம் போன்றவைகளாக இருக்கும்.* ***(கலாத்தியர் 5:22 –23).*** *இதற்கு மாறாக நாம் உலகத் தேடல்களில் மற்றும் சுகங்களில் நேரத்தினை செலவிடுவோம் என்றால், நமது பழக்கம் அப்படியே மாறி விடும். நம்மில் உள்ள பரிசுத்த ஆவியானவரை இழந்து விடுவோம்.*

*நமக்கு உதவி செய்ய பரிசுத்த ஆவியானவர் எப்போதும் ஆயத்தமாக இருக்கின்றார். ஆனால் நாம் அவரைத் தேர்ந்தெடுக்கும்படியான சுதந்திரமான என்ணத்தினைத் தந்துள்ளார். நாம் அவரைக் கேட்டு, அவரது நடத்துதலைப் பின்பற்றினால் மட்டுமே அவரது உதவியைப் பெறுவோம்.* ***(கலாத்தியர் 5:16–17).***

*இயேசு என்றால் "யெகோவா எனது இரட்சிப்பு" என்று அர்த்தம். நாம் "இயேசுவின் நாமத்தில்" ஜெபிக்கும்போது இரட்சிக்கின்ற, சுகப்படுத்துகின்ற மற்றும் விடுதலைக் கொடுக்கின்ற கர்த்தர் அவரே என்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஜெபத்தை அவரது ஜெபமாக மாற்றி அவருடைய வல்லமையையும், விசுவாசத்தையும் அவரது குணாதிசயத்தையும் வேண்டுகிறோம். அவர் ஏற்றுக்கொள்ளாத ஜெபத்தில் அவருடைய பெயரை நாம் பயன்படுத்த முடியாது.*

நம் மீதான இயேசு கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தினை அறிக்கை செய்து இந்த ஜெபத்தினை சத்தமாகக் கூறலாம்:

**கர்த்தருடைய ஆளுகையைப் பெற ஜெபம்**



ஆண்டவராகிய இயேசுவே, நீர் எனக்குத் தேவை என்று சொல்லுகின்றேன். உம்மை எனது ஆண்டவராக, இரட்சகராக, விடுவிப்பவராக நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

எனது முழு வாழ்க்கைக்கும் ஆண்டவராக உம்மை வரவேற்கின்றேன்...

எனது ஆவி மற்றும் ஆராதனையின் ஆண்டவராக,
எனது மனம், நோக்கம், மற்றும் சிந்தனையின் ஆண்டவராக,
எனது அனைத்து உணர்வுகள் மற்றும் உணர்ச்சிகளின் ஆண்டவராக,
எனது சித்தம் மற்றும் முடிவுகளின் ஆண்டவராக,
எனது சரீரம் மற்றும் சரீர சுகத்தின் ஆண்டவராக,
எனது மரண நேரம் மற்றும் அதன் முறைமையின் ஆண்டவராக,
எனது பாலியியல் எண்ணம் மற்றும் அதன் உணர்ச்சியின் ஆண்டவராக,
எனது குடும்பம் மற்றும் உறவுகளின் ஆண்டவராக,
எனது வேலை மற்றும் உமக்கான பணியின் ஆண்டவராக,
எனது பொருள் ஆசீர்வாதம் மற்றும் தேவைகளின் ஆண்டவராக,

எனது பணத்தின் ஆண்டவராக, வரவேற்கின்றேன்.

நான் விடுதலை அடையும்படி எனக்காக சிந்தின உமது இரத்தத்திற்காக நன்றி. இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# மனம்திரும்புதல்



*"காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார்."* ***(மாற்கு 1:15*** *இல் இயேசுவின் வார்த்தைகள்)*

இதுவே இயேசுவானவர் தனது ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் அறிவித்த முக்கியமான சத்தியம். இது வெற்றிகரமான ஒரு கிறிஸ்தவ வாழ்வு வாழுவதற்கு மிகவும் முக்கியமானது. இயேசுவானவருடைய போதனையில் இதுவும் முக்கியமானது. உண்மையில் மனம்திரும்புவது நமக்கு மிகவும் முக்கியம் ஏனெனில் பூமியில் தான் ஊழியம் செய்த செய்தபோதெல்லாம் இயேசுவானவர் இதைப் பற்றியே பேசினார். **(மத்தேயு 4:17; மாற்கு:1:15; லூக்கா 15, 24:47).** மேலும் அவர் பரலோகிற்கு எறிய பின்பு இதனைப் பற்றிப் பேசினார். **(வெளிப்படுத்தல் 2:5, 2:22; 3:3).** இந்த வேதப்பகுதிகளில் மனம் திரும்புவதில் அவசியத்தைப் பற்றி விசுவாசிகளிடமே பேசுகின்றார்.

அப்போஸ்தலனாகிய பவுலும் தனது பிரங்கம் மற்றும் போதனை ஊழியத்தின் மனம் திரும்ப வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றார். உதாரணமாக அப்போஸ்தலர் 26:20 மற்றும் 2 கொரிந்தியர் 7:8-10. ரோமர் 2:4-ல் பாவத்தை விட்டு நாம் திரும்பும்படியாக கர்த்தருடைய தயவு ஏவுகின்றது என்று அவர் கூறுகின்றார். அப்போஸ்தலனாகிய பேதுருவும் நாம் மனம்திரும்ப

**சாட்சி**
**இயேவுடனான எனது முதலாவது உண்மையான அனுபவம்**

*" நான் இரட்சிப்பின் நிச்சயம் இல்லாத ஒரு இளைஞனாக இருந்தேன். 'விசுவாசம்' மூலமாக இரட்சிக்கப்பட்டு இருக்கின்றேன் என்று நினைக்க முயற்சி செய்தேன். என்னை வெகுவாகத் தொந்தரவு செய்த காரியங்களைக் குறித்து நான் மனம் திரும்பியவுடன், உடனடியாக சமாதானத்தினை உணர்ந்தேன். 'நான் உன்னை விட்டு விலகுவது மில்லை உன்னைக் கைவிடுவது மில்லை' என்று கர்த்தர் கூறியதைக் கேட்டு என்னால் உணர முடிந்தது"*

வேண்டுமென்று கர்த்தர் விரும்புகின்றார் என்று கூறுகின்றார். ***(அப்போஸ்தலர் 2:38, 2 பேதுரு 3:9).***

மனம்திரும்புவது அடிக்கடி தவறாக புரிந்து கொள்ளப் படுகிறது. சில மக்கள் அதனைப் பற்றிப் பேசுவது பாவத்தின் மீது நோக்கமாயிருக்கச் செய்கின்றது என்று கூறுகின்றனர். எனினும் நாம் ***(உண்மையாக)*** மனம்திரும்பும்போது பாவத்தின் என்னமும் குற்றவுணர்வும் நம்மை விட்டு அகன்று விடும்.

மனம்திரும்புதல் கர்த்தரிடம் இருந்து வரும் ஆசீர்வாதம். மனம்திரும்புதலினால் நித்திய வாழ்வு, மன்னிப்பு, சந்தோஷம், சமாதானம் உண்டாகுகின்றது. நாமும் கர்த்தருடைய உறவில் வருகின்றோம். இதுவே அவரது கிருபை.

## மனம்திரும்புவது

மனந்திரும்பவது என்றால் நமது பாவத்தை வெறுத்து. அதை விட்டுத் திரும்பி, கர்த்தரிடமாய் விரும்பித் திரும்புவது ஆகும். அப்படி என்றால், நமது தவறான செய்கைகளையும், தவறான எண்ணத்தையும் விட்டுவிட விரும்பி கர்த்தரிடமாய்த் நெருங்கிச் சேருவது என்று அர்த்தம். அது ஒரு முடிவு. நாம் மனம் திரும்ப முயற்சி செய்யவில்லை என்றால் நாம் ***மனம் திரும்பாமல்*** இருக்கவே முடிவு செய்துள்ளோம்! மனம் திரும்புவது என்றால் துக்கப்படுவதோ அல்லது 'வருத்தம்' தெரிவிப்பதோ அல்ல. தவறு என்று நாம் தெரிந்த ஒன்றைச் செய்ததினால் குற்ற உணர்வும், வருத்தமும் நாம் உணரலாம். (யூதாஸ்காரியோத்தைப் போன்று மத்தேயு 27:3). துக்கமாகக் கூட நாம் இருக்கலாம். ஆனால் நாம் நமது தவறைக் கர்த்தரிடம் கூறி, அவர் நம்மை மன்னிக்கக் கேட்க வேண்டும். நாம் பாவம் செய்யும் போது நாம் கர்த்தரைத் துக்கப்படுத்து கின்றோம் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். நாம் இவைகளை மீண்டும் செய்யாதபடி மாறிவிட விரும்ப வேண்டும். இதற்கு கர்த்தருடைய உதவி மிகவும் அவசியம்.

> அநேக கிறிஸ்தவர்கள் தேவனுடைய இராஜியத்தில் நுழையும் அளவிற்கு மனம் திரும்புகின்றனர். ஆனால் தேவனுடைய இராஜியத்தின் வல்லமையை தங்களது வாழ்வில் அனுபவிக்கும் அளவிற்கு மனம் திரும்பவில்லை.
>
> (பில்ஜாண்சன், பெத்தேல் சர்ச், ரெட்டிங், கலிப்போர்னியா, USA).

மனம்திரும்புதல் என்பது ஒவ்வொரு கிறிஸ்தவனும் தங்களது வாழ்வில் ஒரு முறையாவது செய்திருக்க வேண்டிய ஒரு காரியம். பெரிதான வெற்றியைப் பெற, நாம் அடிக்கடி மனம்திரும்ப வேண்டும். அறிக்கை செய்யப்படாததும், மனம் வருந்தாதுமான பாவம் மக்களை ஒடுக்கும்படியாக சாத்தானுக்கு ஒரு 'வாய்ப்பை' உண்டு பண்ணுகின்றது. (**எபேசியர் 4:26-27**).

கர்த்தரானவர் நம்மில் உள்ள அனைத்து தவறுகளையும் காண முடியும்: *"அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்."* **(எபிரேயர் 4:13).** கர்த்தர் நாம் செய்த அனைத்து பாவங்களையும் அறிவார். இரகசியமான பாவங்களையும் கூட. சங்கீதக்காரன் சங்கீதம் 90:8 இல் இவ்வாறு கூறுகின்றார் *"எங்கள் அக்கிரமங்களை உமக்கு முன்பாகவும், எங்கள் அந்தரங்க பாவங்களை உமது முகத்தின் வெளிச்சத்திலும் நிறுத்தினீர்."* இது கர்த்தரானவர் தனது பதிவு புத்தகத் தினைத் திறந்து வைத்து, நாம் நமது பாவத்தில் இருந்து மனம்திரும்பி, மனிக்கப்படும்படியாக காத்திருப்பது போன்று உள்ளது. நாம் அப்படிச் செய்யும் போது, அவர் தனது பேனாவை எடுத்து இயேசுவின் இரத்தத்தில் தோய்த்து, நமது பாவத்தினை அழித்து விடுகின்றார்.

*"எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான். எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ, அவன் பாக்கியவான். எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள். எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான் என்று தாவீது சொல்லியிருக்கிறான்."* **(சங்கீதம் 32:1-2; ரோமர் 4:7-8).**

*"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்."* **(1 யோவான் 1:9).**

**1 யோவான் 1:9** என்னும் வேத பகுதியில் இருந்து நாம் அறிக்கை செய்த பாவங்களை மட்டுமே கர்த்தரானவர் மன்னிகின்றார் என்பது தெரிய வருகின்றது.

## விசுவாசிப்பது

நாம் மனம் திரும்புவதற்கு முன்பாக இயேசு யார் என்பதிலும், அவர் நமக்காக என்ன செய்தார் என்பதிலும் நமது விசுவாசம் காணப்பட வேண்டும்.

இந்த மூன்று சுவிசேஷ உண்மைகளை நாம் நம்ப வேண்டும் என்று இயேசுவானவர் நம்மைக் கேட்கின்றார்:

1. இயேசுவானவர் தேவகுமாரன், அபிஷேகிக்கப்பட்ட கிறிஸ்து அல்லது 'மேசியா'
2. இயேசு நமது பாவத்திற்காக மரித்தார்
3. மூன்றாம் நாளில் இயேசு மரித்தோரிலிருந்து உயிருடன் எழுப்பப்பட்டார்.

இந்த உண்மைகள் வேதாகமத்தின் பல பகுதிகளில் வருகின்றது. ஆனால் இவை அனைத்தும் 1 கொரிந்தியர் 15:1-6 மற்றும் 23 இல் இணைத்துத் தரப்பட்டு இருக்கின்றது. இந்த உண்மைகளுடன் சேர்த்து, உயிருடன் எழுந்த இயேசுவை சுமார் 500க்கும் அதிகமான சாட்சிகள் பார்த்து இருக்கின்றனர். இயேசு கிறிஸ்துவைச் சார்ந்த அனைவரும் அவர் வரும் நாளில் உயிருடன் எழுப்பப்படுவார்கள். இந்த உண்மைகளை நாம் நம்பினால், நமக்கு விசுவாசம் உண்டு. இயேசுவானவரே நமது பாவத்திற்காக மரித்தபடியினால், நமது குறிப்பிட்ட பாவங்களை நாம் அவரிடமே ஒப்புக்கொடுத்து அறிக்கை செய்து, நமது விசுவாசத்தினை செயல்படுத்துகின்றோம். நமது பாவத்தினை அறிந்து கொண்டு இதனைச் செய்கின்றோம். அதனை அறிக்கை செய்கின்றோம். மன்னிக்கும்படியாக இயேசுவைக் கேட்கின்றோம். அவரைப் போன்று நம்மை மாற்றும்படியாக அவரைக் கேட்கின்றோம்.

## நமது பாவங்களைத் தெரிந்து கொள்ளுதல்

மனம் திரும்புவதின் முதல்படி நமது பாவங்களைத் தெரிந்து கொள்வது. பாவம் என்பது கர்த்தர் நியமிக்கும் தரத்தில் இருந்து குறைந்து காணப்படுவது. நம்முடைய எண்ணங்களும், செயல்களும் இயேசுவுடன் இசைந்து ஒன்று போல் இருக்கவில்லை என்று நாம் உணரும் ஒவ்வொரு நேரமும் நாம் மனம்திரும்ப வேண்டும். வேதாகமம் பாவம் என்று கூறுவதை எப்போதும் சமூக கலாச்சார

பழக்க வழக்கங்கள் ஏற்றுக்கொள்வது இல்லை. இணைப்புப் பகுதியில் புதிய ஏற்பாடு கூறும் பாவங்களின் தொகுப்பு தரப்பட்டு உள்ளது. பிரச்சனையின் காரியங்கள் குறித்தான பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டின் குறிப்புகளும் தரப்பட்டு உள்ளது. யாத்திராகமம் 20 மற்றும், மனம்திரும்பும் அட்டவணையின் வேத பகுதியினைப் பார்த்து, பாவமான எண்ணங்களையும், செயல்களையும் கர்த்தர் காண்பிக்கக் கேட்கலாம்.

இதனைக் கூர்ந்து அறிவதற்கு ஒரு எளிதான வழி: இது ஒளியின் இராஜியத்தில் உருவாகின்றதா? அல்லது இருளின் இராஜியத்தில் உருவாகின்றதா? என்பதைத் தெரிந்துகொள்வதே.

நம்மில் அனேகர் மற்ற காரியங்களைக் கர்த்தர் முன்பாக வைக்கின்றோம். ***(1 யோவான் 5:21).*** நாம் மற்ற தெய்வங்களை வழிபடலாம். ஒரு குடும்ப உறுப்பினரையோ, விளையாட்டு வீரரையோ அல்லது போதகரையோ நாம் இயேசுவை விட உயர்த்தி விக்கிரகமாக்கலாம். இயேசுவை விட பணத்தையோ அல்லது பொருளையோ நேசிக்கலாம். நமது இதயத்தில் வேறு ஒருவரை இச்சித்து இருக்கலாம். அல்லது ஆபாசக் காட்சிகளைக் காணலாம். சமாதானத்தையும் சுகத்தையும், நல்ல வாழ்வையும் தரும்படியாக இயேசுவை கேட்பதற்குப் பதிலாக, இருளின் இராஜியத்தின் சரீர உடற்பயிற்சி களையும் அல்லது சுகப்படுத்தும் முறைகளையும் நாம் பயன்படுத்தலாம். நம்மை காயப்படுத்திய ஒருவருக்கு எதிராக மன்னிக்கமுடியாத மனம் உடையவர்களாக இருக்கலாம் அல்லது மற்றவர்களை நியாயம் தீர்த்து, நமது வாயினால் அல்லது இருதயத்தினால் மற்றவர்களைக் குறைகூறலாம். நமது குடும்பத்தினருடன் கடும் கோபம் கொண்டவர்களாக இருக்கலாம். மனைவியையோ, கணவரையோ அல்லது பிள்ளைகளையோ அடித்து இருக்கலாம். தவறாகப் பேசி இருக்கலாம். கர்த்தர் செய்யும்படியாகச் சொல்லி இராத சில நல்ல செயல்களை செய்வது கூட பாவமாக இருக்கலாம். (வேதாகமம் எபிரேயர் 6:1 இல் இவைகளை பொல்லாத செயல்கள் அல்லது செத்த கிரியைகள் என்று அழைகின்றது) ஒவ்வொரு பாவமும் பாவம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆனால் நல்ல செய்தி என்னவெனில் எந்த ஒரு பாவமான செயலும் நாம் அறிக்கை செய்து, மன்னிக்கக் கேட்கும் போது மன்னிக்க மறுக்கும் அளவிற்கு மோசமானது அல்ல. அதிகமாக செய்யப்பட்டதும் இல்லை.

*"மனுஷனுக்குள்ளே இருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். எப்படியெனில், மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும். பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்."* ***(மாற்கு 7:20-23*** *இல் இயேசுவானவரின் வார்த்தைகள்)*

*''மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன, அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலான வைகளே; இப்படிப்பட்ட வைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப் பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோத மான பிரமாணம் ஒன்றுமில்லை.* ***(கலாத்தியர் 5:19-23).***

**சாட்சி**

**இயேசுவானவர் எனது திருமணத்தினை உடனடியாக சுகப்படுத்தினார்**

*'நான் மீண்டும் பிறந்த அனுபவம் பெற்று இருந்தாலும், அப்படிப்பட்ட அனுபவம் இல்லாத ஒரு கிறிஸ்தவரை நான் திருமணம் செய்தேன். பல ஆண்டு காலமாக எங்கள்து திருமண வாழ்வு மோசமாக இருந்தது. அப்படி அனேக ஆண்டுகளுக்குப் பின்பு, ஒரு அவிசுவாசியைத் திருமணம் செய்ததற்காக மனம் வருந்தினேன். மனம் திரும்பினேன். கர்த்தர் எனது கணவரின் உள்ளத்தில் கிரியை செய்து, அவரது பாவத்தினை உணர்த்தினார். அவரும் பின்னர் மனம்திரும்பினார். மீண்டுமாய் பிறந்த அனுபவம் பெற்றார். இவ்வாறு உடனடியாக, கர்த்தர் எனது திருமண வாழ்வினை சுகப்படுத்தினார்.'*

*['மன்னிக்கப்பட முடியாத பாவம்' என்று ஒன்று உண்டு.* ***(மத்தேயு 12:32; 1 யோவான் 5:16).*** *ஆனால் நமது ஆசை கர்த்தரை நெருங்கிச் சேர வேண்டும் என்பதாக இருந்தால், நாம் அதனைச் செய்யவில்லை]*

கர்த்தர் நமது பாவத்தினை வெறுக்கின்றார். நாமும் அப்படியே வெறுக்க வேண்டும் என்று விரும்புகின்றார். நாம் நமது பாவத்தை அறிந்து, பாவமான செயல்களையும் நோக்கங்களையும் வெறுக்கும் போது மட்டுமே, அவைகளை நாம் செய்வதை நிறுத்தத் தயாராவோம்.

அவரைக் காயப்படுத்தியதும், இன்னும் காயப்படுத்துகின்றதும், அவரை விட்டு உங்களைப் பிரிக்கின்றதும், அவர் உங்கள் கணக்கில் இருந்து தொலைத்துப் போட விரும்புகின்றதுமான செயல்களைக் கர்த்தர் உங்களுக்குக் காண்பிக்கும்படியாக அவரிடம் இப்போது வேண்டுங்கள்.

*"தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும்."* ***(சங்கீதம் 139:23-24).***


இந்த ஜெபம் உங்களுக்கு உதவியாக இருக்கும்:

"பரலோக பிதாவே, இப்போது நீர் என்னிடம் இருந்து அகற்ற, மாற்ற விரும்பும் சில குறிப்பிட்ட பாவங்களை நீர் எனக்குக் காண்பியும். இயேசுவின் நாமத்தில் ஆமென்."



[கர்த்தரிடம் இருந்து நினைவுகள், உணர்வுகள் அல்லது எண்ணங்கள் வருகின்றதா என்று கவனித்து காத்திருங்கள்.]

## நமது பாவங்களை ஒத்துக் கொள்ளுதல் (அறிக்கையிடுதல்)



*ஒரு பாவ எண்ணத்தை அல்லது செயலை தெரிந்து கொண்டதும், நாம் அந்த குறிப்பிட்ட பாவத்தை ஒத்துக்கொள்வது அவசியம். அதில் இருந்து திரும்ப முடிவு எடுக்க வேண்டும். ஒருவேளை சில பாவங்கள் தொடர்ந்து திரும்ப வரும் என்றால் அதைக் குறித்து மனம்வருந்தி, மனந்திரும்ப, அதில் இருந்து விலக, அதில் இருந்து பிரிக்கப்பட, நாம் ஆண்டவரிடம் தொடர்ந்து கேட்க வேண்டும். நமது பாவங்களை நாம் அறிக்கை செய்யும் போது அது* ***<u>தெளிவாகக்</u>*** *காணப்பட வேண்டும்.*

*இப்படி சிலர் மிகவும் குறிப்பாகத் தங்கள் பாவத்தை அறிக்கை செய்த அனேக சம்பவங்கள் வேதாகமத்தில் சொல்லப்பட்டு உள்ளன. உதாரணமாக, தாவீது இராஜா விபசாரம், ஏமாற்றினது மற்றும் கொலைகள் செய்தது குறித்தான அறிக்கையிடுதல்* ***(2 சாமுவேல் 11 மற்றும் 12).*** *தாவீது என்ன தவறு செய்தார் என்று நாத்தானிடம் கர்த்தர் மிகவும் <u>குறிப்பிட்டுச் சொன்னது போன்று</u> கர்த்தர் நாம் செய்த அத்தனை பாவங்களையும் மிகச் சரியாக அறிந்திருக்கின்றார்.* ***(2 சாமுவேல் 12: 9-10).*** *எதுவும் கர்த்தருக்கு மறைவானதில்லை. அவர் நமது இதயத்தையும், நமது மனதையும் அறிந்திருக்கின்றார். நாம் செய்வதையும், நினைப்பதையும் அவர் அறிந்திருக்கின்றார். நம்மைப் பற்றி எல்லாவற்றையும் அறிந்து, நமது பாவத்திற்கு நாமே பொறுப்பெடுத்துக் கொள்ள விரும்பும் பரிசுத்தமான கர்த்தர் முன்பாக நாம் மிகவும் உண்மையாக இருக்க வேண்டும்.* ***(வெளிப்படுத்தல் 2:23 பின்பாகம்).***


*ஒவ்வொரு பாவமும் பாவியையும் மற்ற மக்களையும் கர்த்தரையும் பாதிக்கின்றது. ஒரு பாவத்தினால் தொடர்ந்து பல பாவங்கள் உண்டாகின்றது. உதாரணமாக ஒரு பாவத்தை மறைக்க ஏமாற்றும்போது தொடர்ந்து பாவங்கள் செய்யப்படுகின்றது. இந்த பாவங்கள் அனைத்தும் கண்டறியப்பட்டு, அந்த நபர் அவைகளிலிருந்து விடுதலை பெறும்படியாக அறிக்கை செய்யப்பட வேண்டும். பின்னர் அவர்கள் பாவத்தை மன்னிக்கின்ற கர்த்தருடைய கிருபையை அனுபவித்து, தங்களுக்கு உண்டாகும் பாதிப்புகளிலிருந்து விடுபடலாம்.*

நாம் நமது பாவத்தை அறிக்கை செய்யும் போது, நாம் கர்த்தருடன் மீண்டும் நல்ல ஒரு நட்பு பெறுகின்றோம் (ஒப்புரவாகின்றோம்). நாம் பாவம் செய்தோம் என்று வெளிப்படையாக நாம் ஏற்றுக்கொள்கின்றோம். நாம் அவரிடம் எந்த பாவங்களை அறிக்கை செய்கின்றோம் என்பதைக் குறித்து மிகவும் வெளிப்படையாகவும், மிகவும் குறிப்பாகவும் இருக்க வேண்டும். அறிக்கை செய்யும் போது மிகவும் சத்தத்துடன் அறிக்கை செய்ய வேண்டும். இல்லைஎனில் அது தியானம் போல் இருக்கும். வேதாகமத்தில் எந்த ஒரு இடத்திலும் அறிக்கை செய்வது அமைதியாக செய்யப்படவில்லை. நாம் நமது வாயினால் அறிக்கை செய்ய வேண்டும்: "கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினால் அறிக்கையிட்டு . . . '' ***(ரோமர் 10:9-10).*** சத்தமாக அறிக்கை செய்யும் போது தெய்வீக வல்லமை வெளிப்படும்.

நாம் அவரிடம் அறிக்கை செய்யாத எந்த ஒரு பாவத்தையும் அவர் மன்னிப்பதாக அவர் வாக்குப்பண்ணினதில்லை.... *"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கின்றார்.''* ***(1 யோவான் 1:9; நீதிமொழிகள் 28:13).***

*"ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்."* ***(எபிரேயர் 4:16).***

## நம்மை மன்னிக்கவும், மாற்றவும் கர்த்தரைக் கேட்பது



நாம் நமது பாவங்களை ஒத்துக்கொண்ட பின்பு (அறிக்கையிட்டபின்பு) அவரிடம் நம்மை மன்னிக்க கேட்க வேண்டும். கர்த்தர் நம்மைக் கழுவ கேட்க வேண்டும். கர்த்தர் நம்மையும், நமது செய்கைகளினால் அசுத்தமடைந்த மற்ற மக்களையும் கழுவ நாம் கேட்க வேண்டும். ***(1 யோவான் 1:9).*** அவைகளுக்கு ஈடு செய்து நாம் எப்படி

*அதனைச் சரிப்படுத்தலாம் என்று நாம் கவனிக்க வேண்டும். நம்மை மன்னித்த எவரையும் நாம் மன்னிப்பது அவசியம் அல்லது அவர்களை மன்னிக்க கர்த்தருடைய உதவியைக் கேட்க வேண்டும். நாங்கள் மாற விரும்புகின்றோம் என்று நாம் கூற வேண்டும். இயேசுவைப் போன்று மாற அவரது உதவியைக் கேட்க வேண்டும். நமது இதயத்தில் இயேசுவானவரை நாம் ஆழமாக வரவேற்க வேண்டும். நம்மைப் பூரணமாக நிரப்ப பரிசுத்த ஆவியானவரைக் கேட்க வேண்டும்.*

**நீங்கள் பாவம் செய்திருந்தீர்கள் என்று அறிவீர்கள் என்றால் உங்களுக்கான ஜெபக் கையேடு:**

- **நீங்கள் செய்த தவறை அறிக்கை செய்யுங்கள் (பாவம் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லி இருக்க வேண்டும்)**
- **கர்த்தர் உங்களை மன்னித்து, உங்களையும் மற்றவர்களையும் கழுவி, மாறுவதற்கு உங்களுக்கு உதவி செய்யும்படியாக கேட்க வேண்டும்**
- **காரியங்களை எப்படி சரிப்படுத்த வேண்டும் என்று சொல்லித்தர அவரைக் கேளுங்கள்**
- **மீண்டுமாய் இயேசுவானவர் உங்கள் இதயத்தில் வரக் கேளுங்கள். பரிசுத்த ஆவியானவர் உங்களைப் பூரணமாய் நிரப்ப இடம் கொடுங்கள்.**

*கர்த்தர் பக்கம் வருவதற்கு உதவி செய்யும் ஒரு ஜெபம் இங்கே தரப்பட்டு உள்ளது. உங்களது ஜெபத்தில் உங்களது சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்துவது நல்லது. காரணம் ஜெபம் என்பது இதயத்தில் இருந்து வருகின்றது.*

## மனம்திரும்புதலுக்கான ஜெபம்



*“பரலோகத் தகப்பனே, நான் தவறு செய்து விட்டேன் என்று வருத்தத்துடன் சொல்லுகின்றேன். நான் செய்த தவறுகள் என்னவென்றால்...* ***(இப்போது என்ன செய்தீர்கள் என்பதை மிகவும் தெளிவாக, சத்தமிட்டு கர்த்தரிடம் குறிப்பாகச் சொல்ல வேண்டும். ஒவ்வொரு சம்பவத்தையும் கூறும் போது மிகவும் உண்மையாகவும், மிக விவரமாகவும் அவரிடம் சொல்லுங்கள்).*** *இதனை பாவம் என்று அறிந்து விட்டு விடுகின்றேன். நான் தவறானவன். இந்த பாவத்தை விட்டு நான் உம்மிடமாய் திரும்புகின்றேன்.*

*தயவாய் என்னை மன்னியும். இயேசுவின் இரத்தத்தினால் என்னைக் கழுவும். நான் மாற விரும்புகின்றேன். தயவாய் என்னை மாற்றும். எனக்கு புதிய ஒரு இதயம் தாரும். எனது பாவமானது என்னை அல்லது மற்ற யாரையும் பாதிக்காதவாறு தயவாய் தடுத்து நிறுத்தும். ஆண்டவராகிய இயேசுவே, எனது இதயத்தில் மீண்டுமாய் வாரும். உமது பரிசுத்த ஆவியினால் என்னை முழுவதுமாய் நிரப்பும்.*

*“நான் காயப்படுத்திய மக்களை ஆசீர்வதிக்கின்றேன். அப்பா, அவர்களை ஆசீர்வதியும். காரியங்களை எப்படி சரி செய்ய வேண்டும் என்று சொல்லித் தாரும். சோதனையில் என்னைப் பாதுகாத்து, பொல்லாதவைகளில் இருந்து என்னை விடுவியும். நன்றி. இயேசுவின் நாமத்தில் ஆமென்.”*

*மனம்திரும்புதலுக்கான ஜெபத்தினை ஏறெடுத்த பின்பு, கீழ்க்காணும் வேதபகுதியை ஜெபமாக சொல்லுவது உதவி செய்யும்.*

## கர்த்தருடைய மன்னிப்பின் நிச்சயம்



*சத்தமாகக் கூறவும் (**1 யோவான் 1:8-10** இல் இருந்து)*

*“நான் எனது பாவத்தை (அறிக்கை செய்யும்) போதெல்லாம் நீர் என்னை மன்னித்து எல்லா அக்கிரமங்களிலும் இருந்து என்னைக் கழுவுவதற்கு நீர் உண்மையும் நீதியும் உள்ளவராய் இருக்கின்றீர் என்பதினால் ஆண்டவராகிய கர்த்தரே உமக்கு மிகவும் நன்றி. ஆகவே நான் மன்னிக்கப்பட்டேன். உமது மன்னிப்பிற்காக நன்றி. இயேசுவின் நாமத்தில் ஆமென்.”*

நம்மை மன்னிப்பதினால், கர்த்தர் அந்த பாவத்தினை நமது இதயத்தினை விட்டு விலக்கி விடுகின்றார். இதன் பிறகு, இயேசுவிற்கும், நம்மை நிரப்பும்படியாக பரிசுத்த ஆவியானவருக்கும் நமது இதயத்தில் இடம் உண்டாய் இருக்கும். நாம் அவரை வற்புறுத்தி அழைக்கும் போது மட்டுமே இயேசுவும் பரிசுத்த ஆவியானவரும் நம்மை நிரப்புவார்கள். ***(வெளிப்படுத்தல் 3:20).*** நமது இதயத்தின் வாசலுக்கான கைப்பிடி நமக்கு உள்ளே இருக்கின்றது. அதனை நாம் மட்டுமே திறக்க முடியும். நமது இதயக் கதவுகளை நாம் மட்டுமே திறக்க முடியும்! இயேசுவையும், பரிசுத்த ஆவியானவரையும் நாம் அதிகமாக அழைக்கும் போது, அவர் நம்மில் அதிகமாக வசிக்கையில் ***(கொலோசெயர் 1:27).*** நாம் அதிகமாக அவரைப் போன்று மாறுவோம். நமது வாழ்வில் ஆவியின் கனிகள் அதிகமாக உண்டாகும். ***(கலாத்தியர் 5:22).*** இதுவே '<u>ஆவிக்குரிய ஜீவியம் அல்லது வாழ்வு</u>' எனப்படும். நமது பாவத்தையும், சுயத்தையும் நாம் வெளியே தள்ளியதும், இயேசு கிறிஸ்து வினாலும், பரிசுத்த ஆவியினாலும், கர்த்தருடைய அன்பினாலும் நிரப்பப்பட நாம் கேட்க வேண்டும். ***(ரோமர் 5:5 பின் பாகம்).***

நமது சொந்த முயற்சியினால் நாம் மாறவேமுடியாது என்பதை நினைவு கூர வேண்டும் நம்மால் முடியாது! நாம் அவரை அழைக்கும் போது அவரே நம்மை மாற்றுகின்றவர்.

## ஒருவருடன் ஒருவர் ஜெபிப்பது

மனம்திரும்புதலுக்கான ஜெபம் முன்பு செய்திருந்தும், இன்னும் பாவத்தின் மீது முழுமையான வெற்றி கிடைக்கவில்லை என்றால், பாவத்தின் 'வேர்' அல்லது அடிப்படைக் காரணம் இன்னும் சரியாகத் தெரியவில்லை என்று அர்த்தம். அது இன்னும் உண்மையாக மனவருத்த முண்டாக்கவில்லை. இது மீண்டும் மீண்டுமாய் ஜெபிக்கப்படவேண்டிய காரியம். ஆனால் இம்முறை உண்மையான சக கிறிஸ்தவருடன் இணைந்து ஜெபிக்க வேண்டும். அப்படி என்றால் பாவத்தின் காரணத்தினைக் கண்டுபிடிக்க அவரே உதவிட முடியும். அதன் பின்னர் அந்த மனிதர் மனம் திரும்பலாம் (அல்லது தங்களுக்கு சிலர் காயம் உண்டு பண்ணினதை மன்னிக்கலாம்.) 'ஜெப ஊழியர்' பின்னர் ஜெபத்தில் ஒருமனப்பட்டு, கர்த்தர் செய்ததற்குச் சாட்சியாக இருந்து ***(மத்தேயு 18:19-20).*** மன்னிக்கப்பட்டதை நபருக்கு உறுதி

செய்ய வேண்டும். ஒரு விடுதலையயையும், ஆழமான இதயத்தில் ஒரு பிரகாசத்தையும் உணருகின்றபடியினால் அவர்கள் தாங்கள் மன்னிக்கப்பட்டிருக்கின்றோம் என்பதை அறிவார்கள்.

சிலருக்கு உதவி செய்யும் போது, பாவத்தை நினைக்கக் கூடாது என்றே கர்த்தர் வாக்குப்பண்ணுகின்றார் என்பதை நினைவுறுத்துவது நல்லது; *"நான் அவர்கள் பொல்லாப்பினை மன்னித்து, அவர்கள் பாவங்களை நினைவு கூராதிருப்பேன்"* ***(எரேமியா 31:34 பின்பாகம்; எபிரேயர் 8:12; எபிரேயர் 10:17).*** நாம் உண்மையாகவே மனம்திரும்பியபோது, அந்த பழைய பாவங்கள் நமது எண்ணத்தில் மீண்டுமாய் வருவதில்லை. அது நம்மை குற்ற உணர்வுக்குள்ளாக்குவதில்லை. நாம் மன்னிக்கப்பட்டுள்ளோம் என்று அறிவோம் ***(கொலோசெயர் 1:21-23 முன் பாகம்; 1 யோவான் 1:8-10; 1 யோவான் 5:15).***

## நமது மனம்திரும்புதலை விவரிப்பது

நமது பாவத்தை அறிக்கையிட்டு, மனம்திரும்பிய பின்பு நாம் அதனை நமது வாழ்வில் நிரூபித்துக் காட்டுவது அவசியம். அப்படி என்றால் நாம்: *"மனம்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்."* ***(மத்தேயு 3:8)*** என்ற வசனத்தின் அடிப்படையில் காணப்படவேண்டும். பாவம் நம்மை 'படை எடுக்கின்றது' என்று நாம் உணருகின்ற போதெல்லாம் நாம் பாவத்தினை விட்டுத் திரும்ப வேண்டும். பாவத்திற்கு அடிபணிவதைத் தடுக்க நாம் தீர்மானிக்க வேண்டும். அதற்கு உதவி செய்யக் கர்த்தரைக் கேட்க வேண்டும். அது ஒரு பாவ எண்ணமாக இருக்கலாம். செயலாக அல்லது சொல்லாக இருக்கலாம். அது நம்மிடம் வரும் போதெல்லாம் நாம் தொடர்ந்து மனம் வருந்தி, அதனை ***விட்டு விட்டு,*** இயேசுவிற்கு நேராகத் ***திரும்ப வேண்டும்.*** இதனை நமது சுய பெலத்தினால் செய்ய முடியாது. பாவத்தில் இருந்து திரும்ப நாம் இயேசுவானவரின் உதவியை நாட வேண்டும். இயேசுவானவரின் வாக்குத்தத்தங்கள் *"ஆம் என்றும் ஆமென்"* என்றும் இருக்கின்றது. ***(2 கொரிந்தியர் 1:20).*** நாம் எவ்வளவாய்ப் பாவம் செய்திருந்தாலும் மனம்திரும்பிய இதயத்துடன் அவரிடம் திரும்புவோம் என்றால் அவர் எப்போதும் நம்மை மன்னிப்பார்.

# இழப்பை சரிப்படுத்துதல் (ஈடு செய்வது)


ஒரு பாவம் செய்யப்படும் போது, பாவத்தின் விளைவுகள் அங்கு கட்டாயம் இருக்கும். உதாரணமாக, நாம் சிலரைக் காயப்படுத்தி, மன்னிக்கப்பட்டு விட்டோம் என்று நினைத்திருக்கலாம். அவர்கள் இன்னும் காயப்பட்டே இருக்கக் கூடும். சில நேரம் நாம் செய்ததினால் உண்டான இழப்பை சரி செய்ய வேண்டும் என்று கர்த்தர் விரும்புகின்றார். **(எண்ணாகமம் 5:6-8 முன் பாகம்).** நாம் திருடியது உண்டென்றால், நாம் குறிப்பிட்ட நபரிடம் அறிக்கை செய்ய வேண்டும். அவருக்கு உரியதை நாம் திருப்பித் தர வேண்டும். ஒரு வேளை வட்டியுடன் கூடத் தரலாம். (உதாரணம் சகேயு **லூக்கா 19:8).** நாம் யாரிடமாவது இரக்கமின்றி இருப்போம் என்றால், அவர்களிடம் இப்போதில் இருந்து இரக்கமாய் இருக்க வேண்டும். நாம் அவரிடம் மன்னிப்பு கேட்டு, அவர்களுடன் மனம் பொருந்த வேண்டும்.

அவ்வப்போது நாம் நமது பாவத்தினை அவர்களிடம் அறிக்கை செய்து, அவர்களிடம் மன்னிப்பு கேட்டு, அவர்களுடன் மனம் பொருந்த வேண்டும்.

**சாட்சி**
**மனம்திரும்பிய பின்பு உண்டான சுகம்**

*"முதுகு வலியினால் கஷ்டப்பட்ட ஒரு மனிதனுக்காக நான் ஜெபித்து கொண்டு இருந்தேன். அவரது முதுகு சுகம் அடையும்படியாகவும், ஒவ்வொரு எலும்பும் பெலனடையவும் கட்டளையிட்டேன். சில நிமிடங்களில் அவரது முதுகு வலி மாறியது. ஆனால் அவரது தோளில் வலி இன்னும் இருந்தது. அவரது தோள்களுக்காக ஜெபித்தேன். சுகம் அடையக் கட்டளை யிட்டேன். வேதனை மாறட்டும் என்றேன். நான் அந்த மனிதனிடம், 'உங்களைக் காயப் படுத்திய யாரையும் நீங்கள் இன்னும் மன்னிக்க வேண்டி இருக்கின்றதா?' என்று கேட்டேன். "இல்லை" என்றார். அவர் என்னிடம், "எனது பாவம் கூட சுகத்தைத் தடுக்கலாம்" என்று கூறினார். நானும் 'என்ன பாவம்' என்று கேட்டேன். அந்த மனிதர் மிகவும் வெளிப்படையாக சில குறிப்பிட்ட பாவங்களை (அதில் ஒன்று விபசாரம்) அறிக்கை செய்தார். அதனைக் குறித்து மனம்திரும்பவும், கர்த்தரிடம் மன்னிப்பு கேட்கவும், இயேசுவை இதயத்தில் அழைக்கவும் நான் உதவி செய்தேன். அவரும் அப்படியே செய்தார். உடனடியாக விடுதலை அடைந்து, தோள் வலியில் இருந்து சுகமாக்கப்பட்டார்."*

பாவமானது தேச சட்டத்திற்கு விரோதமாய் செய்யப்பட்டது என்றால், நாம் ஜெபித்து, கர்த்தருடைய செயலுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். பின்னர் அதிகாரிகளிடம் சென்று, நமது செயலை அறிக்கை செய்ய வேண்டும். பின்னர் சட்டத்தின்படியான காரியங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். ***(ரோமர் 13:1–7).***



**சாட்சி**

**இயேசுவானவர் எனது பண விஷயம் சம்பந்தப்பட்ட பாவத்தை சரிப்படுத்தினார்**

*“என்னுடன் வேலை செய்த ஒருவருக்கு விரோதமாய் நான் பண விஷயத்தில் பாவம் செய்திருந்தேன். அந்த பாவத்தைக் குறித்து நான் மனம் வருந்தினேன். ஆனால் நான் காரியங்களைச் சரிசெய்யவில்லை. இதே குற்றத்திற்காக சில அரசியல்வாதிகள் சிறை சென்றனர். அப்போது எனது உள்ளம் குற்ற உணர்வினால் பிடிபட்டது. எனது கணவருடன் சேர்ந்து பணத்தை (சகேயுவைப் போன்று) திருப்பித் தர வேண்டுமா என்று ஜெபித்த போது, எனது கணவர் தனது இதயத்தில் கர்த்தர் பேசுவதை மிகத் தெளிவாகக் கேட்டார்: “நீ கொடுக்க வேண்டியதைக் கொடுத்து விடு” இதன் அர்த்தம் என்ன என்று நாங்கள் குழம்பிப் போனோம். பின்னர் ஆண்டவராகிய இயேசுவானவர் எங்களது பாவத்தை எல்லாம் தன் மீது எடுத்துக் கொண்டார் என்று உணர்ந்தோம். அவர் அப்போது என்னை அவரது சார்பாக பணத்தைத் திருப்பிக் கொடுத்து இழப்பை ஈடு செய்யும்படியாகக் கேட்கின்றார். நான் செய்ததை அறிக்கை செய்து எனது பணியாளருக்கு நான் கடிதம் எழுதினேன். மன்னிப்பு கேட்டேன். அந்த கடிதத்துடன் நான் அவரிடம் இருந்து திருடிய பணித்திற்கான காசோலை ஒன்றை வட்டியுடன் சேர்த்து அனுப்பினேன். ‘சிறிது தாமதமானாலும் உங்களது உண்மைக்காக நன்றி’ என்று பதில் எழுதினார்கள்.”*

# மன்னிப்பு

*"மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால் உங்கள் பரம பிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுசருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்."* ***(மத்தேயு 6:14-15).***

நமது இதயம் அவரிடம் சரியாக இருக்கும் வகையில் கர்த்தர் தமது கிருபையின் பரிசை நமக்குத் தந்துள்ளார் ***(ரோமர் 5:15-16).*** சுவிசேஷம் என்பது மன்னிப்பின் செய்தி. மன்னிப்பும், இரக்கமும் கர்த்தருடைய குணம். நாம் நமது பாவத்தினை கர்த்தரிடம் அறிக்கை செய்தால், அவர் நம்மை மன்னித்து, நமது பாவத்தினை விட்டு நம்மைக் கழுவுகின்றார். ***(1 யோவான் 1:8 -10).*** இது பின்னர் நாம் தகுதி பெற்று இராத ஒரு உயர்வான நிலைக்கு நம்மைக் கொண்டுச் செல்லுகின்றது. அது 'கிருபையினால் கர்த்தருடன் ஒப்புரவாகி நிற்கும் இடம்.[4]

**சாட்சி**

**எனது இதயத்தில் இருந்து மன்னிக்கக் கர்த்தர் எனக்கு உதவினார்**

*"எனது நண்பர் ஒருவரால் நான் ஏமாற்றப்பட்டு, சிறையில் அடைக்கப் பட்டேன். எனது நண்பரின் துரோகமானது–எனது திருமணம், பிள்ளைகளுடனான எனது உறவு, எனது வேலை, எனது மதிப்பு, என நான் எதற்காகவெல்லாம் உழைத் தேனோ அவை அனைத்தையும் பாதித்தது. எனது முன்னாள் நண்பரை வெறுத்தேன். அவர் மீது கசப்பு கொண்டேன். நான் சிறையில் இருந்து விடுதலையான பின்பு, சில கிறிஸ்தவர் களைச் சந்தித்தேன். அவர்கள் என்னிடம் அந்த நண்பரை மன்னிக்க வேண்டும் என்று கூறினர். நான் அதிகம் முயன்றேன். பல முறை முயற்சி செய்தேன். பின்பு ஒரு நாள் இயேசு விடம் மன்னிக்க உதவி செய்யும்படிக் கேட்டேன். சில நிமிட நேரத்தில், என்னால் அவரை மன்னித்து விட்டேன். என்று சத்தமாக சொல்ல முடிந்தது. அந்த நொடி நேரமே நான் அவரை மன்னித்து விட்டதாக உணர்ந்தேன். வெகு வித்தியாசமாக உணர்ந்தேன். அதற்குப் பின்பு எனது மகளை நான் சந்திப்பதாக ஒரு தரிசனம் கண்டேன். அப்படியே நான் சந்தித்தேன். அதற்குப் பின்பு நாங்கள் நல்ல ஒரு உறவில் இருக்கின்றோம்."*

4. *ஜான் மற்றும் கரோல்: கிரேஸ் அண்ட் ஃபர்கிவ்னஸ்,* 2009, *நியு வைன் மினிஸ்ற்றிஸ். அனுமதியுடன்.*

## மற்றவர்களை மன்னிப்பது


'கிருபையின்' நிலையில் தொடர்ந்து இருப்பதற்கு, நம்மை காயப்படுத்தும் மக்களை நாம் தொடர்ந்து மன்னிக்க வேண்டும். இயேசுவே நமக்கு உதாரணம். இயேசுவை சிலுவையில் அறைந்த போது தன்னைக் கொலை செய்பவர் களைக் கூட மன்னித்தார். ***(லூக்கா 23:34).*** அவர்கள் தன்னைக் காயப்படுத்துவதை நிறுத்தும் வரை இயேசுவானவர் காத்திருக்கவில்லை. அவர்களும் மன்னிப்பு கேட்க வில்லை. மாறாக அவர்கள் அவரைத் தாழ்மைப்படுத்தி, கொலை செய்து கொண்டு இருக்கும் போதே அவர்களை மன்னித்தார். அப்படியே, நாமும் இயேசுவை போல் இருந்து, அவருடைய உதாரணத்தைப் பின்பற்ற வேண்டும்.

**சாட்சி**
**இயேசு என்னை விடுவித்தார்!**

*"என்னால் மக்களை மன்னிக்க முடிகின்றது. சிலர் என்னுடன் பேசுவது இல்லை என்றாலும், சிலர் மீது எனக்கு இருந்த வெறுப்பினை என்னால் விட முடிந்தது. விடுதலையை இதனால் உணருகின்றேன்."*

நாம் இதயத்தில் இருந்து மன்னிக்காத போது, 'கிருபையின்' நிலையில் இருந்து நாம் 'நீதியின்' நிலைக்கு வந்து விடுகின்றோம், அந்த நிலையில் நாம் செய்த பாவங்களுக்கு தண்டனை உண்டு. நாம் மன்னிக்காத போது கிருபையினால் வரும் சில நன்மைகளை நாம் இழந்து விடுகின்றோம். உதாரணமாக, ஜெபங்கள் பதிலளிக்கப்படாமல் போகலாம். அல்லது சுகம் தடைபடலாம். ***(யாக்கோபு 5:16).*** இதனை விட மிகத் தீவிரமான விளைவுகள் உண்டாகலாம். ***(மத்தேயு 6:15).*** நீதியின் நிலை என்பதில் நாம் தண்டனைக்குத் தகுதியடைகின்றோம், கர்த்தருடைய சீர்திருத்தலின் கீழ் வருகின்றோம், ***(யோவான் 3:36).*** கர்த்தர் ஒருவேளை நம்மை உபத்திரவப்படுத்துகின்றவர்கள் கையில் ஒப்புக்கொடுக்கலாம். (பிசாசுகள் மத்தேயு 18:23-35 இல் வரும் மன்னிக்காத வேலைக்காரனின் உவமையில் சொல்லப்பட்டது போன்று). நம்மைக் காயப்படுத்துகின்றவர்களை நாம் தொடர்ந்து மன்னித்தால், நாம் 'கிருபையின்' நிலையிலேயே தொடர்ந்து வாழுவோம். மற்றவர்களிடம் கிருபையாய் இருந்தால் கிருபையைப் பெறுவோம். உதாரணம் அப்போஸ்தலர் 10 இல் வரும் கொர்னேலியஸ். விதைப்பதை அறுப்போம் என்பதற்கு நல்ல உதாரணம் இது. ***(லூக்கா 6:37-38).***

நம்மைக் காயப்படுத்துபவர்களை நாம் மன்னிக்கும் விதமாக, நாம் மன்னிக்க முடிவு செய்ய வேண்டும். அப்படிச் செய்யும் போது கர்த்தர் மன்னிக்க பெலன் தருகின்றார். முழுவதுமாய் மன்னிக்க பெலன் தருவது அவரது வல்லமை மட்டுமே. ஆனால் நாம் மற்றவர்களை மன்னிக்க விரும்ப வேண்டும்.



நாம் முதல் தடவை ஜெபிக்கும் போது முழுவதுமாக மன்னிக்க முடியாமல் இருக்கலாம். ஆழமான காயங்கள் என்பது காயப்படுத்திய நபரைப் பல முறை மன்னிக்கும் தேவையை உண்டாக்கலாம். அது வெங்காயம் உரிப்பது போன்று, எதுவும் மிச்சம் இல்லாதவரை அது செய்யப்படவேண்டும்.

அப்படித் தொடர்ந்து நாம் செய்யும் போது, நாம் அவர்களை மன்னித்து விட்டோம் என்பதை உணருவோம். காயம் இலகுவாகின்றது. அந்த குறிப்பிட்ட நபரைச் சந்திக்கும்போது அல்லது அவரைப் பற்றி நினைத்துப் பார்க்கும் போது நமது மனம் அடித்துக் கொள்ளாது. நாம் மீண்டுமாய் 'கிருபையின்' நிலையினை அடைகின்றோம்.

''அப்பொழுது, பேதுரு அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றம்செய்து வந்தால், நான் எத்தனை தரம் மன்னிக்க வேண்டும்? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான். அதற்கு இயேசு: ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபதுதர மட்டும் என்று உனக்குச் சொல்லு கிறேன்." ***(மத்தேயு 18:21-22).***

கர்த்தர் கொடுத்த நிலை அது தான். காரணம் அதுவே அவரது தரம். நாம் எத்தனை முறை பாவம் செய்தாலும், இதயத்தில் இருந்து மனம்வருந்தினால் நாம்

பொதுவாக நாம் யாரையாகிலும் மன்னிப்போம் என்றால், நாம் அவர்களை மன்னித்து விட்டோம் என்று சொல்லுவது சரியானது அல்ல: அப்படி மன்னித்து விட்டோம் என்று சொல்லுவது முதலாவது அவர்கள் தவறு செய்து உள்ளனர் என்பதைக் குறிக்கின்றது. அதனை அவர்கள் விரும்புவது இல்லை. இரண்டாவது, நீங்கள் ஒருசிறப்பான கிறிஸ்தவர். அதனையும் அவர்கள் விரும்புவது கிடையாது! நீங்கள் விரும்பாத ஒன்று விரும்புவதாக மாறி இருக்கும் என்றால் அதனை அறியச் செய்வதற்கான பல வழிகள் உண்டு. அதனைச் சொல்ல வேண்டும் என்று அவசியம் இல்லை.

*(ஆக்னஸ் சன்ஃபொர்ட், கிரியேசன் வைட்ஸ், 1977)*

கேட்கும் போது எல்லாம் கர்த்தர் நம்மை மன்னிப்பார். அப்படியே, யாராவது சிலர் நமக்கு எதிராக பாவம் செய்தால், அவர்கள் எத்தனை முறை அப்படிச் செய்தாலும், நாம் நிச்சயமாய் மன்னிக்க வேண்டும்.

யாராவது நம்மைக் காயப்படுத்தினால், நாமும் அவர்களைக் காயப்படுத்தி பாவம் செய்கின்றோம். உதாரணமாக, அந்த நபரை முட்டாள் என்று முடிவு செய்து, அவர்களுடைய காயப்படுத்தும் வழிகளுக்காக கோபத்துடன் பதில் சொல்லி இருக்கலாம். இவை பாவமான செயல். நாம் இதனை அறிக்கை செய்து, அதில் இருந்து மனம்திரும்ப வேண்டும். இது நமக்குச் சரியாகவும், நீதியாகவும் தோன்றவில்லை என்றாலும், இந்த காயங்களை நாம் நம்மை விட்டு அகற்றிவிட வேண்டும். என்ன செய்ய்யப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கக் கர்த்தர் ஒருவரால் மட்டுமே முடியும் என்று ஏற்றுக் கொள்வது அவசியம். 'இது சரி இல்லை!' அல்லது 'சரிக்கு சரி வேண்டும்' என்று நாம் கூறும்போது, கர்த்தருடைய ஜீவனுள்ள கிருபையின் கீழ் வாழ்வதற்குப் பதிலாக, நாம் நம்மைக் கர்த்தருடைய நீதியின் கீழ்ப்படுத்தி விடுகின்றோம். நம்மால் இதயத்தில் இருந்து மற்றவர்களை அன்புடன் ஆசீர்வதிக்க முடிகின்றதா, அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டதை அறிந்து மகிழ்கின்றோமா என்பதினால் நாம் மன்னிக்கப்பட்டு இருக்கின்றோமா என்பதை பரிசோதித்து விடலாம். *"உங்களை தூஷிக்கின்றவர்களை அசீர் வதியுங்கள்"* என்று இயேசு வானவர் கூறுகின்றார். ***(லூக்கா 6:28).***

> **சாட்சி**
> **இயேசுவானவர் எனது தொழிலை சுகப்படுத்தினார்**
>
> *"நான் செய்த வேலைக்கு எனக்கு சரியான சம்பளம் கிடைக்கவில்லை. இதனால் நான் மிகவும் கஷ்டப் பட்டேன். எனது குடும்பம் பணத் தட்டுப் பாட்டினால் மிகவும் கஷ்டப் பட்டோம். இனி கடன் எடுப்பதற்கு என்று எதுவும் மீதியாக இல்லை. எனது போதகர் பணம் தர வேண்டியவர்களை மன்னிக்க உதவி செய்தார். மேலும், அவர்கள் எனக்குத் தர வேண்டிய பணத்தையும் தர வேண்டியதில்லை என்றும் முடிவு எடுக்கச் செய்தார்! அது எனக்கு ஒரு போராட்டம். அது சரியாகத் தோன்றவில்லை. எனினும், நான் அவர்களை மன்னித்தேன். அதன் பிறகு சில நாட்கள் கழித்து, எனக்கு ஒழுங் காகப் பணம் தருகின்றவர்களுடன் வேலை செய்ய வாய்ப்பு கிடைத்தது."*

வேண்டும் அல்லது உறவு கொண்டாட வேண்டும் என்று அர்த்தம் இல்லை. சில வேளைகளில் அது நிகழலாம். எனினும்,

கர்த்தரானவர் தன்னையே நம்பவேண்டும் மனிதரை நம்ப வேண்டாம் என்று சொல்லுகின்றார். சங்கீதம் 118:8 கூறுகின்றது "மனுசரை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தர் பேரில் பற்றுதலாய் இருப்பது நலம்." இயேசு வானவர் கூட எல்லாரையும் நம்பி விடவில்லை. **(யோவான் 2:24-25).** எனினும், எதிராளிகளையும் சேர்த்து அனைவரையும் நேசிக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். **(மத்தேயு 5:44-46).**

இயேசுவானவர் மன்னிப்பு என்பதை எப்போதும் கடன் மற்றும் கடன் தள்ளுபடி ஆகிவிட்டது என்று கூறி பணம் சம்பந்தப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தியே விவரித்துள்ளார். **(மத்தேயு 18:23-35).** அவர் சிலுவையில் மரித்தபோது, "முடிந்தது" என்றார். **(யோவான் 19:30).** இது அந்த நாட்களில் நீண்ட நாள் கடன் அனைத்தும் செலுத்தப்பட்டு விட்டது என்பதைத் தெரிவிக்க பயன்படுத்தப்படும் வார்த்தை. வேறு வகையில் கூற வேண்டுமானால், இயேசுவானவர் நமக்கான கடன் (பாவங்கள்) அனைத்தையும் கொடுத்து முடித்து விட்டார். நமக்கான தண்டனையை அவரே ஏற்றுக் கொண்டார். நமக்காக இயேசுவானவர் என்ன செய்து இருக்கின்றார் என்பதை உண்மையாகவே புரிந்து கொண்டால், நாமும் மற்றவர்களின் பாவத்தினை மன்னிப்பது ஏன் முக்கியம் என்று புரிந்து கொள்வோம்.

சில நேரம் மக்கள் தங்களுக்கு விரோதமாக செய்யப்பட்ட தீவிரமான காயங்கள் அல்லது பாவங்கள் போன்றவைகளை மன்னிக்க தேவை இல்லை என்று நினைக்கின்றனர். இத்தகைய குற்றங்கள் நில அபகரிப்பாக இருக்கலாம். பாலியல் பாவமாக இருக்கலாம். அல்லது கற்பழிப் பாகக் கூட இருக்கலாம். பாதிக்கப் பட்டவரின் பதிலைப் புரிந்து கொள்ளமுடியும் என்றாலும், வேதாகமானது நமக்கு விரோதமாய் செய்யப்பட்டது எத்தனை கொடிதாக இருந்தாலும் மன்னிக்க வேண்டும் என்று சொல்லுகின்றது. **(மத்தேயு 6:14-15; எபேசியர் 4:31-32; 1 கொரிந்தியர் 6:7).**

இப்படிப்பட்ட நிலையில் மன்னிப்பது எளிது இல்லை; பூரணமாய் மன்னிக்க சற்று தாமதமானாலும், கர்த்தர் மட்டுமே மன்னிக்க நமக்கு உதவி செய்ய முடியும், மேலும், நம்மை கடினமாக வேதனைப்படுத்தியவர் களை நண்பர்களாக வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அவர்களை நமது இதயத்தில் இருந்து மன்னிக்க வேண்டும்.

*உங்களுக்கு எதிராக செய்யப் பட்ட பாவங்களைச் செய்தவர் களை இன்னும் மன்னிக்க வேண்டுமா என்று பரிசுத்த ஆவியானவரிடம் கேளுங்கள்.*

*நீங்கள் பெற்ற காயங்கள் என்ன, அதற்குப் பதிலளிக்கும் விதமாக நடந்து கொண்ட விதம் என்ன, அது மன்னிக்கப்பட வேண்டுமா, மற்றவர்கள் என்ன பாதிப்பு உண்டாக்கினார்கள், உங்களுக்கு அவர்கள் தர வேண்டியது என்ன, என்பது போன்ற கேள்விகளை ஜெபத்துடனும், மிகுந்த சிந்தையுடனும் விவரமாக சரியாக விவரியுங்கள்.அதன் மூலமாய் அவர்களை மன்னிப்பது எத்தனை முக்கியமானது என்று அறிந்துகொள்வீர்கள். (உதாரணமாக பணம், மதிப்பு, வலி...) பின்னர் மன்னியுங்கள். அவர்கள் தர வேண்டிய கடனை விட்டு விடுங்கள்.*

**நீங்கள் யாரையாகிலும் மன்னிகின்றீர்கள் என்றால் உங்களுக்கான ஜெபக் கையேடு:**

- **அவர்கள் எப்படி உங்களை காயப் படுத்தினார்கள் என்று கர்த்தரிடம் கூறுங்கள் (மிகவும் குறிப்புடன்)**
- **அவர்களை மன்னிக்க முடிவு செய்யுங்கள் (உங்களால் முடியவில்லை என்றால், மன்னிக்க உதவும்படியாக கர்த்தருடைய உதவியைக் கேளுங்கள்)**
- **அவர்கள் உங்களை காயப் படுத்தியதன் விளைவாக உங்களில் உண்டான தவறான எண்ணங்கள், செயல்கள் போன்றவைகளை அறிக்கை செய்யுங்கள்**
- **அவர்களை அசீர்வதித்து, கர்த்தரும் அவர்களை ஆசீர்வதிக்கக் கேளுங்கள்**
- **உங்கள் இதயத்தில் இயேசுவானவர் (மீண்டுமாய்) வரவும், பரிசுத்த ஆவியானவர் உங்களை முழுவது மாக நிரப்பவும் கேளுங்கள்.**

*நீங்கள் ஆயத்தம் என்றால், நீங்கள் சத்தமாக இந்த ஜெபத்தினை சொல்லலாம்.*

**மற்றவர்களை மன்னிக்க மன்னிப்பின் ஜெபம்**



*"அன்பான பரலோக பிதாவே, எனக்கு எதிராக பாவம் செய்தவர்களை எனது இதயத்தில் இருந்து மன்னிக்க தயவாய் எனக்கு உதவி செய்யும்.*

*"எனக்கு செய்த மிகத் தவறான காரியங்களுக்காக அவர்களை (நீங்கள் மன்னிகின்ற நபரின் பெயரைக் கூறுங்கள்). மன்னிக்க விரும்புகின்றேன். (அவர்களுக்கு நீங்கள் மன்னிக்கும், அத்தனை தவறாக நடந்து கொண்டது, புறக்கணித்தது, குற்றம் சாட்டியது போன்ற செய்கைகளைக் கூறுங்கள்) இயேசுவின் நாமத்தினால் அவர்கள் பட்ட கடனை நான் தள்ளுபடி செய்கின்றேன். அவர்கள் என்னிடம் வருத்தம் கூட தெரிவிக்க வேண்டாம்.*

*"அவர்களது பாவத்திற்கு பதிலாக நானும் பாவம் செய்திருக்கின்றேன் என்று பிதாவாகிய தேவனே நான் அறிக்கை செய்கின்றேன். (குறிப்பாக எனது பாவமான பதில்களான... கோபம், எதிர்ப்பு, குற்றச்சாட்டு). பாவமான பதில்களை நான் நிறுத்த விரும்புகின்றேன். தயவாய் என்னை மன்னியும், கழுவும், எனக்கு புதிய இதயம் தாரும். பாவத்தின் விளைவுகளில் இருந்து இப்போதே என்னை விடுவியும். என்னைப் புதிதாக்கும். ஆண்டவராகிய இயேசுவே, என்னைப் புதுப்பியும், எனது இதயத்தில் தயவாய் மீண்டும் வாரும். உமது பரிசுத்த ஆவியினால் என்னை முழுவதுமாய் நிரப்பும். உமக்கு நன்றி.*

*"நான் அவர்களை மன்னித்துவிட்டபடியினால், நான் அவர்களை ஆசீர்வதிக்க விரும்புகின்றேன். (நீங்கள் ஆசீர்வதிப்பவர்களின் பெயர்களைக் கூறுங்கள்.)"*

*"பிதாவே நீர் அவர்களை ஆசீர்வதிக்கக் கேட்கின்றேன். இயேசுவின் நாமத்தில் ஆமேன்."*

*உங்களது வார்த்தையில் நீங்கள் உங்களைக் காயப்படுத்திய அத்தனை பேரையும் மன்னிக்கும் வரையில் தொடர்ந்து ஜெபியுங்கள்.*

## நம்மையே மன்னிப்பது

*நாம் வெட்கப்படும் வகையில் செய்த சில காரியங்களுக்காக நாம் நம்மையே மன்னிக்க வேண்டும். இதுவும் மிக முக்கியம் நம்மில் சிலர் மோசமான செயல்களைச் செய்திருக்கலாம். அவை களில் இருந்து மனம்திரும்பிய பின்பு கர்த்தர் நம்மை மன்னிப்பது போல நாமும் நம்மை மன்னிக்க வேண்டும். கர்த்தரை கனவீனப்படுத்திய அந்த சூழ்நிலையில் நாம் சிக்கிக்கொண்டதற்காக நாம் நம்மையே குற்றப்படுத்தலாம். அதினால் காயப்பட்டு, முட்டாள் போன்று காணப்படலாம்.*

*நீங்கள் உங்களையே மன்னிப்பதற்கு தேவை இருக்கின்றதா என்று உங்களுக்கு காண்பிக்க பரிசுத்த ஆவியானவரை அழைத்து கேளுங்கள். (இதனைப் பற்றி சிந்திக்கையில் அமைதியாக இருங்கள்.)*

*நீங்கள் ஆயத்தமாகும் போது, சத்தமாக இந்த ஜெபத்தினை ஏறெடுக்கலாம்.*

**தன்னையே மன்னிப்பதற்கான ஜெபம்**



*"அன்பு பரலோக தகப்பனே, நீர் என்னை மன்னித்ததற்காக நன்றி. நான் செய்த தவறுகளுக்காக என்னை மன்னிக்க எனக்கு உதவி செய்யும்... (உங்களையே மன்னிக்க அவசியமான குறிப்பிட்ட காரியங்களைக் கூறுங்கள்). நான் இனி என்னைக் குற்றப்படுத்த மாட்டேன். நான் மாற விரும்புகின்றேன். தயவாய் என்னை மாற்றும். நான் என்னை அசீர்வதிக்கின்றேன். என்னை தயவாய் அசீர்வதியும். உமக்கு நன்றி. இயேசுவின் நாமத்தில் ஆமென்."*

*இப்போது கர்த்தர் உங்களுக்குக் காண்பிக்கும் அத்தனைக் காரியங்களுக்காகவும் நீங்கள் தொடர்ந்து உங்களது வார்த்தைகளில் ஜெபியுங்கள்.*

# நாம் கர்த்தரைக் குற்றம்சாட்டிய போது

*''மனுசனுடைய மதியீனம் அவன் வழியைத் தாறுமாறாக்கும்; என்றாலும் அவன் மனம் கர்த்தருக்கு விரோதமாய்த் தாங்கலடையும்.'' **(நீதிமொழிகள் 19:3).***

*"சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்.'' **(யாக்கோபு 1:13-15).***

சில நேரம் நமக்கு நடைபெறும் மோசமான சம்பவங்களுக்கு நாம் கர்த்தரையே குற்றம்சாட்டலாம். கர்த்தர் ***ஒரு போதும்*** தவறு செய்வது இல்லை. நமது பாவத்திற்கு அவர் ***ஒரு போதும்*** காரணம் அல்ல. கர்த்தர் நல்லவர். அவரது இரக்கம் என்றென்றுமுள்ளது. ***(யாக்கோபு 1:17).*** உதாரணமாக, நாம் விரும்பாத காரியங்கள் நமக்கோ, நமது உறவினருக்கோ, அல்லது நண்பருகோ நடைபெறும் என்றால், நாம் கர்த்தருடன் கோபமடையலாம். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம் கர்த்தரை குற்றம் சாட்டுவதை விட்டு விட்டு, அவரைக் குற்றம்சாட்டியதற்காக நாம் அவரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்.

நீங்கள் எதற்காகிலும் கர்த்தரைக் குற்றம் சாட்டியது உண்டா என்று உங்களுக்குக் காண்பிக்க பரிசுத்த ஆவியானவரைக் கேளுங்கள். (இதனைக் குறித்து நினைக்கும் போது அமைதியாக இருங்கள்).

*நீங்கள் ஆயத்தமான போது, இந்த ஜெபத்தினை சத்தமாக சொல்லவும்.*

**கர்த்தரைக் குற்றம் சாட்டியதற்காய் மனம்திரும்புதலின் ஜெபம்**



*"ஆண்டவராகிய கர்த்தரே, எனக்கு நடைபெற்ற காரியங்களுக்காக, எனது வாழ்வின் சூழ்நிலைக்காக நான் உம்மை தவறாகக் குற்றப்படுத்திவிட்டேன்.... (அந்த குறிப்பிட்ட தருணங்களைக் கர்த்தரிடம் சொல்லுங்கள்) பிதாவே என்னை மன்னியும். இனி ஒரு போதும் உம்மைக் குற்றப்படுத்த மாட்டேன். எங்கள் அனைவருக்கும் சிறப்பானதை நீர் அறிந்திருக்கின்றீர் என்பதை நான் அறிவேன், தயவாய் என்னை மாற்றும். புதுப்பியும். உமக்கு நன்றி. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கின்றேன். ஆமென்."*

*நீங்கள் எதற்கெல்லாம் ஜெபிக்க வேண்டும் என்று நினைக்கின்றீர்களோ அதற்கெல்லாம் உங்களது வார்த்தையில் தொடர்ந்து ஜெபியுங்கள்.*

# ஆழமான மனம்திரும்புதல் மற்றும் மன்னிப்பு

நாம் பலவிதத்தில் பாவத்தில் விழுகின்றோம். அதில் ஒன்று அறியாமை ***(ஓசியா 4:6).*** இதன் காரணமாகவே வேதாகமத்தினை அனுதினமும் வாசித்து, நமது வாழ்வில் செயல்படுத்துவது மிகவும் முக்கியம். இந்த கையேட்டில் மனம்திரும்புவதற்கு என்ன வேண்டும் என்று தரப்பட்டு உள்ளது. அடுத்த ஐந்து பிரிவுகளில் மனம்திரும்புதல் மற்றும் மன்னிப்பின் மூலமாக மட்டுமே நீங்கும் சில பொதுவான அடிமைத்தனங்கள் பற்றி நாம் பேசுவோம். இந்த அடிமைத்தனங்கள் நமது வாழ்வை எப்படி பாதிக்கின்றன என்பதை நாம் ஜெபத்துடன் தெரிந்து கொள்வது அவசியம். இது ஒருவேளை நாம் வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்வு வாழுவதற்கு தடையாக இருக்கலாம்.


**சாட்சி**

**நான் ஒரு உண்மையான நண்பராக மாற இயேசுவானவர் உதவி செய்தார்**

*"எனது நண்பரும், நானும் சிறந்த நண்பர்கள். அதிகமான நேரம் ஒன்றாகவே இருந்தோம். நாங்கள் ஒன்றாக நேரம் செலவழிப்பதை நான் மிக விரும்பினேன். அவள் தன்னுடைய வீட்டை விட்டு வந்து விட வேண்டும் என்று தொடர்ந்து அவளிடம் கூறினேன். அவளோ நான் அவளது நிலையைப் புரிந்துகொள்ளவில்லை என்று என்னிடம் கூறினாள். அவளது வீட்டை விட்டு வருவது மிகவும் கடினம். ஆகவே அவள் வரமுடியாது என்றாள். தெய்வீகமற்ற உறவுகளைக் குறித்து நான் கற்றுக் கொண்ட போது, நான் எனது நண்பரைக் கட்டுப்படுத்தவும், ஆளுகை செய்ய்யவும் முயன்று கொண்டு இருந்தேன் என்பதை உணர்ந்து கொண்டேன். அவளுக்காக இயேசுவிடம் ஜெபித்தேன். எனது பாவத்தினை விட்டு மனம்திரும்பி, தெய்வீகமற்ற உறவை விட்டு விட்டேன். இயேசுவானவர் எங்களை விடுதலை செய்தார். எங்களுக்கிடையே இப்போது நல்ல ஒரு உறவு உண்டு. தெய்வீகமற்ற உறவில் இருந்து விடுதலை பெற்று விட்டோம்."*

## தெய்வீகமற்ற உறவுகளில் இருந்து விடுதலை

*"அவர்கள் ஒரே மாம்சமாய் இருப்பார்கள்"* ***(ஆதியாகமம் 2:24; மத்தேயு 19:5)***



இரண்டு பேர் ஒரு நெருக்கமான சமூக உறவில் அல்லது ஆவிக்குரிய உறவில் இருக்கும் போது, அவர்கள் சரீரத்திலும், ஆவியிலும், ஆத்துமாவிலும் ஒன்றாக இருப்பார்கள். இந்த உறவு கண்களுக்குத் தெரிவதில்லை. காரணம், அந்த மனிதரை, நாம் இருக்கும் சூழலை நமது மூளையானது ஒரு 'படக்காட்சியாக' ஒரு போட்டோவாக எடுத்து நினைவில் வைக்கின்றது. இதன் காரணமாய் இந்த உறவுகள் பெலனடைகின்றன. இதுவே அவர்களை நமது நினைவில் நீண்ட நாள் வைத்திருக்கவும் ஒரு வாழ் நாள் முழுவதும் நினைக்கவும் செய்கின்றது.

இந்த நினைவுகள் நம்முடைய நன்மைக்காகவே உண்டாக்கப்பட்டு உள்ளன. இதுவே திருமண உறவுகளில் நம்மை இணைக்கும் உறவை உருவாக்க உதவுகின்றது. எனினும், நாம் தவறான அல்லது பாவமான உறவில், காதல் அல்லது திருமணத் திற்குப் புறம்பான பாலியல் உறவில் அல்லது பாலியல் தொடர்பில் இருப்போம் என்றால், உருவாக்கப் படும் அந்த தெய்வீகமற்ற உறவினை, நம்மை தெய்வீகமற்ற வழிகளில் நடத்தவும், ஆளுகை செய்யவும் எதிராளியானவன் பயன்படுத்திக் கொள்வான். ***(மத்தேயு 5:27-28; 2 பேதுரு 2:18-19; யூதா 8).***

அப்படியே, எங்கே பயம், தவறான ஆளுகை, அல்லது உறவுகளில் தெய்வீகமற்ற கட்டுப்பாடு காணப்படுகின்றதோ அங்கெல்லாம், தெய்வீகமற்ற உறவுகள் உண்டாகி இருக்கும். தெய்வீகமற்ற வழிகளில் நம்மை நடத்த பிசாசானவன் இதனைப் பயன்படுத்துவான். இதனை கொண்டு அவன் மக்களை அடிமைப்படுத்துவான், கட்டுப் படுத்துவான். இந்த விதமான தெய்வீகமற்ற உறவுகள் குடும்பங் களிலும், மற்ற மக்களிடமும் அதிகமாகக் காணலாம்.

தெய்வீகமற்ற உறவு என்பது அந்த உறவு முடிந்து போனாலும், அல்லது அந்த நபர் மரித்துப் போய் இருந்தாலும் இன்னும் தொடர்ந்து காணப்படும்.

**சாட்சி**

**இயேசுவானவர் தெய்வீகமற்ற கட்டுப்பாடுகளில் இருந்து என்னை விடுவித்தார்**

*“அம்மாவினால் நன்றாக கவனிக்கப் பட்ட ஒரு குடும்பத்தில் நான் வளர்க்கப்பட்டேன். சில ஆண்டு களுக்கு முன்பு எனது வீட்டை விட்டு வெளியேறி வேறு ஒரு இடத்திற்கு வேலைக்கு செல்ல முடிவு செய்தேன். எனது அம்மா எனது முடிவிற்கு எதிராக இருந்தார். அவர் எனது மனதை மாற்ற பல விதங்களில் முயற்சி செய்தார். என்னைக் கட்டுப்படுத்தி என்னை ஆளுகை செய்ய முயலுகின்றார் என்று உணர்ந்தேன். எனது முடிவின்படி என்னை அனுமதிக் காமல் அவர் தனது விருப்பத்தினை என் மீது திணித்தார். இன்னும் பதட்டத்தில் அவர் என்னை நோக்கி நான் வெளியேறினால் தன்னையே கொன்று விடுவதாக மிரட்டினார். பின்னர் எனது வாழ்வில் என் மீது இருந்த அவரது கட்டுப்பாடு மந்திரம் செய்ததினால் உண்டானது என்பதை உணர்ந்தேன். என்னால் அவரை மன்னிக்க முடிந்தது. தெய்வீகமற்ற உறவு அறுக்கப்பட்டது. உடனடியாக இயேசுவானவர் என்னை விடுவித்ததாக உணர்ந்தேன்.”*



*“துன்மார்க்கனை அவனுடைய அக்கிரமங்களே பிடித்துக் கொள்ளும்; தன் பாவக்கயிறுகளால் கட்டப்படுவான்.”* ***(நீதிமொழிகள் 5:22).***

*காதல், ஆபாச படக் காட்சிகள், திருமணத்திற்குப் புறம்பான பாலியல் உறவு இவற்றை விட்டு மனம்திரும்பிய பிறகு அல்லது காயப்படுத்தியவர்களை, பயப்படுத்தியவர்களை அல்லது கட்டுப்படுத்தியவர்களை மன்னித்த பிறகு, நம்மிடமும், மற்றவர்கள் மத்தியிலும் காணப்படும் தெய்வீகமற்ற ஆவிக்குரிய, உணர்வுப்பூர்வமான, அல்லது சரீரப் பிரகாரமான உறவுகளை இயேசுவின் நாமத்தில் நாம் உடைத்துப் போட முடியும். மற்றவர்களிடம் இருந்தும், நம்மைப் பின்னிப் பிணைக்கும் பாவங்களில் இருந்தும், பொல்லாத ஆளுகைகளில் இருந்தும், நினைவுகளில் இருந்தும் நம்மை விடுவிக்கக் கர்த்தரைக் கேட்க முடியும். இது தனிப்பட்ட முறையிலும், மிகுந்த கரிசனையுடனும் செய்யப்பட வேண்டும். இந்த உறவுகள் அறுக்கப்பட்டதும் சிலர் விடுதலையை உணரலாம். உணர்வுகள் ஆழமான அளவில் தொடப்படலாம்.*

*“கர்த்தரோ நீதியுள்ளவர்; துன்மார்க்கருடைய கயிறுகளை அவர் அறுத்தார் என்று, இஸ்ரவேல் இப்பொழுது சொல்வதாக.”* ***(சங்கீதம் 129:4).***

*“தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.”* ***(எபிரேயர் 4:12).***

*குடும்ப உறுப்பினர்களுடனும், மற்ற அன்பானவர்களுடனும் தெய்வீகமற்ற பந்தங்களை அறுத்தப் பின்பு, நாம் அவர்களை இனி நேசிக்கவே கூடாது அல்லது அவர்களுக்காக ஜெபிக்கக் கூடாது என்று அர்த்தம் இல்லை. எதிராளியானவன் இந்த உறவுகளைப் பயன்படுத்தி நம்மை இருளுக்குள் இழுக்க பயன்படுத்திய வல்லமை உடைக்கப்பட்டு விட்டது என்பதே பொருள்.*

யாத்திராகமம் 20:3-6 இல் நாம் மற்ற தெய்வங்களை வைத்திருக்கக் கூடாது, அல்லது கர்த்தரைத் தவிர எதனையும் அல்லது யாரையும் (விக்கிரகங்கள்) ஆராதிக்கக்கூடாது என்று வேதாகமம் கூறுகின்றது. அப்படிச் செய்வதினால் உண்டாகும் மோசமான விளைவுகளும் தெளிவாகக் கூறப்பட்டு உள்ளது. மேலும், வேதாகமம் விக்கிரககாராதனையை விபசாரம் என்று கூறுகின்றது. இஸ்ரவேலர் பல அன்னிய தெய்வங்களை அல்லது விக்கிரகங்களை ஆராதித்ததும், இஸ்ரவேலர் 'விபசாரக் காரர்கள்' என்று விவரிக்கப்படு கின்றனர். ***(எரேமியா அத்தியாயம் 3; ஓசியா 1:2 மற்றும் அத்தியாயம் 2).***

நாம் ஒரு விபசாரக்காரருடன் சேருவோம் என்றால், அந்த நபரோடு 'ஒரே மாமிசமாய்' சேர்ந்து மாறி விடுவோம். இது நமது சரீரத்தினை மோசமாக பயன்படுத்துவது என்று அர் த்தம். காரணம் வேதாகமம் சரீரத்தினை "பரிசுத்த ஆவியானவரின் ஆலயம்" என்று கூறுகின்றது. ***(1 கொரிந்தியர் 6:13-20).*** ஆகவே, அந்த விதமாகவே, நாம் ஒரு விபசாரக்காரருடன் பாலியல் உறவு கொள்ளும் போது தெய்வீகமற்ற உறவு உருவாக்கப் படுகின்றது. விக்கிரகங்களை ஆராதிப்பதினாலும் தெய்வீகமற்ற உறவு உண்டாகின்றது. ***(எபேசியர் 5:5; 1 யோவான் 5:21).***

விக்கிரககாரதனை என்பது இயேசுவானவரின் மூலமாக

**சாட்சி**
**பேட்மின்டன் விளையாட்டு எனக்கு விக்கிரகமாயிருந்தது**

*"நான் விளையாட்டில் ஆர்வமுள்ளவனாயிருந்தேன். ஒவ்வொரு வாரமும் 6 இரவு மற்றும் பகலில் நான் விளையாடுவேன். நான் சபையை புறக்கணித்தேன். ஜெபிக்கவும் வேதம் வாசிக்கவும் எனக்கு நேரமில்லை. நான் முழுக்கு ஞானஸ்நானம் எடுக்க விரும்பினேன். ஆனால் அதனை குறித்து எனது போதகரிடம் பேசியது போது அவர் எனக்கு ஞானஸ்நானம் தர மறுத்து விட்டார். இயேசுவிற்கு முதல் இடம் தராத வனை ஞானஸ்நானம் கொடுக்கப்போவதில்லை என்று கூறினான். பின்னர் பேட்மின்டனே எனது தெய்வமாகவும், எனது விக்கிரகமாகவும் இருந்தது என்பதை புரிந்து கொண்டேன். நான் மனம்திரும்பி, விளையாடும் நேரத்தைக் குறைத்து இயேசுவுக்கு எனது முதலிடம் கொடுக்க ஆரம்பித்தேன்."*

நீங்கள் யாரைப் பற்றி அதிகமாக நினைக் கின்றீர்கள்? அது இயேசு இல்லை என்றால், அது விக்கிரகமாய் இருக்க முடியும்!

*கர்த்தரை[5] உண்மையாக ஆராதிப்பதில் இருந்து தடுக்கின்ற யாரையும், எதனையும் முழுவதுமாக சரணடைவதே ஆகும். அது பொருள்களாக (சொத்துக்கள், மது), மக்கள் (குடும்ப அங்கத்தினர்கள், போதகர்கள் அல்லது ஆசிரியர்கள்), செல்வங்கள் (ஆஸ்தி, பதவி), செயல்கள் (வேலை, கல்வி, விளையாட்டு), 'இருளின் ராஜியத்தில்' உருவான, வேதாகம ஆதாரம் இல்லாத ஆவிக்குரிய சுகமாக்குதல் மற்றும் சண்டை கலை போன்ற எந்த ஒரு காரியத்திலும் ஈடுபடுவதாக இருக்கலாம்.*

*தெய்வீகமற்ற உறவுகள் குறித்த போதனையில் இருந்து, எந்த விதமான தெய்வீகமற்ற உறவும் விக்கிரககாராதனையில் ஈடுபடுவதினாலேயே உண்டாகின்றது என்பது தெரிய வருகின்றது. நம்முடைய வாழ்வில் உள்ள எந்த ஒரு விக்கிரகத்திற்கும் பிசாசின் வல்லமை உண்டு.* ***(1 கொரிந்தியர் 10:20-21).*** *தெய்வீகமற்ற பந்தத்தின் மூலமாயும், பிசாசின் வல்லமையானது ஒரு மனிதனை நெருங்கி, அவனது வாழ்வை ஆளுகை செய்ய முடியும். யாராவது இருளின் இராஜியத் தினுடன் தொடர்பு கொண்ட எதையாகிலும் செய்திருந்தார்கள் என்றால், அவர்கள் மனம்திரும்பி, கர்த்தரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். பின்னர் இயேசுவின் நாமத்தின் அதிகாரத்தினால் அப்படிப் பட்ட காரியங்களில் இருந்தும்,*

**தெய்வீகமற்ற உறவுகள் இருக்கின்றது என்றால் அதற்கான ஜெபக் கையேடு:**

- **உங்களுக்கு விரோதமாய் பாவம் செய்தவர்களை (மிகவும் குறிப்புடன் கூறுங்கள்) மன்னியுங்கள்**
- **உங்களது பாவங்களையும், பாவமான எண்ணங்களையும் அறிக்கையிட்டு, மனம்திரும்புங்கள் (குறிப்புடன் கூறுங்கள்)**
- **இயேசுவின் நாமத்தினால் தெய்வீகமற்ற பந்தங்களை அறுத்து விட்டு, மற்றவர்கள், மற்றும் மற்ற காரியங்களில் இருந்தும் உங்களை வேறுபடுத்தி, பொல்லாப்பில் இருந்தும் விடுவிக்கக் கேளுங்கள்**
- **இயேசுவின் இரத்தத்தினால் உங்களைக் கழுவி சுத்திகரிக்கச் செய்து, உங்களை மாற்றக் கேளுங்கள்**
- **அந்த நபரை ஆசீர்வதியுங்கள்**
- **இயேசுவானவர் உங்களது இதயத்தில் மீண்டுமாய் அழைத்து, பரிசுத்த ஆவியினால் உங்களை முழுவதுமாய் நிரப்பக் கேளுங்கள்**

5. *டேவிட் க்ராஸ், சௌல் டைஸ், 2006, சாவரீன் வொர்ல்ட் லிமிடட்*

*பிசாசின் வல்லமைகளில் இருந்தும் தங்களையே விடுவித்துக் கொள்ளமுடியும். அவைகளினால் உண்டான பாதிப்புகளை இயேசுவின் இரத்தத்தினால் கழுவி விடக் கேளுங்கள்.*

*கீழ்கண்ட ஜெபத்தை நீங்கள் உங்கள் இதயத்தில் இருந்து சத்தமாகக் கூறலாம்.*

**தெய்வீகமற்ற உறவுகளை அறுக்க ஜெபம்**



*“அன்பு பரலோகப் பிதாவே, தெய்வீகமற்ற உறவை உண்டாக்கும் வண்ணமாக இந்த மக்களுடன்* ***(அந்த குறிப்பிட்ட மக்களின் அல்லது காரியங்களின் பெயரைக் கூறுங்கள்)*** *நான் ஈடுபட்டதற்காக நான் மனம் வருந்துகின்றேன். தயவாய் என்னை மன்னியும். இந்த மக்கள்* ***(குறிப்பிட்ட பெயரைக் கூறுங்கள்)*** *எனக்குச் செய்த தவறான காரியங்களுக்காக அவர்களை நான் மன்னிக்கின்றேன்.* ***(அவர்கள் செய்த குறிப்பிட்ட காரியங்களையும் நீங்கள் கூறுங்கள்)*** *அவர்கள் எனக்குக் கடன்பட்டு இருப்பதிலிருந்து அவர்களை நான் விடுவிக்கின்றேன்.* ***(அந்த நபரின் பெயரைக் கூறுங்கள்...)*** *அவர்கள் எனக்கு எதிராக செய்த பாவத்திற்குப் பதிலாக நானும் பாவம் செய்து இருக்கின்றேன்.* ***(பதிலுக்கு நீங்கள் செய்த பாவத்தைக் கூறுங்கள்...)*** *நான் இதில் இருந்து மனம் திரும்பச் செய்யும். என்னை மன்னித்தருள வேண்டுகின்றேன்.”*

*“இயேசுவின் அதிகாரமுள்ள நாமத்தினால், எனக்கும்...* ***(அடுத்த நபரின் பெயரைக் குறிப்பிடுங்கள்),*** *இடையே உண்டான தெய்வீகமற்ற உறவை நான் உடைக்கின்றேன். பிதாவே, இயேசுவின் இரத்தத்தினால் இந்தப் பாதிப்புகளைத் தயவாய்க் கழுவுங்கள். என்னைப் பாவத்தில் இருந்து விடுவியும். இதில் தொடர்புடைய நபரை* ***(அந்த நபர் அல்லது நபர்களின் பெயரைச் சொல்லுங்கள்)*** *நான் ஆசீர்வதிக்கின்றேன். தயவாய் எனது இதயத்திற்குள் வாரும். என்னை உமது பரிசுத்த ஆவியினால் நிரப்பும். என்னை மாற்றி பரிசுத்தப்படுத்தும். ஆமென்.”*


**சாட்சி**

**இயேசுவானவர் இளம் பெண்களிடம்**

**அவர்கள் உறவுகளைப் பற்றிக் கற்றுக்கொடுத்தார்.**

*"எங்களுக்குக் காதலர்கள் இருந்தால் தப்பா?" என்று என்னிடம் சில இளம் பெண்கள் வந்து கேட்டனர். நான் அவர்களுடன் சேர்ந்து ஜெபித்த போது, அவர்களில் ஒருவர் இயேசுவானவர் தனது மகிமையில் வந்து புன்னகைப்பதைக் கண்டார். அடுத்தவர், வேதாகமத்தில் இருந்து "உன்னதப்பாட்டு 2:7" என்ற சத்தம் கேட்டார்: "எருசலேமின் குமாரத்திகளே! எனக்குப் பிரியமானவளுக்கு மனதாகுமட்டும், நீங்கள் அவளை விழிக்கப்பண்ணாமலும் எழுப்பாமலுமிருக்கும்படி வெளிமான்கள்மேலும் வெளியின் மரைகள்மேலும் உங்களை ஆணையிடுகிறேன்."*

# குற்றப்படுத்தும் தீர்ப்புகளில் இருந்து மீட்கப்படுவது[6]



கர்த்தரால் அனேக கட்டளைகள் வைக்கப்பட்டு இருக்கின்றன. அதில் சில இயற்பியல் கட்டளைகள் உண்டு. புவி ஈர்ப்பு சக்தி போன்று. வேதாகமத்தில், கர்த்தர் தனது ஆவிக்குரிய கட்டளைகள் பற்றிக் கூறுகின்றார். புவி ஈர்ப்பு சக்தியின் கட்டளை எப்படியோ அப்படியே இவை செயல்படுகின்றன. இவை மாறுவதில்லை.

இந்த ஆவிக்குரிய கட்டளைகள் நமது வாழ்வை எப்படி பாதிக்கின்றன என்பது குறித்த உண்மையான புரிந்து கொள்ளுதலுடன் வாழ வேண்டும். உதாரணத்திற்கு, குற்றப்படுத்தும் தீர்ப்புகள், குற்றம்சாட்டுதல், குற்றம் கண்டுபிடிப்பது போன்ற காரியங்களை நாம் செய்கின்றோம் என்று கூட நாம் உணராமல் இருக்கலாம். சில ஆவிக்குரிய கட்டளைகளை மனதில் கொள்ளவில்லை என்றால் இந்தப் பாவத்தினால் நமது வாழ்வில் தீவிரமான விளைவுகள் உண்டாகும்.

## உங்கள் பெற்றொரை கனம் பண்ணுங்கள்

*“உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.”* ***(யாத்திராகமம் 20:12; உபாகமம் 5:16; எபேசியர் 6:2-3).***

இந்த கட்டளையானது நாம் பெற்றொரைக் கனப்படுத்தும் வாழ்வில், நாம் நன்றாகவும், பூரணமாகவும் வாழுவோம் என்பதைத் தீர்மானிக்கின்றது. எனினும், நாம் நமது வாழ்வில் பெற்றொரைக் கனவீனப்படுத்தும் போது, நமது காரியங்கள் நன்றாக இருக்காது.

## விதைப்பதை நீங்கள் அறுப்பீர்கள்

*“மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ண வொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.”* ***(கலாத்தியர் 6:7).***

---

6. ஜான் மற்றும் பவுலா சன்ஃபொர்ட், எலியா ஹௌஸ், USA: www.elijahhouse.org Also on YouTube

நாம் என்ன கொடுக்கின்றோமோ அதுவே நமக்குக் கிடைக்கும் என்று இந்த கட்டளை தீர்மானிக்கின்றது. நல்ல காரியங்களைக் கொடுத்தால், நல்லது கிடைக்கும். கெட்ட காரியங்களைக் கொடுத்தால், கெட்ட காரியங்கள் திரும்பக் கிடைக்கும்.

**சாட்சி**
**நான் மனம்திரும்பிய பின்பு கர்த்தர் எனது சகோதரரை மாற்றினார்**


*"எனது சகோதரர் குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டு இருந்தார். 'எனது சகோதரர் ஒருகுடிகாரர்' என்று தான் நான் சொல்லுவேன். இப்படி நான் எனது சகோதரரைக் குற்றப்படுத்தி, நியாயந்தீர்த்ததில் இருந்து நான் மனம் திரும்பி, 'எனது சகோதரர் இதில் இருந்து விடுதலையடைவார்' என்று சொன்னேன். சில மாதங்களில் எனது சகோதரர் குடிபழக்கத்தினை நிறுத்தி விட்டார்."*

*"மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னி யாதிருப்பார்."* ***(மத்தேயு 6:14-15).***

*"ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்பு கிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்."* ***(மத்தேயு 7:12 முன்பாகம்).***

*"நீ செய்தபடியே உனக்கும் செய்யப் படும்; உன் செய்கையின் பலன் உன் தலையின் மேல் திரும்பும்."* ***(ஒபதியா 15 பின் பாகம்).***

## நியாயந்தீர்க்காதிருங்கள்



*"நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின் படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்."* ***(மத்தேயு 7:1-2 மற்றும் தொடர்ந்து வருவது).***

*"அன்றியும், தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலரைக்குறித்து, அவர் ஒரு உவமையைச் சொன்னார். இரண்டு மனுஷர் ஜெபம் பண்ணுபம்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று; தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர், ஆகிய மற்ற மனுஷரைப் போலவும், இந்த*

*ஆயக்காரனைப் போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்...." **(லூக்கா 18:9-14).***

*இந்தப் பகுதியில் குறிப்பிடப்பட்டு இருக்கும் நியாந்தீர்ப்பது என்பது நாம் ஒவ்வொரு நாளும் நமது சூழ்நிலைகள் மற்றும் சந்தர்ப்பங்களில் நாம் எடுக்க வேண்டிய முடிவு களைக் குறிப்பிடவில்லை. இது மக்கள் செய்ததைக் குறித்து நியாயந்தீர்க்காமல் அவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்று நியாயந்தீர்க்கும் செயல் ஆகும். உதாரணமாக,* **அவர்கள் செய்தது** *கெட்டது /முட்டாள் தனமானது / மோசமானது என்று சொல்வதற்குப் பதிலாக* **அவர்கள்** *கெட்டவர்கள் / முட்டாள்கள் / மோச மானவர்கள் என்று நாம் சொல்லுகின்றோம். நாம் மிகவும் சிறப்பானவர்கள், மற்றவர்கள் நமக்குக் குறைவானவர்கள் என்னும் அதிகாரமிக்க எண்ணத் தினால் செய்யப்படும் நியாயத்தீர்ப்பு இது.*

**சாட்சி**

**தனது தகப்பனாரை குற்றம்சாட்டிக் கொண்டிருந்த ஒரு பெண்ணை இயேசுவானவர் மன்னித்து, அவரது கணவரை விடுதலையாக்கினார்**

*"நாங்கள் ஒரு இளம் பெண்ணைச் சந்திதோம். அவரது தகப்பனார் அந்த பெண் ஐந்து வயதாய் இருக்கும் போதே மரித்துப் போனர். அவரது தகப்பனார் ஒரு குடிகாரர். குடித்துப் போதையினால் தெருவில் விழுந்து கிடப்பார். அவரை வீட்டிற்குச் சுமந்து வர வேண்டும். ஒரு இரவு, அவர் தெருவில் விழுந்த போது ஒரு பள்ளத்தில் மூழ்கிப்போனார். இந்த பெண் நல்ல வேலையில் இருந்த ஒரு மனிதரைத் திருமணம் செய்தார். ஆனால் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த கணவர் குடிக்க ஆரம்பித்தார். குடிகாரரானார். குடித்து, தெருவில் விழுவதும், பின்னர் வீட்டிற்குக் கொண்டு வரப்படுவதும் சம்பவித்தது. 'உங்கள் தகப்பனார் குடிக்கும் பழக்கம் உடையவரானதால் அவரைக் குற்றப்படுத்தி இருக்கின்றீர்களா?' என்று இந்த பெண்ணிடம் கேட்டோம். அவர் "ஆம்" என்றார். "அவரால் ஒரு பிரயோஜனமும் இல்லை. இப்படிப் போன்ற ஒரு மனிதரை நாம் திருமணம் செய்ய மாட்டேன் என்றும் கூறினேன்" என்றார். தனது தகப்பனாரைக் குற்றம்சாட்டியதில் இருந்து அவர் மனம்திரும்பி, தான் செய்திருந்த சத்தியத்தை மறுத்தார். தன்னை மன்னிக்கக் கர்த்தரைக் கேட்டார். அந்த இரவில் மிகவும் குடித்ததால் அவரது கணவர் வீட்டிற்குச் சுமந்து கொண்டு வரப்பட்டார். ஆனால் அப்போது அவருக்கு விரோதமாக அவர் எதுவும் சொல்லவில்லை. அடுத்த நாள் அவர் தனது குடிப்பழக்கத்தை அறிக்கை செய்து, அந்த பெண்ணிடமும், கர்த்தரிடமும் மன்னிப்பு கேட்டார்."*

*இதனை நாம் செய்யக் கூடாது என்று வேதாகமம் எச்சரிக்கின்றது. நாம் "பாரபட்சமின்றி" இருக்க வேண்டும் என்று கூறுகின்றது. சில மக்கள் நன்றாக படித்தவர்களாக இருக்கலாம். சிலர் அப்படி இருப்பதில்லை. சிலர் பணக்காரரர்களாக இருப்பார்கள். சிலர் அப்படி இருக்க முடிவதில்லை. எனினும், கர்த்தருடைய கண்களில் நாம் சரிசமமான விலைமதிப்பு மிக்கவர்கள். நாம் நியாயந்தீர்க்கக் கூடாது என்று நமக்குக் கூறப்பட்டு இருக்கின்றது. நாம் நம்மை நேசிப்பது போன்று சுற்றத்தாரையும் நேசிக்க வேண்டும்.* ***(யாக்கோபு 2:1-9).*** *இந்த விதமான நியாயத்தீர்ப்புகள் நாம் முக்கியமில்லை என்று நினைக்கும் காரியங்கள் பற்றிய சிறிதான முறுமுறுப்பு அல்லது பிடிக்காத உணர்வு அல்லது எரிச்சலாகக் கூட இருக்கலாம். ஆனால் அவைகளுக்குப் பெரிதான ஆவிக்குரிய முக்கியத்துவம் உண்டு. அது க்ர்த்தருடைய அன்பின் நியதிக்குப் புறம்பானது.*

*"நாம் விதைப்பதை அறுப்பது" பற்றிய உலக அளவிலான நியாய விதிகளில் சில அம்சங்கள். மற்றவர்கள் செய்வதைக் குறித்து நாம் குற்றப்படுத்தும் அதே காரியங்களைத்தான் நாமும் செய்ய விரும்புகின்றோம்.* ***(ரோமர் 2:1).***

## அதிகரித்தல்

*"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படுமென்றார்."* ***(லூக்கா 6:38).***

*அதிகரிப்பின் இந்த சட்டம் தான் நாம் ஆசீர்வாதமாக இருப்பதற்கும், இன்னும் அதிகமான ஆசீர்வாதங்களைப் பெறுவற்கும் கர்த்தர் விரும்புகின்ற வழி. எனினும், இந்த சட்டமானது நல்ல மற்றும் தீய ஈவுகளுக்கு சமமாகப் பொருந்தும். இது மன்னிக்கமுடியாத தன்மை, முறுமுறுப்பு, கசப்புணர்வு, அற்பத்தனம் போன்றவைகளுக்கும் பொருந்தும். ஆசீர்வாதம், இரக்கம், தாராள மனது மற்றும் உற்சாகப்படுத்துவதற்கும் ஒரே சமமான அளவில் பொருந்தும். உதாரணமாக, யார் மீதாகிலும் மன்னிக்கமுடியாத தன்மையோ அல்லது கசப்புணர்வோ இருக்கும் என்றால், மற்றவர்களிடம் இருந்தும் பெரிதான அளவில் நாம் அதிகமான மன்னிக்கமுடியாமையையும், கசப்பையும் நாம் பெறுவோம். நான் யாரை நியாயந்தீர்த்தோமோ அப்படியே மாறிவிடுவோம், அதனை விட மோசமாகவும் மாறிவிடுவோம்!*

இந்த நான்கு சட்டங்களும் இணைந்து வேலை செய்கின்றன. இது நம்மைச் சுற்றிலும், இருக்கின்ற மற்ற மக்களையும் ஆளுகை செய்யும் அளவிற்கு மிகவும் வலுவானது. இது அவர்களை அவர்களது குணத்திற்கு மாறான விதத்தில் நடக்கச் செய்கின்றது. நாம் நல்லதை விதைத்த இடங்களில், மற்றவர்கள் தங்களுடைய குணத்திற்கு மாறாக நம்மிடம் பரிவாகவும் நாம் இருக்கச் செய்ய முடியும். எனினும், நாம் கெட்டதை விதைத்த இடங்களில் மக்களை அவர்கள் குணத்திற்கு மாறாக நம்மிடம் இரக்கமின்றியும் இருக்கச் செய்ய முடியும். நமது கெட்ட எண்ணங்கள் அவர்களை அசுத்தப்படுத்துகின்றது. ***(எபிரேயர் 12:14-15).***

ஒரு பெற்றோருக்கு எதிராக குற்றம் கண்டுபிடிப்பதும், அதன் தொடர்ச்சியாக குற்றப்படுத்தும் தீர்ப்புகள் உண்டாவதும் நம்மை மிகவும் பாதிக்கும். நமது சொந்த தகப்பனாருக்கு விரோதமாக குற்றப்படுத்தும் தீர்ப்பு உண்டு பண்ணும் போது, அத்தனை மனிதருடனான உறவில் நாம் விதைத்ததை அறுக்கும் அபாயம் உண்டு. நாம் கடந்த காலத்தில் செய்திருந்த குற்றப்படுத்தும் நியாயத்தீர்ப்புகளை நாம் மறந்திருக்கலாம். ஆனால் கெட்ட காரியங்களை அதன் முடிவாக அறுவடை செய்கின்றோம். இந்தக் குற்றப்படுத்தும் நியாயத்தீர்ப்புகளை உண்டு பண்ணும் போது, நாமும் அவைகளையே செய்ய நம்மையே குற்றப்படுத்துகின்றோம். நமது குற்றப்படுத்துதல் மற்றவர்களுடைய நடக்கையையும் நம்மை ஆளுகை செய்யத்தக்கதாக அவர்களையும் அசுத்தப்படுத்துகின்றது. உதாரணமாக, ஒரு மனுசனுடைய தாய் அவன் வளர்ந்து வரும்போது அவனைக் கட்டுப்படுத்தினார் என்றால், அவரை எதிர்த்து, தனது இதயத்தில் அவரை நியாயந்தீர்த்த அவர் இன்னும் பெரியவரானதும், தனது மனைவியும், உடன் வேலை செய்யும் பெண்களும் தன்னைக் கட்டுப்படுத்துவதாக அவர் காணலாம். தனது தாய்க்கு விரோதமாக அவர் உண்டு பண்ணிய நியாயத்தீர்ப்பு அவரைச் சுற்றிலும் இருக்கும் மற்ற பெண்களையும் அசுத்தப்படுத்துகின்றது. இது அவர்களை அவரது அம்மா அவரிடம் எப்படி நடந்து கொண்டாரோ அப்படியே நடக்கச் செய்கின்றது.

நாம் எப்போதும் குற்றப்படுத்தும் நியாயத்தீர்ப்பினை உண்டாக்கும் போதெல்லாம் குற்றப்படுத்தும் நியாயத்தீர்ப்பின் தாக்கத்தினைப் பெலப்படுத்தும்படியாக உறுதியெடுத்துக் கொள்ளுகின்றோம். ஒரு உதாரணம் இதுவாக இருக்கலாம்: 'என்னை எனது தந்தை அடித்தார் (உண்மை); அவர் மோசமானவர். அவர் கெட்டவர் ***(குற்றப்படுத்தும் நியாயத்தீர்ப்பு);***

*நான் வளரும் போது, நான் இப்படி மோசமாக இருக்க மாட்டேன் அல்லது எனது குழந்தைகளை அடிக்க மாட்டேன்* ***(சத்தியம் செய்வது).*** *ஆனால் அப்படி வளர்ந்து, தனக்குக் குழந்தைகள் உண்டானதும், தன்னால் தனது சொந்த பிள்ளைகளை அடிக்காமல் இருக்க முடியவில்லை எனபதை அறிந்து கொண்டார். தனது தந்தைக்கு எதிராக தான் உண்டாக்கிய குற்றப்படுத்தும் நியாயத்தீர்ப்பு இப்போது செயல்பட்டு, தான் தனது தந்தையை எதற்காக குற்றம்சாட்டினாரோ, எதனை தான் செய்யவே மாட்டேன் என்றாரோ அதனையே செய்யும்படியாகச் செய்தது. சத்தியம் செய்வது எதிர்மறையான விளைவுகள் உடையது. அவை நமது தேர்வை கட்டுப்படுத்தும். அது அழிவிற்குரியது.* ***(நியாயாதிபதிகள் 11:29-35; மத்தேயு 14:9).*** *'பரிச்சேதம் சத்தியம் செய்ய வேண்டாம்!'* ***(மத்தேயு 5:33- 34 முன்பாகம்).*** *நாம் செய்த சத்தியம் (நல்லதோ அல்லது கெட்டதோ) குறித்து நாம் மனம் திரும்பலாம். அவற்றை மறுத்து, அவை நம்மைப் பாதிக்காதவாறு தடுத்து நிறுத்தும்படி கர்த்தரைக் கேட்கலாம்.*

*சில நேரம் நாம் நம்மைக் குறித்து எதிர்மறையான எண்ணங்கள் கொண்டிருக்கலாம். நாம் நம்மைக் குறிப்பிட்ட சிலருக்குக் கீழானவர்களாக நாம் கருதிக்கொண்டிருக் கலாம். அவர்கள் கூறுவதும் நினைப்பதும் நாம் கூறுவதையும், நினைப்பதையும் விடச் சிறந்தவை என மதிக்கலாம். நாம் அவர்களைப் "பெரிய மக்கள்" என்று காண்கின்றோம். நம்மை 'சிறியவர்களாகக்' கருதுகின்றோம். இதனை நாம் செய்யக் கூடாது என்றும் ஓரவஞ்சனை இல்லாது இருக்க வேண்டும் என்றும் வேதாகமம் நம்மை எச்சரிக்கின்றது.*

*நம்முடைய வாழ்வில் கர்த்தரானவர் எதிர்மறையான சூழ்நிலைகள் தொடரக் கூடாது என்று விரும்பும் அளவிற்கு அவர் நம்மை நேசிக்கின்றார். நாம் சுகமாக்கப்பட்டு அவரது கிருபையை முழுமையாக அனுபவித்து, நமக்காக அவர் வைத்திருக்கும் அவரது ஆசீர்வாதங்களில் மகிழும்படியாக முழுவதுமாக விடுதலையடைந்து காணப்பட அவர் விரும்புகின்றார். நாம் உண்டாக்கியிருக்கும் நியாயத்தீர்ப்புகள் குறித்து அறிந்து, அவைகளில் இருந்து மனம் திரும்பி, நம்மையும், நம்முடைய நியாயத்தீர்ப்புகள் நம்மில் கொண்டு வந்த மாசு நீங்கவும் கர்த்தர் நம்மைக் கழுவும்படியாகக் கேட்கவேண்டும். மற்றவர்களில் உள்ள தெய்வீகமற்ற செயல்களை நாம் அங்கீகரிக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புவதில்லை ஆனால், அவர்கள் யார் என்பதற் காக அவர்களைக் கனப் படுத்த வேண்டும் என்று*

*விரும்புகின்றார். உதாரண மாக, நம்மை நமது பெற்றோர் தவறாக நடத்தி இருந்தால் அல்லது புறக்கணித்திருந்தால் கூட, நாம் அவர்களைக் கனப் படுத்த வேண்டும். காரணம் நமக்கு வாழ்வு தர கர்த்தர் அவர்களைப் பயன்படுத்தி இருக் கின்றார். நாம் நமது சக கிறிஸ்தவர்களையும் மதிக்க வேண்டும். (ஒவ்வொரு மீண்டும் பிறந்த கிறிஸ்தவர் களிடமும் இயேசு கிறிஸ்து வானவர் வசிக்கின்றார்) நமது சக மனுசர்களையும் நாம் கனப்படுத்த வேண்டும். (மனிதர்கள் கர்த்தருடைய சாயலினால் படைக்கப்பட்டு இருக்கின்றனர்)*

*நாம் மற்ற மனிதர்களைக் குறித்து உண்டுப் பண்ணிய குற்றப்படுத்தும்*

*நியாயத்தீர்ப்புகளை நாம் ஒரு வேளை மறந்து போய் இருக்கலாம். ஆனால், அதன் 'கெட்ட கனி' நமது வாழ்வில் இன்னும் காணப் படலாம். பலமுறை இந்த குற்றப்படுத்தும் நியாயத்தீர்ப்புகளை நமது **குழந்தைப்பருவத்தில்** செய்திருக்கலாம். நாம் அதனை மறந்து இருக்கலாம். நாம் அதன் பாதிப்புகளில் இருந்து விடுதலையாகும்படி அவைகளை நமக்கு வெளிப்படுத்த பரிசுத்த ஆவியானவரைக் கேட்க வேண்டும்.*

**யாருக்காகிலும் விரோதமாக நீங்கள் நியாயம் தீர்க்கும் குற்றம்சாட்டை செய்திருப்பீர்கள் என்றால், அதற்கான ஜெபக் கையேடு:**

- **அவர்களை கனவீனப்படுத்தி/நியாயம் தீர்த்த விதம் குறித்து மனம் திரும்புங்கள்**
- **இயேசுவின் நாமத்தில் அந்த நியாயத் தீர்ப்புகளை மறுத்து விடுங்கள்**
- **இந்த குற்றப்படுத்தும் நியாயத்தீர்ப்பு களினால் உண்டாகும் எதிர்மறையான விளைவுகளை அகற்றி விடக் கர்த்தரைக் கேளுங்கள்**
- **நீங்கள் பதிலுக்கு செய்த சத்தியங்களை மறுத்து, அகற்றி விடுங்கள்**
- **உங்களையும் அந்த நபரையும் கர்த்தர் ஆசீர்வதிக்கக் கேளுங்கள்**
- **உங்கள் இதயத்தில் இயேசுவானவர் (மீண்டும்) வரவும், பரிசுத்த ஆவியினால் முழுவதுமாக நிரப்பவும் கேளுங்கள்.**

*சத்தமாக ஜெபிக்க கையேடாக பயன்படுத்தத்தக்க ஒரு ஜெபம் இங்கே தரப்பட்டு உள்ளது.*

**குற்றப்படுத்தும் நியாயத்தீர்ப்புகளை உடைக்க ஜெபம்**




*“பரலோகப் பிதாவே, குற்றம் கண்டுபிடித்து, மக்களுக்கு எதிராக குற்றப்படுத்தும் நியாயத்தீர்ப்புகளை உண்டு பண்ணி நான் தவறு செய்துவிட்டேன் என்று அறிக்கையிடுகின்றேன். **(உங்களது குறிப்பிட்ட நியாயத்தீர்ப்பு களை, கர்த்தரிடம் சத்தமாக சொல்லுங்கள். ஒவ்வொன்றையும் சொல்லும் போது விவரமாகவும், சத்தமாகவும் அவரிடம் சொல்லுங்கள்).** இது பாவம் என்று அறிக்கை செய்து நான் மனம் திரும்புகின்றேன். இந்த பாவத்தினை விட்டுவிடவும் நான் உம்மிடம் திரும்பி வரவும் விரும்புகின்றேன். தயவாய் என்னை மன்னியும்.”*

*“இயேசுவின் அதிகாரமுள்ள நாமத்தினால், இந்த நியாயத்தீர்ப்புகளை **(அவைகளை பெயரிடுங்கள்)** மற்றும் சத்தியங்களை **(அவைகளை பெயரிடுங்கள்)** நான் உடைக்கின்றேன். எனது குற்றப்படுத்தும் நியாயத்தீர்ப்புகளின் விளைவுகள், சத்தியம் பண்ணுதலின் விளைவுகள் இப்போதில் இருந்து என்னையும், யாரையும் இனி பாதிக்காதவாறு தயவாய் தடுத்து நிறுத்தும். பரலோகத் தகப்பனே, தயவாய் என்னை மன்னியும். இயேசுவின் இரத்தத்தினால் என்னை கழுவி, பொல்லாப்பில் இருந்து என்னை விடுவியும். ஆண்டவராகிய இயேசுவே, தயவாய் எனது இதயத்தில் வந்து, உமது பரிசுத்த ஆவியினால் என்னை முழுவதுமாய் நிரப்பி, என்னை மாற்றி, பரிசுத்தமாக்கும்”*

*“நான் **(நபர்களின் பெயர்கள்)** அவர்களை ஆசீர்வதிக்கின்றேன். இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்கின்றேன். ஆமென்.”*

# எதிர்மறையான வார்த்தைகளில் இருந்து விடுதலை

*"இனிய சொற்கள் தேன்கூடு போல் ஆத்துமாவுக்கு மதுரமமும், எலும்புகளுக்கு ஒளஷதமுமாகும்." **(நீதிமொழிகள் 16:24).***



*"மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்." **(நீதிமொழிகள் 18:21).***

*"ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்." **(மத்தேயு 12:37).***

*"ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே." **(யோவான் 6:68 பின் பாகம்)***

*"அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம்." **(யாக்கோபு 3:9).***

வார்த்தைகள் வல்லமையுள்ளவை. *"உண்டாகட்டும்..."* என்று கர்த்தர் பேசினார். இந்த அண்ட சராசரம் உண்டானது. ***(ஆதியாகமம் 1:3 முன்பாகம்).*** நாம் பேசும் வார்த்தைகளும் மிகவும் வல்லமையுள்ளவை! அவை ஜீவன் அல்லது மரணம், ஆரோக் கியம் அல்லது சுகவீனத்தின் வல்லமையை உடையது. நாம் கூறுகின்ற அனைத்தும் முக்கியமானது என்று அறிந்து கொள்வது பெரிதான காரியம்.

பிசாசானவன் சகோதரர்

**சாட்சி**

**எனது வார்த்தைகள் மரணத்தைக் கொண்டு வந்தது**

*"பல ஆண்டுகளாக நான் தான் எனது உடல் ஊனமுற்ற சகோதரனைக் கவனித்து வந்தேன். சில நேரங்களில் அது எனக்குக் கடினமாக இருந்தது. ஒரு நாள், நான் மிகவும் எரிச்சலடைந்து, அவனுடன் கோபமடைந்து, 'நீ ஏன் ரோட்டில் சென்று மரிக்கக்கூடாது?' என்று கூறினேன். ஐந்து வாரங்களுக்குப் பிறகு அவன் ஒரு வாகனத்தில் அடிபட்டு மரித்த போது நான் மிகவும் அதிர்ச்சி அடைந்தேன். அவனது வாழ்வில் எனது வார்த்தைகள் ஒரு சாபமாகவே மாறின."*

களைக் குற்றம் சாட்டுகின்றவன் என்று பெயர் பெற்றவன். வெளிப்படுத்தல் 12:10 நம்மைக் குற்றம்சாட்டும்படியாக பிசாசானவன் கர்த்தர் முன்பாக நிற்கின்றான் என்று கூறுகின்றது. பிசாசானவன் பரலோகில் இருந்து தூர எறியப்பட்டதை இயேசுவானவர் கண்டார். ***(லூக்கா 10:18; ஏசாயா 14:12-15; எசேக்கியேல் 28:12 முன்பாகம்-18)*** கர்த்தர் சாத்தானை தன்னுடைய பிரசன்னத்தில் இருந்து விரட்டினார். காரணம் அவனது எதிர்ப்பு. கர்த்தரைப் போன்று இருக்க விரும்பியதே அவனது எதிர்ப்பு. அதன் காரணமாகவே அவன் பரலோகில் இருந்து விரட்டப்பட்டான். அவன் தொடர்ந்து கர்த்தருடைய மக்களுக்கு எதிராகக் குற்றம் சாட்டுகின்றான். கிறிஸ்தவ சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் மீது நாமும் குற்றச்சாட்டுகளுடன் அவரது சமூகத்தில் வரும் போது கர்த்தர் துக்கமடைகின்றார். ***(1 நாளாகமம் 16:22).*** இதனைப் பிசாசு செய்த போது கர்த்தர் பொறுத்துக்கொள்ளவில்லை. ஆகவே, நாம் இதனை செய்யும் போதும் பொறுத்துக்கொள்ள மாட்டார். நம்மைப் பற்றியும், மற்ற மக்களைப் பற்றியும் எதிர்மறையாகப் பேசுவதை நாம் நிறுத்த வேண்டும். இதற்கு மாறாக நம் ஒவ்வொருவருக்குள்ளும் கிறிஸ்து வசிக்கின்றார் என்று அறிந்து கொள்ளவேண்டும்!

சில நேரம் நாம் என்ன செய்கின்றோம் என்பதை அறியாமல் பிசாசானவனுக்கு துதியைக் கொடுக்கின்றோம். ஒரு போதகர் கீழ்கண்ட அனுபவம் குறித்து எழுதினார். கர்த்தரிடம் அவரிடம் பேசினார்: *"நீ ஏன் உனது ஆலய ஆராதனையில் பிசாசிற்கு முதல் இடம் கொடுக்கின்றாய்? அவனையும் அவனது பிசாசின் கூட்டங்களையும் நீ ஏன் ஆராதிக்கின்றாய்?"* அவர் பதிலாக, "ஆ ஆண்டவரே, நான் ஒரு போதும் அப்படிச் செய்த தில்லை. நான் எங்களது ஆராதனைகளில் உம்மைத்தானே முதலாவதாக வைத்தேன்!" கர்த்தர் *'இல்லை' என்று கூறி, "முதலாவது பிசாசினை நீ கட்டுகிறாய். அவைகளுடன் பேசி அவைகளை விரட்டுகிறாய். அவை இந்த ஆராதனையை விரும்புகின்றன. உன்னிடம் இருந்து இந்த ஆராதனையைப் பெற இந்த பிசாசுகள் பல மைல்கள் தூரத்தில் இருந்து வருகின்றன. என்னை நீ துதி. அந்தப் பிசாசுகளை நான் கவனித்துக் கொள்ளுவேன்" என்றார்.* (ஜட்சன் கார்ன்வாலின் *"லெட் அஸ் பிரைஸ்").*

இது அந்தப் போதகருக்கு மிகுந்த அதிர்ச்சியாக இருந்தது. அது எங்கள் அனைவருக்கும் ஒரு எச்சரிப்பாக இருந்தது. இதில் எங்களுக்கான பாடம் என்னவென்றால், 'கண்களை இயேசுவானவர் மீது வைக்க வேண்டும்', எங்கள் கவனம் முழுவதும் கர்த்தர் செய்யும் காரியங்கள் மீது இருக்க வேண்டும்,

எல்லா நேரமும் அவரைத் துதிக்க வேண்டும், கர்த்தர் எதிராளிகளைக் கவனித்துக் கொள்ளுவார் என்பதே. ***(யூதா 9)*** இந்த நெறிமுறை ஜெபத்தில் பொருந்துகின்றது.

*“சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவை களெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்.”* ***(பிலிப்பியர் 4:8).***

> “நான் மூன்று முறை ‘அல்லேலூயா’ என்று சொல்லிப் பார்த்த போது, பிசாசானவன் குப்புற விழுந்து அசைய முடியாமல் கிடந்ததை நான் ஒரு தரிசனத்தில் கண்டேன். நான் எழும்பிய போது, அந்த தரிசனம் குறித்து சிந்தித்தேன்.அப்போது நான் கடினமான நேரங்களிலும் கூட மூன்று அல்லேலூயாக்களை எளிதாகச் சொல்ல முடியும் என்று நான் உணர்ந்து கொண்டேன்.”

வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்விற்கு எந்த சூழ்நிலையிலும் கர்த்தரைத் துதிப்பது மிகவும் அவசியம். அப்படிச் செய்வது கர்த்தரைப் பற்றிய நமது புரிந்து கொள்ளுதலை கட்டி எழுப்பி, அவர் எத்தனை அதிசயமானவர் என்பதையும், அவர் நமக்காக இது வரையும் எவ்வளவாய் செய்திருக்கின்றார் என்றும், அவரால் முடியாதது எதுவும் இல்லை என்பதையும் நினைவுபடுத்துகின்றது. துதி பிசாசை தோற்கடிக்கின்றது. ஆவிக்குரிய யுத்தத்தில் இதுவே மிகவும் வலிமையானது. ***(சங்கீதம் 149:6-9).***

நமது மனதிற்கும், நமது வார்த்தைகளுக்கும் படைப்புத் திறன் உண்டு. நமது நினைவில் நாம் சிந்திப்பது உண்மையாகக் கூடும். எதிர்மறையான வார்த்தைகளும், சிந்தனைகளும் நம்மையும் நாம் தவறாகப் பேசி மற்றும் சிந்திக்கின்றவர்களையும் அடிமைப்படுத்த பிசாசிற்கு வாய்ப்பு தருகின்றது. நாம் நல்ல காரியங்களைப் பரெய்க் கொள்ளும் போது, நமது கவனத்தினால் அவற்றை ஊக்குவிக்கின்றோம் ‘கிரேஸ் அண்ட் ஃபர்கிவ்னஸ்’ என்னும் புத்தகத்தில், கரோல் மற்றும் ஜான் அர்னாட் தனது வாழ்வை பற்றி ஆய்வு செய்த ஒரு போதகரைக் குறிப்பிடுகின்றார். அவருடைய அனுதின நினைவுகளில் 80 சதவீதம் எதிர்மறையான, குற்றம் காண்கின்ற, நியாயம்தீர்க்கும் நினைவுகளாக இருப்பதைக் கண்டறிந்தார். வெறும் 20 சதவீதம் மட்டுமே சரியானவைகள்.

**சாட்சி**

**இயேசுவானவர் ஒரு உறவை மறுசீரமைத்தார்**

*"பல ஆண்டுகளாக தீராத வியாதியினால் பாதிக்கப்பட்டு இருந்த ஒரு மனிதனுக்காக அவருடன் இணைந்து ஜெபித்தோம். அவருக்கு விரோதமாக யாராவது எதிர் மறையான வார்த்தைகளைப் பேசினார்களா? என்று கேட்ட போது அவர் தனது தந்தை கூறினதை நினைவு கூர்ந்தார்: "உன்னுடைய வாழ்வு நன்றாக இருக்காது" இந்த வார்த்தைகள் சாபமாக செயல்பட்டது. அந்த மனிதன் தனது தந்தையை மன்னித்தார். ஆசீர்வதித்தார். மூன்று நாட்களுக்குப் பிறகு அந்த மனிதனுடைய தந்தை இயேசுவைப் பற்றி கனவு கண்டார். அவருடன் ஒரு உறவில் இல்லை என்பதை அவர் உணர்ந்து கொள்ளவில்லை. அவர் மனம் திரும்பி, இயேசுவைத் தனது இதயத்தில் அழைத்தார். 'மீண்டுமாய் பிறந்தார்' அவர்கள் உறவு சுகமடைந்தது."*

இது பெரும்பாலான மக்களைப் பொறுத்த அளவில் உண்மை என்பதையும் அவர் கண்டறிந்தார். நம்மைப் பற்றியும், மற்ற மக்களைப் பற்றியும், சூழ்நிலைகளைப் பற்றியும் நாம் எதிர்மறையான காரியங்களைச் சொல்லுகையில், பிசாசின் வேலையை அவனுக்குப் பதிலாக நாமே செய்கின்றோம். ***(வெளிப்படுத்தல் 12:9-11).***

*''தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனை சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்திற்கு ஏதுவாயிருப்பான்.''* ***(மத்தேயு 5:22 பின்பாகம்).***

நமது எண்ணங்களும், பேச்சும் நேர்மறையாக இருக்கும் என்பதை உறுதிசெய்யும் வகையில் நாம் நமது சிந்தனையைப் பயிற்றுவித்து, நமது நாவுகளை அடக்கிக் கொள்ள வேண்டும். மக்களைக் குற்றப்படுத்து

**எதிர்மறையான வார்த்தைகளைப் பேசி இருந்தால் உங்களுக்கான ஒரு ஜெபக் கையேடு:**

- **பேசின எதிர்மறை வார்த்தைகளுக்காக மனம் திரும்பி, கர்த்தர் உங்களை மாற்றும்படியாகக் கேளுங்கள்**
- **இயேசுவின் நாமத்தினால், அதனை விட்டு விட்டு, நீங்கள் உங்களைப் பற்றியும், மற்றவர்களைப் பற்றியும் பேசின எதிர்மறையான, குற்றப்படுத்தும் ஒவ்வொரு வார்த்தைகளையும் உடைத்து விடுங்கள்**
- **அதற்கு மாறாக, ஆசீர்வாதமான வார்த்தைகளைப் பேசுங்கள்**
- **(மீண்டுமாய்) உங்கள் இதயத்தில் இயேசுவானவரை அழைத்து, பரிசுத்த ஆவியினால் முழுவதுமாக உங்களை நிரப்பக் கேளுங்கள்**

*கீழ்கண்ட ஜெபம் சத்தமாக ஜெபிக்கப்படலாம்.*

**நாம் பேசின எதிர்மறையான வார்த்தைகளுக்காக மனம் திரும்புதலின் ஜெபம்**



*"பிதாவாகிய தேவனே, நான் எனது சகோதரரை குற்றம்சாட்டினேன் என்று அறிக்கை செய்கின்றேன். நான் என்னையும். எனது சக கிறிஸ்தவர்களையும் நியாயம்தீர்த்து, அவர்கள் மீது குற்றம் சாட்டி, கனவீனப்படுத்திவிட்டேன். அவர்களுக்கு விரோதமாக ஜெபித்து, உம்மிடமும் அவர்களைப் பற்றி குறை கூறி இருக்கின்றேன். தயவாய் என்னை மன்னியும்.* ***(குறிப்பிட்ட வார்த்தைகளை, சம்பவங்களை மன்னிக்கக் கர்த்தரிடம் கேளுங்கள்...)*** *நான் மனம் திரும்புகின்றேன். நான் மாற விரும்புகின்றேன். தயவாய் என்னை மாற்றும். மரணத்தின் வார்த்தைகளைப் பேசாமல், ஜீவனின் வார்த்தைகளைப் பேசத்தக்க வண்ணமாய், சபிக்க அல்ல, ஆசீர்வதிக்க எனக்கு உதவி செய்யும்."*

*"இயேசுவின் அதிகாரமுள்ள நாமத்தினால், எனக்கு எதிராகவும், மற்றவர்களுக்கு எதிராகவும் நான் பேசின எதிர்மறையான வார்த்தைகளையும், எண்ணங்களையும் நான் உடைக்கின்றேன். பரலோக பிதாவே, இயேசுவின் இரத்தத்தினால் இந்த எதிர்மறையான வார்த்தைகளையும், அதன் விளைவுகளையும் தயவாய் கழுவி சுத்திகரியும். எங்களைப் பொல்லாப்பில் இருந்து விடுவியும். எனது இதயத்தில் தயவாய் வந்து, பரிசுத்த ஆவியினால் என்னை முழுவதுமாக நிரப்பும். இயேசுவின் நாமத்தில் ஆமென்."*

*வதற்குப் பதிலாக, நாம் ஆசீர்வதித்து, கனப்படுத்தி, உற்சாகப்படுத்தி ஒருவரை ஒருவர் விசுவாசத்தில் கட்ட வேண்டும். மன்னிக்க வேண்டும். குற்றம் சாட்டக் கூடாது. இதுவே நமது ஜெபம் மற்றும் அனுதின வாழ்வில் மற்றும் உரையாடல்களில் நமது அணுகுமுறையாக இருக்க வேண்டும்.*

*இந்த நேரத்தில் நம்மிடம் காணப்படும் குறிப்பிட்ட சில சம்பவங்களை அவர் கழுவித் தூய்மைப்படுத்த விரும்புகின்றாரா என்று காண்பிக்க நாம் ஆண்டவராகிய கர்த்தரைக் கேட்க வேண்டும்.*

பிள்ளைகளைப் பாதிக்கக் கூடிய காரியங்களை பெற்றோர்கள் அடிக்கடி சொல்லுவது உண்டு. உதாரணமாக, 'நீ பிறந்திருக்கவே கூடாது என்று விரும்புகின்றேன்' அல்லது 'நீ ஒரு சோம்பேறி, உனது வாழ்க்கை ஒன்றுக்கும் ஆகாது' போன்றவை.

பெரும்பாலும் நம் மீது அதிகாரம் இருக்கும் மக்களான பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள் போன்றவர்களின் எதிர்மறையான வார்த்தைகள் நம்மை மிகவும் கடுமையாகப் பாதிக்கக்கூடியவை. குறிப்பாக நாம் இள வயதினராக இருக்கும் போது. குழந்தைகளுக்கு பெற்றோரினால் கொடுக்கப் படும் சில பட்ட பெயர்கள் கூட அந்த குழந்தைகளின் வாழ்க்கையில் சாபமாக இருக்க முடியும். ஆசிரியர்கள் நம் மீது சொல்லும் எதிர் மறையான வார்த்தைகள் கூட நமது வாழ்வைப் பாதிக்கும். நம்மைக் குற்றப் படுத்தின, நம் மீது எதிர்மறை யான வார்த்தைகளைப் பேசின அத்தனை பேரையும் நாம் மன்னிக்க வேண்டும். நமது வாழ்வில் பேசப்பட்ட சாபங்களைப் போன்று இருக்கும் எதிர்மறையான வார்த்தைகளின் வல்லமையை இயேசுவின் நாமத்தினால் உடைத்து, அதன் விளைவுகளில் இருந்து நம்மை சுத்திகரிக்க கர்த்தரைக் கேட்க வேண்டும்.

சில நேரங்களில் நம்மை பாதிப்பது நமக்கு எதிராக பேசப்பட்ட எதிர்மறையான வார்த்தைகள் மட்டும் அல்ல. ஒரு வார்த்தையும் பேசப்படாத போதும். அல்லது முழுமையான அமைதி காணப்படும் போதும் அல்லது உற்சாகமூட்டப்படுவது குறையும் போதும் பாதிப்பு உண்டாகலாம். உதாரணமாக, பெற்றோரோ, ஆசிரியரோ அல்லது துணைவரோ உங்களிடம் பேசாமல் இருந்து, உங்களுக்கு 'அமைதியான சிகிச்சை' தருவார்கள் என்றால், நீங்கள் விலைபோகாதவர்கள், பேசத்தகுதி இல்லாதவர்கள் அல்லது ஒரு மனிதன் என்னும் தகுதி கூட இல்லாதவர்கள் என்று நினைக்கலாம்.

ஊக்கப்படுத்தப்படுவதை நாம் பெறாத போது, அது நம்மை காயப்படுத்த ஆரம்பிக்கும். உதாரணமாக, ஒரு குழந்தை தேர்வில் 92% சதவீதம் மட்டுமே பெற்று இருக்கும் போது, அதன் தகப்பனார்: 'உனது சகோதரன் 96% சதவீதம் பெற்று இருக்கின்றான்' என்று ஒரு பதிலைக் கொடுக்கலாம். அல்லது அந்த சிறப்பான முடிவு குறித்து உங்கள் தகப்பனார் எந்த ஒரு வார்த்தையும் சொல்லாமல் இருக்கலாம். அது நீங்கள்

*முக்கியமானவர் அல்ல என்றும், அவருக்கு உங்கள் மீது விருப்பம் இல்லை என்றும் நீங்கள் நினைக்கும் படியாகச் செய்யும். அது மிகவும் காயப்படுத்தும். முக்கியமான காரியம் அந்த நபரை மன்னிக்க வேண்டும் அல்லது கர்த்தர் அவர்களை மன்னிக்கும்படியாகக் கேட்க வேண்டும்.*

*சில நேரம் நாம் நம்மையே தவறாக நியாயந்தீர்த்து விடுகின்றோம்* ***(லூக்கா 18:9-14 இல் வரும் பரிசேயர் போன்று).*** *சில நேரம் நம்மைப் பற்றிய நம்முடைய வார்த் தைகள் அல்லது நினைவுகளே அதிக எதிர்மறையாகக் காணப்படும். உதாரணத்திற்கு 'நான் பிரயோஜனமற்றவன்' அல்லது 'நான் மரித்திருந்தால் நல்லது'. இந்த வார்த்தைகளும் அல்லது நினைவுகளும் நமது வாழ்வில் சாபத்தைப் போன்று செயல்படும். மன அழுத்தம், அல்லது தற் கொலை எண்ணம் போன்ற எண்ணங்கள் உண்டாகி உடல் நல பிரச்சனைகள் உண்டாகலாம். சுயமான நியாயத்தீர்ப்புகள், நம்மையே குறைவாக நினைப்பது பெரிதான அளவில் நினைப்பது (பெருமை) போன்றவைகளில் இருந்து மனம் திரும்பவேண்டும். இயேசுவின் அதிகாரமுள்ள நாமத்தினால் இந்த எதிர்மறையான பாதிப்புகளில் இருந்து நாம் நம்மையே விடுதலையாக்க முடியும்.*

**உங்களுக்கு விரோதமாக யாராவது எதிர்மறையான வார்த்தைகளைப் பேசியது உண்டென்றால் அதற்கான ஜெபக் கையேடு:**

- **உங்களைக் காயப்படுத்திய வார்த்தை களைச் சொன்ன அந்த நபர்களை மன்னியுங்கள்**
- **நீங்கள் பதிலுக்குச் சொல்லிய பாவமான வார்த்தைகளை விட்டு மனம் திரும்புங்கள்**
- **இயேசுவின் நாமத்தினால், உங்கள் மீது சொல்லப்பட்ட எதிர்மறையான வார்த்தை களின் வல்லமையை உடையுங்கள்**
- **உங்களைச் சபிக்கின்றவர்களை ஆசீர்வதியுங்கள்**
- **உங்கள் இதயத்தில் இயேசுவானவர் (மீண்டும்) வர அழைத்து, பரிசுத்த ஆவியானவர் முழுவதுமாக நிரப்பக் கேளுங்கள்.**

இதயத்தில் இருந்து சத்தமாக சொல்லப்படக் கூடிய ஒரு ஜெபம் இங்கே தரப்பட்டு உள்ளது.

**என் மீது சொல்லப்பட்டு இருக்கும் எதிர்மறையான வார்த்தைகளின் வல்லமையை உடைக்க ஜெபம்**



*“அன்பு, பரலோகத் தகப்பனே, இயேசுவின் நாமத்தினால், எனக்கு விரோதமாக எதிர்மறையான வார்த்தைகள் சொல்லப்பட்டு இருக்கின்றன என்று நான் அறிக்கையிடுகின்றேன்* ***(உங்களுக்கு விரோதமாக சொல்லப்பட்டு இருக்கும் அந்த குறிப்பிட்ட வார்த்தைகளை கர்த்தரிடம் சொல்லுங்கள்...)*** *நான் அந்த மனிதர்களை* ***(அவர்களது பெயர்களை, அவர்கள் கூறிய எதிர்மறையான வார்த்தைகளை... அவர்கள் சொல்லி இருக்க வேண்டிய, ஆனால் சொல்லாத நேர்மறையான வார்த்தைகளை... சத்தமிட்டு சொல்லுங்கள்).***

*“இயேசுவின் அதிகாரமுள்ள நாமத்தினால், நான் எதிர்மறையான வார்த்தைகளின் மூலமாக எனது வாழ்வில் வைக்கப்பட்ட சாபங்களை மறுத்து, உடைக்கின்றேன். அதன் விளைவுகளில் இருந்து என்னை விடுவிக்கின்றேன். இயேசுவின் இரத்தத்தினால் என்னைக் கழுவித் தூய்மையாக்கும். பொல்லாப்பில் இருந்து என்னை விடுவியும். நான்* ***(மனிதரின் பெயர்களைக் கூறுங்கள்)*** *ஆசீர்வதிக்கின்றேன். எனது இதயத்திற்குள் வந்து, என்னை முழுவதுமாக பரிசுத்த ஆவியினால் நிரப்பும். ஆமென்.”*

கூடுதல் இணைப்புப் பகுதியில், நாம் கிறிஸ்துவில் யார் என்று கூறும் வேதாகம வார்த்தைகளின் அட்டவணை தரப்பட்டு இருக்கின்றது. இந்த வேத வார்த்தைகளைத் தியானித்து, நமக்காகவும், மற்ற விசுவாசிகளுக்காகவும் ஜெபிப்பது நமது விசுவாசத்தினைக் கட்டுகின்றது.

# பணப் பிரச்சனைகளில் இருந்து விடுதலை



*"ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்."* ***(1 தீமோத்தேயு 6:9-10).***

இயேசுவானவர் பணம் மற்றும் சொத்துக்கள் குறித்து உவமைகளில் மிக அதிகமாகப் பேசி இருக்கின்றார். பணம் குறித்து மனிதனுடைய அணுகுமுறையை அவர் அறிவார். ஆனால், வாழ்வில் இந்த முக்கியமான காரியங்கள் குறித்து அவருடைய கண்ணோட்டத்தையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றார். நாம் பிழைப்பதற்குப் பணம் வேண்டும். ஆனால் பணம் மீதான ஆசை அழிவிற்கு வழி நடத்தும். கர்த்தர் மீது நம்பிக்கை வைக்கும் போது, நமக்குத் தேவையான அனைத்தையும் அவரே தருகின்றார். எல்லாவற்றுடன் அவரை நேசிக்க வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். ஒரு மனிதனிடத்தில் மாற்றப்படவேண்டிய கடைசி காரியம் அவனது பாக்கெட் என்று சிலர் சொல்லுவதுண்டு! பணத்தை விட கர்த்தரை நம்புவது தான் நாம் கற்றுக் கொள்ளவேண்டிய கடைசி காரியம். இதனைக் குறித்து அதிகமான அறியாமை உள்ளது. உலக சிந்தனை நம்மில் அதிகமாக வேரூன்றி இருக்கின்றபடியினால் அதிகமான வேதபகுதிகளை நாம் புறக்கணித்து விடுகின்றோம். கர்த்தரைத் தேடுவதற்குப் பதிலாக செழிப்பைத் தேடுகின்றபோது, அது எப்போதும் பிரச்சனைகளையே நமக்குக்

> "நாம் கர்த்தருடைய கிருபையின் சுவிசேஷத்தினால் மிக அதிகமாக ஆசீர்வதிக் கப்பட்டு இருக்கின்ற படியினால், 10 சதவீதத்திற்கும் குறைவாகக் கொடுக்க கனவிலும் நினைக்கக் கூடாது"
> (டன்கன் வாட்கின்சன், 2014).

கொண்டு வரும். பணம் உடையவர்களாக இருப்பதில் தவறு இல்லை, அதிகமான பணத்தினாலும் பிரச்சனை இல்லை. ஆனால் நமக்கான கர்த்தருடைய நோக்கம் என்னவென்றால் நாம் அதனைத் தேவையுள்ளவர்களுக்குக் கொடுத்து உதவுவதிலும், அவரது பெரிதான கட்டளையை நிறைவேற்றுவதிலும், செலவளிப்பதிலும் தாராளமாக இருக்க வேண்டும் என்பதே. ***(மத்தேயு 25:34-46; லூக்கா 12:33-34; யாக்கோபு 5:1-6).***

தசம பாகம் என்பது ஆபிரகாமினால் ஸ்தாபிக்கப்பட்டு ***(ஆதியாகமம் 14:20),*** யாக்கோபினால் தொடரப்பட்டு ***(ஆதியாகமம் 28:22),*** மோசேயினால் நியாயப் பிரமாணத்தில் ***(லேவியராகமம் 27:30 -32),*** சேர்க்கப்பட்டது. பழைய ஏற்பாட்டில் மக்கள் தங்களுடைய பயிர் அல்லது கனிகளின் அறுவடையில், சம்பாதித்த பணம் மற்றும் பெற்றுக் கொண்ட அனைத்திலும் 10 சதவீதத்தினைக் கர்த்தருக்குக் கொடுத்தனர். தசம பாகம் பரிசுத்தமானது. அது கர்த்தருடையது. 10 சதவீத தசமபாகம் குறைவானது.

*'இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்' என்று இயேசுவானவர் கூறினார்.* ***(மத்தேயு 22:21; மாற்கு 12:17; லூக்கா 20:25).***

ஒரு பிரசங்கியார் இவ்வாறு கூறினார்: 'தசமபாகம் என்பது இந்த பூமியில் நாம் வாழுவதற்கும், இந்த காற்றை நாம் சுவாசிப்பதற்கும் கொடுகின்ற வாடகைப் பணம்!' 10 சதவீதத்திற்கும் அதிகமாக நாம் கர்த்தரிடம் கொடுக்கும் ஈவு எதுவும் காணிக்கை. கர்த்தர் இந்தக் காணிக்கைகளை ஆசீர்வதிக்கின்றார். தசம பாகம் மற்றும் காணிக்கைகள் கொடுப்பவர்களுக்கு இன்னும் போதுமான அளவில் இருக்கின்றது! இந்த தொகுப்பாளர்களின்

**தசமபாகத்தினை எப்படி கணக்கீடு செய்வது**

உங்களது மாதாந்திர வருமானம் அனைத்தையும் சேர்த்து அதன் மொத்த மதிப்பு Rs.5000 வருகிறதென்று வைத்துக்கொள்ளுங்கள்.

(நீங்கள் ஒரு வணிகர் என்றால், இந்த மாதத்தின் லாபத்தைக் கணக்கீடு செய்யுங்கள்)

மொத்த வருமானத்தையும் 10 ஆல் வகுக்க வேண்டும்

Rs. 5000/10= Rs. 500

இந்த உதாரணத்தில், மாத தசமபாகம் Rs.500

இந்த தசமபாகம் நீங்கள் செல்லுகின்ற உங்கள் சபையில் செலுத்தப்பட வேண்டும்.

அனுபவத் தின்படி பணப் பிரச்சனை இருக்கின்றதென்று சந்தித்த பெரும்பாலான கிறிஸ்தவர்கள் வரி செலுத்துவதற்கு முன் தசம பாகம் என்பதை இது வரையும் செலுத்தியதே இல்லை. பணப் பிரச்சனை உள்ள ஊழிய ஸ்தாபனங்களுடைய பணப் பிரச்சனையின் காரணம் அவர்கள் தங்கள் ஊழியத்தில் வரும் லாபத்தில் இருந்து தங்களுடன் தொடர்பு இல்லாமல் இருக்கும் ஊழிய ஸ்தாபனங்களுக்கு 10 சதவீதத்தைக் கொடுக்கவில்லை என்பதே. நம்மால் கொடுக்கமுடியாது என்பதற்காக நாங்கள் தசமபாகம் கொடுக்கவில்லை என்பது உலக சிந்தனை. ஆனால் கர்த்தருக்கு தசமபாகம் கொடுக்காமல் இருப்பதினால், அவரது பாதுகாப்பின் கரம் நம்மை விட்டு எடுக்கப்படுகின்றது. நமது பணமும் எவ்வளவு தூரம் போக வேண்டுமோ அவ்வளவு தூரம் செல்லுவதில்லை. உதாரணமாக, கருவிகள் செயல் இழந்து போகலாம். உணவு கெட்டுப் போகலாம். கடன் அதிகமாகலாம். மிகவும் இயல்பான வழியில் வாழுவதற்குப் போதுமான பணம் உண்மையாகவே இல்லை என்றாலும், நாம் முதலாவது அவருக்குக் கொடுத்தால் நமக்குப் போதுமானது இருக்கும் என்று கர்த்தர் சொல்லுகின்றார்.

*“மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள். தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே. நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள். என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும் படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டுவாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணி களைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோ வென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். பூமியின் கனியைப் பட்சித்துப் போடுகிறவைகளை உங்கள் நிமித்தம் கண்டிப்பேன்; அவைகள் உங்கள் நிலத்தின் பலனை அழிப்பதில்லை. வெளியிலுள்ள திராட்சக்கொடி பழமில்லாமற்போவதுமில்லை என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது எல்லா ஜாதிகளும் உங்களைப் பாக்கியவான்கள் என்பார்கள்; தேசம் விரும்பப்படத்தக்கதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.”* ***(மல்கியா 3:8-12).***

கர்த்தர் அவரை சோதிக்கும்படியாக அழைக்கும் ஒரே வேதபகுதி இது மட்டும் தான்.

['பண்டசாலை' என்பது நாம் பங்கேற்கும் சபை என்று புரிந்துகொள்ளப்படுகின்றது. அதுவே நாம் ஆவிக்குரிய உணவு

பெறும் இடம். ***(உபாகமம் 14:22-23).***]

நாங்கள் 'செழிப்பின் சுவிசேஷத்தினை' ஊக்குவிக்கவில்லை, ஆனால் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்படியவே ஊக்கப்படுத்துகின்றோம்.

கர்த்தருக்கு முன்பாக நாம் உண்மையாக இருக்க வேண்டும். நாம் தசம பாகம் கொடுக்கவில்லை என்றால், நாம் அதனில் இருந்து மனம் திரும்பி, அவரிடம் இருந்து திருடியதற்காக நாம் கர்த்தரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். அதன் பின்பு நாம் செல்லும் சபைக்கு நமது மொத்த வருமானத்தில் இருந்து (வரி மற்றும் இதர குறைப்புகளுக்கு முன்பு) 10% கொடுக்க வேண்டும்.

**தசமபாகம் கொடுக்காமல் இருந்ததற்கான மனம் திரும்புதலின் ஜெபம்[7]**



"அன்பு பரலோகப் பிதாவே, என்னிடம் இருப்பதெல்லாம் உம்மிடம் இருந்து வந்தது. எனக்கென்று நீர் தந்தவைகளுக்காக நான் உமக்கு நன்றி கூறுகின்றேன். தசமபாகம் பரிசுத்தமானது என்றும் அது உம்முடையது என்றும் நான் புரிந்துகொள்கின்றேன். உமக்குரிய தசமபாகத்தினை நான் உமக்குத் தரவில்லை என்பதை அறிக்கையிடுகின்றேன். ***(மல்கியா 3)*** உமக்குச் சொந்தமானதை நான் வைத்துக்கொண்டதற்காக வருந்துகின்றேன். நீர் என்னை மன்னிக்க வேண்டும். உமது அதிகாரமுள்ள நாமத்தினால் என் மீது இருக்கும் சாபத்தினை உடைக்கின்றேன். இப்போதில் இருந்து, எனது எல்லா வருமானத்தில் இருந்தும் தசமபாகம் கொடுக்க அர்ப்பணிக்கின்றேன். இது வரைக்கும் கடந்த காலத்தில் நான் செலுத்தியிராத தசம பாகங்களில் இருந்து நான் என்னையே விடுவிக்கின்றேன். நன்றி தகப்பனே. ஒவ்வொரு வழியிலும் என்னை ஆசீர்வதியும். மற்றவர்களுக்கும், உமது இராஜியத்தின் முன்னேற்றத்திற்கு இப்போதில் இருந்து பொருளாதார விஷயத்தில் ஆசீர்வாதமாய் இருக்கக் கிருபை செய்யும். இயேசுவின் நாமத்தில் ஆமென்."

---

7. க்லிவ் பிக்: த ரெவெலேஷன் ஆஃப் ஃபினான்சியல் ரினிவல், 1998, நியு வைன் மினிஸ்ற்றிஸ்.

அப்படியே, நமது பண விஷயங்களில் உண்மையாக இருந்து, கொடுக்க வேண்டியதைக் கொடுத்து, லஞ்சம் தவிர்க்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகின்றார்.

> "கர்த்தருக்குச் சிறப்பானதைக் கொடுங்கள். அவர் உங்களுக்குப் பெருகச் செய்து தரவார். அது அன்பு, விசுவாசம், பணம் அல்லது எந்தவொரு நல்லகாரியமாகவும் இருக்கலாம். அவர் உங்களுக்கு இப்போதே ஒரு அற்புதத்தைத் தர விரும்புகின்றார்."
>
> (ஓரல் ராபர்ட், விசுவாச வித்து அற்புதங்கள், 1982)

தசமபாகத்தினை விட புதிய ஏற்பாட்டு மாதிரி உலக சிந்தனைக்கு இன்னும் சவாலானது. கேட்பவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கூட்டத்தார்களிடம் இயேசுவானவர் கூறினார். ***(மத்தேயு 5:42; லூக்கா 6:30).*** "உங்களுக்கு உள்ளவைகளை விற்று தேவையுள்ளவர்களுக்குக் கொடுங்கள்" ***(லூக்கா 12:33).*** அவர் ஒரு இளம் வாலிபனிடம் தனக்கு இருக்கின்ற எல்லாவற்றையும் விற்று ஏழைகளுக்கு பணத்தைக் கொடுக்க வேண்டும் என்று கூறினார், ***(மாற்கு 10:21; லூக்கா 18:22).*** ஆதி சபை மக்கள் தங்களிடம் இருந்த அனைத்தையும் பகிர்ந்து கொண்டபடியினால் ஒருவருக்கும் குறைவு இல்லாதிருந்தது. ***(அப்போஸ்தலர் 2:45).*** இந்த அணுகுமுறையே நம்மிடம் இருக்க வேண்டும் என்று நிரூபங்களும் நம்மை ஊக்கப்படுத்துகின்றன. ***(2 கொரிந்தியர் 8:11-15, 9:7-15; 1 யோவான் 3:17).*** நாம் தசமபாகம் கொடுக்கக் கற்றுக் கொண்டதும், நாம் மற்றவர்களிடம் இன்னும் தாராளமாக இருக்க நம்மைச் சவாலிட ஆரம்பிப்பார்.

> **சாட்சி**
> **ஆசீர்வாத வாய்க்காலாக மாறுவது**
>
> *"14 ஆண்டுகளுக்கு முன்பு, தசம பாகம் குறித்துக் கற்றுக் கொண்டேன். குறிப்பாக முழு தசமபாகமும் பரிசுத்தமானது, அது கர்த்தருடையது, அது நாம் செல்லும் சபைக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று கற்றுக் கொண்டேன். நான் மனம்திரும்பி, தசம பாகம் சரியாகக் கொடுக்க ஆரம்பித்தேன். அந்த நேரம் நான் பெரும் கடனில் இருந்தேன். எனது திருமணமும் பாதிக்கப்பட்டு இருந்தது. இப்போது எனது திருமணம் திடமாக இருக்கின்றது. இப்போது எங்களுக்குக் கடன் இல்லை. கடனில் இருந்து மீண்டு வரவும், தெய்வீக அழைப்பில் கடந்து வரவும் அதிகமான மக்களுக்கு எங்களால் உதவி செய்ய முடிந்தது."*

*"சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல,*

*தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரண முடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர் களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்." **(2 கொரிந்தியர் 9:6-8).***

அனேக கிறிஸ்தவர்கள் கடன் உள்ளவர்களாக இருக்கின்றனர். இது சாதாரண வாழ்வின் ஒரு பகுதி என்று நினைக்கின்றனர். ஆனால் இது உலக சிந்தனை. மருத்துவ செலவு அல்லது குடும்பம் மற்றும் நண்பர்களின் தேவைக்காக கடனிற்குள் தள்ளப்படுகின்ற சூழ்நிலைகள் உண்டு. நமக்குக் கடன் இருக்கக் கூடாது என்று வேதாகமம் கூறுகின்றது. 'ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்' **(ரோமர் 13:8).** அல்லது கர்த்தருக்குப் பணிவிடையாளர்களாக இருப்பதற்குப் பதிலாகக் கடன்பட்டவர்களுக்கு வேலையாட்களாக மாற வேண்டும் ***(நீதிமொழிகள் 22:7)*** கடன் வேதனைக்கு வழி நடத்தும். அதிகமான தற்கொலைகளுக்குக் கடனே காரணம். நமக்குத் தேவையானதை அவர் தருவார் என்று நம்பிக்கை வைத்து, கர்த்தர் நம்மிடம் தந்திருக்கும் ஆசீர்வாதங்களுக்குச் சரியான பாதுகாப்பாளர்களாக இருக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும். ***(பிலிப்பியர் 4:6).*** பேராசை மற்றும் பொருள் ஆசையினால் நாம் கடன்பட்டோம் என்றால், நாம் மனம் திரும்பி, நம்மை மன்னிக்கும்படியாகக் கர்த்தரிடம் கேட்க வேண்டும். பின்னர் கர்த்தரிடம் உதவி கேட்டு நமது கடனை உடனடியாக தீர்க்க நாம் தீவிரமான முயற்சி செய்ய வேண்டும்.

*"இரண்டு எஜமான்களுக்கும் ஊழியம் செய்ய முடியாது."* ***(மத்தேயு 6:24).***


கடனில் இருந்து விடுபட நாம் நமது செலவை மிகக் குறைவாக வைத்திருக்க வேண்டும். தேவையானதை மட்டும் வாங்க வேண்டும். நாம் விரும்பியதை எல்லாம் அல்ல. நம்மால் இயன்ற அளவையும் மிஞ்சி வாங்குவதை நாம் நிறுத்த வேண்டும். *"பிறனுக்குள்ள யாதோன்றையும் இச்சியாதிருப்பாயாக"* ***(யாத்திராகமம் 20:17).*** நமக்கு இருக்கின்றதையும் விட விலை கூடிய ஏதோ ஒன்று நமக்கு உண்மையாகவே தேவை என்றால், நமக்குப் போதுமான பணம் கிடைக்கும் வரைக்கும், நமக்குக் கிடைக்கும் பணத்தை ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு நாளும் சிறிது சிறிதாகச் சேர்த்து வைக்க வேண்டும்.

“முதலாவது தேவனுடைய இராஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.” ***(மத்தேயு 6:19-34 குறிப்பாக 6:33).*** இதனை மனதிற்கொண்டு, நாம் மாற வேண்டும். காரணம் இந்த காரியங்களில் பெரும்பாலானவர்களுக்கு உலக சிந்தனையே உள்ளது. ஆனால், நாம் கீழ்படிதலுடன், ஆசீர்வாதங் களுக்குக் கர்த்தர் தந்த வாக்குத்தத்தத்தின் மீதும் நம்பிக்கை வைக்கும் போது, அவர் நம்முடன் இருக்கின்றார் என்பதையும், அவர் நம்மைக் கவனிக்கின்றார் என்பதையும், நமக்குத் தேவையான அனைத்தும் அவரிடம் இருக்கின்றது என்பதையும் நாம் காண்கின்றோம். ***(சங்கீதம் 23:1).***

> கர்த்தருடைய வழியில் செய்யப்படும் கர்த்தருடைய வேலையில் கர்த்தருடைய ஆசீர்வாதம் ஒரு போதும் குறையவே குறையாது.
> (ஹட்சன் டைலர்)

சுவிசேஷம் பரவுவதற்கு நாம் தாராளமாகக் கொடுக்க வேண்டும் என்று புதிய ஏற்பாடு நமக்குக் கூறுகின்றது. நம்மில் பலர் இதனைப் போதுமான அளவில் செய்வது இல்லை. காரணம் நமக்கு எதிர்காலத்திற்குப் போதுமான பணம் இல்லாது போய் விடும் என்று நாம் பயப்படலாம். கொஞ்சமாகக் கொடுப்பதைக் குறித்தே நாம் பயப்பட வேண்டும் என்பதே கர்த்தருடைய கண்ணோட்டம் ***(யாக்கோபு 5:1-6; 3 யோவான் 5-8).***

## தெய்வீக சுதந்திரத்தினை மீட்டெடுப்பது



அனேக மக்கள் அவர்கள் பெற்றோர் அல்லது சில உறவினர்கள் போல இருப்பார்கள். சரீரப்பிரகார மான சாயலும், ஏன் ஆவிக் குரிய குணாதிசயங் களும் கூட குடும்ப வழியிலேயே கொடுக்கப்படுகின்றன. அனேக குணங்கள் மற்றும் தன்மை களை நாம் நமது பெற்றோரிடம் இருந்தே சுதந்தரித்துக் கற்றுக் கொள்கின்றோம். இது நல்லதற்கு என்று கர்த்தர் விரும்பினார். ஆனால் கெட்ட குணங்களும் இப்படியே கொடுக்கப்படுகின்றன. சில பெலன்கள், மொழித்திறன் போன்றவைகள் அல்லது உதவக் கூடிய சுபாவங்கள் குடும்பங்களில் காணப்படலாம். ஆனால், சில குறிப்பிட்ட பிரச்சனைகள் அல்லது பாவங்கள் (உதாரணமாக பாலியல் பாவம், பணச் சீரழிவு, குடிப்பழக்கம், மற்றும் சுகவீனம்) போன்றவையும் அந்த குடும்ப வழிகளைப் பின்பற்றுகின்றன. அவை சுதந்தரிக்கப்படலாம், அல்லது 'தலைமுறை தலைமுறையாக' வரலாம்.

எல்லா பாவமும் தலைமுறை தலைமுறையாக வரக்கூடியது என்று சொல்லப்படலாம். காரணம் அது ஆதாம் மற்றும் ஏவாளிடம் இருந்து உண்டாகி, நம்முடைய அனைத்து தலைமுறைகளுக்கும் கொடுக்கப்பட்டு இருக்கின்றது. அறிக்கையிடப்படாத நமது மூதாதையரின் பாவங்கள் (தலைமுறை பாவம்) தொடர்ந்து வரும் மக்கள் மீது ஒரு பாதிப்பை உண்டாக்கி, அவர்களும் அதே விதமான பாவத்தில் விழுந்து விடச் செய்யும்.

கர்த்தருடைய கட்டளை உடைக்கப்படுகின்ற போது, பாவம் உண்டாகின்றது. அந்த குறிப்பிட்ட மனிதனின் மீது சாபம் விழுகின்றது. அதனால், அந்த சாபமானது உறவினர்கள் மீதும் மற்ற தலைமுறையினர் மீதும் உண்டாகும்.

பாவத்திற்கு (விக்கிரக) 3-4 நான்கு தலைமுறைகளுக்கு

எதிர்மறையான விளைவுகளும், கீழ்படிதலுக்கு 1000 தலைமுறைகளுக்கு ஆசீர்வாதமும் உண்டாயிருக்கும் என்று பத்து கட்டளைகள் கூறுகின்றது. ***(யாத்திராகமம் 20:4-6).*** பாலியல் பாவத்திற்கு 10 தலைமுறைகளுக்கு எதிர்மறையான பாதிப்பு இருக்கும். ***(உபாகமம் 23:2).***

கர்த்தர் நல்லவர். மன உருக்கம் உள்ளவர். அன்பு நிறைந்தவர். பாவத்தினால் நாம் அவரை விட்டுப் பிரிக்கப்பட்டு இருப்பதை அவர் விரும்புவது இல்லை. நமது பாவம் அல்லது மூதாதையரின் பாவத்தினால் நாம் சாபங்களினால் அல்லது எதிர்மறை விளைவுகளினால் துன்பப்படுவதை அவர் விரும்பவில்லை. ஆனால் நமக்கு நாமே உதவிட முடியாது. அதன் காரணமாகவே அவர் நமக்கு ஒரு பதில் தந்திருக்கின்றார்; இயேசுவானவரே அந்த பதில்.

வேதாகமத்தில் 'இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை' என்று கர்த்தர் கூறுகின்றார். ***(எபிரேயர் 9:22).*** பாவம் மறைந்து போவது இல்லை. ***(நெகேமியா 1:6-7).*** நல்லவராக இருக்க முயற்சி செய்து அல்லது அதனை மறந்து விட்டு பாவத்தினை அகற்றிவிட முடியாது. அதற்கு ஒரே வழி இயேசுவானவர் நமது பாவத்தினை எல்லாம் தனது பாவமாகக் கருதி எடுத்துக் கொண்டார் என்று நம்பி விசுவாசிப்பது மட்டுமே. அவர் தனது இரத்தத்தினைச் சிந்தி நம்முடைய தண்டனையை அவர் எடுத்துக் கொண்டு நமது பாவத்திற்கு விலைக்கிரயம் கொடுத்தார்.

கர்த்தரிடம் நமது பாவங்களை அறிக்கை செய்து அவர் நம்மை மன்னிக்கக் கேட்காதவரை நமது பாவம் நம்மிடம் தான் இருக்கும். இயேசுவானவர் பாவத்தினை மன்னிக்கின்றார். அவரது இரத்தம் பாவத்தினை முழுமையாகக் கழுவி சுத்தப்படுத்துகின்றது. (நீதிப்படுத்தப்படுதல்). எதிர்மறையான குடும்ப குணாதிசயங்களில் இருந்தும், பாவங்களில் இருந்தும் நாம் விடுபடுவது என்பது, நமது பெற்றோரையும், மற்ற குடும்ப அங்கத்தினர்களையும் ***<u>மன்னிப்பதைச்</u>*** சார்ந்தே இருக்கின்றது. நமது சந்ததியினர் அந்த எதிர்மறையானப் பிரச்சனையில் இருந்து விடுவிக்கப்படுவது, அந்த பாவங்களில் இருந்து நாம் ***<u>மனம் திரும்புவதையே</u>*** சார்ந்து இருக்கின்றது.

*"மனம் திரும்புங்கள். உங்களுடைய எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்புங்கள். அப்பொழுது அக்கிரமம் உங்கள் கேட்டுக்குக் காரணமாய் இருப்பதில்லை."* ***(எசேக்கியேல் 18:30-32).***

*நாம் மீண்டும் பிறந்த போது, நமது எல்லா பாவங்களும் அகற்றப்பட்டன. நாம் 'நீதிப்படுத்தப்பட்டு', நீதிமான்களானோம். கர்த்தருடைய குடும்பத்தில் நமக்கு ஒரு இடம் தரப்பட்டது.* ***ஆனால்*** *நமது பாவத்தின் விளைவுகள் அனைத்தும் அகற்றப்பட்டிருக்க வேண்டும் என்று இல்லை. உதாரணமாக, நாம் பணத்தைத் திருடி, மனம்திரும்பி இருந்தால், கர்த்தர் நம்மை மன்னிக்கின்றார். ஆனால் நாம் யாரிடம் இருந்து பணம் திருடினோமோ அவருக்கு அதனைத் திரும்பக் கொடுக்க வேண்டும். இதில் சட்ட ரீதியான விளைவுகள் கூட இருக்கலாம். இயேசுவானவர் எனது பாவக் கடன்களை எடுத்து விட்டார் ஆனால் நான் திருடியதை திருப்பிக் கொடுக்க வேண்டியது அவசியம். நாம் திருடியிருந்த அந்த மனிதனிடம், அவரது குடும்பத்தினரிடம், அவரது பிள்ளைகளிடம், பேரப் பிள்ளைகளிடம் இதினால் விளைவுகள் இருக்கும். நமக்கும், நமது பிள்ளைகளுக்கும், பேரப் பிள்ளைகளுக்கும் விளைவுகள் இருக்கும். இதினால் காவல்துறைக்கும், சமுதாயத்திற்கும், விளைவுகள் இருக்கும்.* **நமது பாவம் ஒரு போதும் ஒரு தனிப்பட்ட காரியம் அல்ல.**


*வேதாகமத்தில் 2 சாமுவேலின் புத்தகம் 11 மற்றும் அதனைத் தொடர்ந்து வரும் அத்தியாயங்களில் ஒரு பரிதாபகரமான உதாரணம் தரப்பட்டுள்ளது. தாவீது அரசன் கித்தியனாகிய உரியாவின் மனைவியை இச்சித்து, அவளுடன் விபசாரம் செய்தார். அவள் கர்ப்பம் தரித்த போது, உரியாவை தன்னுடைய மனைவியுடம் உறங்கச் செய்து, தனது பாவத்தினை மறைக்க உரியாவை ஏமாற்ற முயற்சித்தார். அப்படி உரியாவை ஏமாற்ற முடியாத போது, அவன் யுத்தக் களத்தில் கொல்லப்படும்படியாகக் காரியங்களை ஏற்படுத்தினார். இதன் விளைவாக, அந்த பாவத்தினால் கர்ப்பம்தரித்த அந்த குழந்தை மரித்துப் போனது. தாவீது எத்தனைதான் உபவாசமிருந்து, ஜெபித்து, வருந்தியும் அந்த குழந்தை வாழவில்லை. ஆனால் தாவீதின் குழந்தைகள், பேரக் குழந்தைகள், இன்னும் தொடர்ந்த தலைமுறையினர் என அவரது குடும்பத்தினர் பாலியல் பாவத்தினாலும் கொலையினாலும் பாதிக்கப்பட்டனர். கர்த்தர் தாவீதின் விபசாரத்தையும், கொலையையும் மன்னித்தார். ஆனால் அதன் விளைவுகள் தாவீதின் சந்ததியாரிடம் தொடர்ந்தன.*

நாம் ஒரு முறை பாவம் செய்யும் போது, நாம் அந்த பாவத்தினை அது போன்றே மீண்டும் செய்வதற்கான வாய்ப்பு அதிகம். அப்படியே, நமது பெற்றோர்/மூதாதையரின் பாவங்களும் நாமும் அப்படியே பாவம் செய்யக்கூடிய அளவில் ஒரு 'திறந்த வாசலை' உண்டு பண்ணுகின்றன. இந்த குறிப்பிட்ட பாவங்களை (நம்முடைய மற்றும் மூதாதையரின் பாவங்கள்) அறிக்கை செய்து, அதில் ஈடுபட்டவர்களை மன்னித்து, அதன் விளைவுகளில் இருந்து கர்த்தர் நம்மைத் தூய்மைப்படுத்தக் கேட்க வேண்டும். பின்னர் அந்த குறிப்பிட்ட பாவங்களுக்குக் 'கதவை அடைக்கவும்' அந்த முறையிலேயே நாமும் நம்முடைய குடும்பத்தினரும் அப்படியே அந்த பாவத்தினைச் செய்யும்படி உண்டாகும் தூண்டுதல்களை அகற்றக் கர்த்தரைக் கேட்க வேண்டும். ஒரு சாபம் செயல்படும் என்றால், இயேசுவின் அதிகாரமுள்ள நாமத்தினால் அந்த சாபத்தினை உடைக்கக் கேட்கலாம். இயேசுவின் அதிகாரமுள்ள நாமத்தினால் அதன் பாதிப்புகளை கர்த்தர் கழுவக் கேளுங்கள்.

*''நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.''* ***(1 பேதுரு 2:24; ஏசாயா 53:5-6).***

*"மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்.''* ***(கலாத்தியர் 3:13).***

நம்மில் அனேகருக்கு, நாம் மீண்டுமாய் 'பிறக்கும் போது' சில பாவ செயல்களும், சாபங்களும் உடனடியாக அகற்றப்படுகின்றன. இன்னும் சில நம்மைத் தொடர்ந்து பாதிக்கின்றன. உபாகமம் 27 மற்றும் 28 இல், கீழ்படிதலுக்கான ஆசீர்வாதமும், கீழ்படியாமைக்கான சாபங்களும் தரப்பட்டு உள்ளன. நாம் கர்த்தருடன் ஐக்கியமாக இருப்பதையும், அவரது ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்வதையும் கர்த்தர் விரும்புகின்றார். கீழ்படிகின்றவர்களுக்கு வேதாகம் வாக்குப்பண்ணும் முழுமையான ஆசீர்வாதங்களுடன் நம்மில் அனேகர் வாழுவதில்லை. எனவே, சில விதமான சாபத்தில் வாழுவது போன்றே தோன்றுகின்றது.




*சில நேரம் நாம் நமது குடும்பங்களைப் பற்றி ஜெபத்துடன் ஆய்வு செய்வது மிகவும் பயனுள்ள செயலாக இருக்கும். ('உங்கள் குடும்ப வரைப்படத்தினை உண்டுபண்ணுங்கள்' என்பதை பின் இணைப்பில் காணவும்).*

- *எத்தகைய தெய்வீக குணங்களை நாம் நமது பெற்றோர், பெற்றோரின் பெற்றோர் மற்றும் மூதாதையர்களிடம் காண்கின்றோம்? நமது உடன் பிறந்தவர்களில் யார் அந்த குணத்தினைச் சுதந்தரித்து இருக்கின்றனர்?*
- *நம்முடைய மூதாதையர்களிடம் எந்த தெய்வீகமற்ற தன்மைகளைக் காண்கின்றோம்? இந்த தெய்வீகமற்ற குணாதிசயங்களை நம்முடைய உடன் பிறப்புகளில் யார் பெற்று இருக்கின்றார்கள்? உதாரணமாக, பாலியல் பாவம், உடைந்து போன உறவுகள், கோபமான வெளிப்பாடுகள், குற்றம்சாட்டுதல், எதிர்ப்பு, கசப்பு, குடிப்பழக்கம் போன்றவை. நமது குடும்பங்களில் அதிகமான மக்களைப் பாதிக்கின்ற தீவிரமான வியாதிகள் எதுவும் இருக்கின்றதா?*

நாம் சாபத்தின் ஆளுகையின் கீழ் இருக்கின்றோமா என்று எப்படி நாம் கூற முடியும்? வேதாகம ஆசிரியரான டெரிக் பிரின்ஸ், ஒரு மனிதர் அல்லது குடும்பம் சாபத்தின் ஆளுகையில் வாழுகின்றதா என்பதை காண்பிக்கும் ஏழு பாதிப்புகளைக் குறிப்பிடுகின்றார். அவைகள் யாதெனில்:

1. மன நல மற்றும் உணர்வு பாதிப்புகள்
2. மீண்டும் மீண்டும் வருகின்ற அல்லது தீவிரமான வியாதிகள் குறிப்பாக, பரம்பரை வியாதிகள். 'பரம்பரை' என்பது தலைமுறை தலைமுறையாக வரும் சாபத்தினைக் குறிப்பிடும்.
3. அடிக்கடி உண்டாகும் கருக்கலைவு அல்லது பெண்கள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள்
4. உடைந்து போன திருமணங்கள், மற்றும் குடும்ப பிளவுகள்
5. தொடர்ந்து வரும் பணப் பற்றாக்குறை, குறிப்பாக வருமானம் போதுமான அளவிற்கு இருக்கும் போது உண்டாகும் பற்றாக்குறை
6. அவ்வப்போது விபத்துக்களைச் சந்திப்பது
7. குடும்பத்தில் தற்கொலைகள் அல்லது இயற்கைக்கு மாறான மரணங்கள் (இளவயதின் மரணங்கள்) உண்டாவது

ஒவ்வொரு பாவத்திற்கும் சாபத்திற்கும் இயேசுவானவரே பதில் என்பது நல்ல செய்தி. சாபம் ஒரு தனிப்பட்ட மனிதனின் பாவத்தினாலோ அல்லது மூதாதையர்களின் பாவத்தினாலோ வந்திருக்கும் என்றால், அல்லது பில்லி சூனியத்தினால் யாராகிலும் சாபத்தினை உண்டு பண்ணியிருந்தாலோ அல்லது அறியாமல் சொல்லப்பட்ட எதிர்மறையான வார்த்தைகளினால் சாபத்தினை உண்டுபண்ணியிருந்தாலோ, எல்லா பாவத்திற்கும், எல்லா சாபத்திற்கும் இயேசுவானவரே பதில். எல்லா பாவத்தையும் கழுவ இயேசுவின் இரத்தத்திற்கு வல்லமை உண்டு. எல்லா சாபத்தையும் உடைக்க இயேசுவின் நாமத்திற்கு அதிகாரம் உண்டு.

நீங்களோ அல்லது உங்கள் குடும்பத்தினரோ ஒரு சாபத்தின் ஆளுகையின் கீழ் வாழ்ந்துகொண்டிருப்பதாக நீங்கள் எண்ணினால், ஒரு வேளை நீங்கள் உங்கள் பாவத்தினை

*இன்னும் விவரமாக அறிக்கை செய்வதையோ அல்லது இன்னும் முழுமையாக மன்னித்து, மனம்திரும்புவதையோ கர்த்தர் எதிர்பார்க்கின்றார்.*

*உங்களது குடும்பத்தில் சாபம் கிரியை செய்கின்றதா என்பதை நீங்கள் கண்டறிய உங்களுக்கு உதவி செய்யும்படி, ஒரு செயல்படுத்தப் பட்ட குடும்ப சரித்திர வரைபடம் பின் இணைப்புப் பகுதியில் தரப்பட்டு உள்ளது. உங்கள் குடும்ப சரித்திர வரைபடத்தினைத் தயார் செய்ய இதனைப் பயன்படுத்தலாம். அப்படி செய்து உங்கள் குடும்பத்தினை விவரமாகக் காணலாம். இந்த வரைபடம் எந்த விதமான ஆசீர்வாதங்கள் மற்றும் எந்த விதமான பாவங்கள் அல்லது பாதிப்புகள் உங்கள் குடும்பத்தில் சம்பவிக்கிறதென்று நீங்கள் அறிந்து கொள்ள உதவும். அது மேலும் பாவத்தின் வேர், மற்றும் குடும்பத்தில் உள்ள பாதிப்பு, இன்னும் அறிக்கை செய்து மனம் திரும்ப வேண்டிய காரியங்களை அடையாளம் காண உதவும். இதினால் நீங்கள் மன்னிப்பைப் பெற்றுக் கொண்டு விடுவிக்கப்பட முடியும். நம்முடைய குடும்பங்களில் உள்ள சாபத்தின் காரணம் மற்றும் விளைவுகளைப் பற்றி நாம் அதிகமாக அறிந்து கொள்ளும்போது, நாம் அதிகமாக ஜெபத்தின் மூலமாக அவைகளை வலுவாக உடைத்து அகற்ற முடியும்.*

*நான்கு தலைமுறைகளாக விக்கிரகாராதனையில் இருந்து விடுதலையை எந்த குடும்பம் பெற்று இருக்கின்றது? நமது வாழ்வில் சில நேரம் மற்ற காரியங்களைக் கடவுளுக்கும் மேலாக வைப்பதின் மூலமாக நாம் அனைவரும் விக்கிரகாராதனை குற்றம் செய்தவர்களாகவே இருக்கின்றோம்.* ***(1 யோவான் 5:21).*** *தங்களது சொந்த முயற்சியினால் நல்லவராக இருக்க முயற்சி செய்யாதது யார்? நாம் நமது பாவங்களை அறிக்கை செய்து, கர்த்தர் நம்மை மன்னிக்கக் கேட்கும் போது, நாம் மன்னிக்கப்பட்டோம் என்று நிச்சயம் பெறுகின்றோம். பின்னர், நாம் சாபங்கள் மற்றும் விளைவுகளில் இருந்து கர்த்தர் நம்மைக் கழுவக் கேட்கலாம். அவர் அதனைச் செய்வார்.* ***(1 யோவான் 1:9).*** *இதற்குக் கைமாறாக, ஆயிரம் தலைமுறைகளுக்குக் கர்த்தர் விடுதலையையும் ஆசீர்வாதத் தினையும் தருகின்றார்.* ***(யாத்திராகமம் 20:6).***

**தலைமுறை தலைமுறையாக பாவங்கள் இருக்கின்றது அல்லது எதிர்மறையான காரியங்கள் வாழ்வைப் பாதிக்கின்றது என்றால் உங்களுக்கான ஜெபக் கையேடு:**

- **உங்கள் வாழ்விற்காக, உங்கள் குடும்பத்தில் இருந்து பெற்றுக் கொண்ட நல்ல காரியங்களுக்காகக் கர்த்தருக்கு நன்றி செலுத்துங்கள்**
- **எதிர்மறையான காரியங்கள் அல்லது உங்களில், உறவினர்களில் மற்றும் மூதாதையர்களில் இருக்கும் பாவங்களை அறிக்கை செய்யுங்கள்**
- **அந்தப் பாவங்களுக்காகப் பெற்றோரை, உறவினர்களை மற்றும் மூதாதையர்களை மன்னியுங்கள்**
- **இந்தக் காரியத்தில் உங்களது சொந்தப் பாவங்களை விட்டு மனம் திரும்புங்கள்**
- **இயேசுவின் நாமத்தினால், உங்களில் இருந்தும், உங்கள் உறவினர்களில் இருந்தும் அந்த பாவத்தினைச் செய்ய இருக்கும் விருப்பத்தினை அகற்றும் படியாகக் கர்த்தரைக் கேளுங்கள்**
- **இயேசுவின் நாமத்தினால், உங்களிலும் மற்றும்/அல்லது உங்கள் குடும்பம் மீது இருக்கும் சாபத்தினை உடைக்கவும், அதன் பாதிப்புகளைக் கர்த்தர் அகற்றவும் கேளுங்கள்**
- **உங்களது முழு குடும்பத்தையும் ஆசீர்வதியுங்கள். கர்த்தரும் ஆசீர்வதிக்க அவரைக் கேளுங்கள்.**
- **இயேசுவானவரை (மீண்டுமாய்) உங்கள் இதயத்தில் அழைக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் உங்களை முழுவதுமாக நிரப்பக் கேளுங்கள். உங்கள் குடும்ப அங்கத்தினர்களுக்கும் இப்படியே நடக்க அவரைக் கேளுங்கள்.**

*நீங்கள் ஆயத்தமானதும், இந்த ஜெபத்தினைச் சத்தமாக ஜெபிக்கலாம்.*

**பெற்றோர் மற்றும் இதர குடும்பத்தினருக்கு மன்னிப்பிற்கான ஜெபம்**



*"அன்பு பரலோகத் தகப்பனே, எனது பாரம்பரியத்திற்காக உமக்கு நன்றி செலுத்துகின்றேன். எனது குடும்பத்தில்/சமுதாயத்தில் இருந்து நான் பெற்றுக் கொண்ட அனேக நல்ல காரியங்களுக்காக* ***(அவைகளை சொல்லுங்கள்...)*** *நான் மிகவும் சந்தோசப்படுகின்றேன். எனது குடும்பம்/சமுதாயத்தில் நடைபெற்ற எதிர்மறையான காரியங்களை நான் அறிந்துகொள்கின்றேன். நான் அவர்களை* ***(உங்கள் குடும்பங்களில் நீங்கள் மன்னிக்கின்ற மூதாதையர்/ மற்றும் குடும்ப உறுப்பினர்களின் பெயர் தெரியும் என்றால் சொல்லுங்கள்)*** *அவர்கள் பாவம் மற்றும் அவர்கள் நினைத்த தவறான எண்ணங்களுக்காக, சொன்னதும், செய்ததுமான காரியங்களுக்காக மன்னிக்க விரும்புகின்றேன்.* ***(நீங்கள் மன்னிக்கின்ற அந்தக் குறிப்பிட்டப் பாவங்களை, உதாரணமாக தவறாக நடத்துதல், புறக்கணிப்பு, குற்றம்சாட்டுதல் போன்றவைகளை குறிப்பிடுங்கள்).*** *தயவாய் அறிந்தும் அறியாமலும் செய்த இத்தகைய பாவங்களுக்காக அவர்களை, என்னை இன்னும் மீதமுள்ள குடும்பத்தினர்/சமுதாயத்தை மன்னியுங்கள்.*

*"இயேசுவின் இரத்தத்தினால் என்னையும், எனது முழு குடும்பத்தையும்/சமுதாயத்தையும் கழுவுங்கள். இப்போதில் இருந்து எதிர்மறையான காரியங்களை* ***(அந்த எதிர்மறையான காரியங்களை...)*** *நிறுத்தும். இயேசு கிறிஸ்துவின் அதிகாரமுள்ள நாமத்தினால், என்னையும், எனது குடும்பம்/சமுதாயத்தினைப் பாதிக்கின்ற தலைமுறை சாபத்தினை உடைக்கின்றேன். பரலோகப் பிதாவே, என்னைப் பொல்லாப்பில் இருந்து விடுவிக்க உம்மைக் கேட்கின்றேன். இந்த பாவங்களின் விளைவுகளையும், சாபங்களையும் என்னிடம் இருந்தும் மற்றும் எனது குடும்பம் மற்றும் சமுதாயத்தில் இருந்தும் நான் அகற்றுகின்றேன்.*

*"நான் என்னையும், எனது குடும்பம்/சமுதாயத்தையும் ஆசீர்வதிக்கின்றேன். பிதாவே எங்களை ஆசீர்வதிக்கக் கேட்கின்றேன். என்னையும் எனது குடும்பம்/சமுதாயத்தையும் மன்னிக்கக் கேட்கின்றேன். தயவாய் எனது இதயத்தில் (மீண்டுமாய்) வாரும். பரிசுத்த ஆவியானவரால் என்னை முழுவதுமாக நிரப்பும். இயேசுவின் நாமத்தில் ஆமென்."*

முன்பு மன்னிக்கப்பட்ட இந்தப் பாவமான காரியங்களை நாம் மீண்டுமாய் செய்தால், நாம் மீண்டுமாய் அந்த சாபத்தின் கீழ் வந்து விடுவோம். நாம் நமது பாவத்தினை மீண்டுமாய் அறிக்கை செய்ய வேண்டும், அதனில் இருந்து திரும்ப வேண்டும். கர்த்தரிடமாய்த் திரும்ப வேண்டும். மீண்டுமாய் நம்மை மன்னித்து, நம்மை மாற்ற அவரது உதவியைக் கேட்க வேண்டும்.

முந்தினத் தலைமுறைகளை மன்னிப்பதற்கான ஒரு ஜெபம் நாம் குறிப்பிடும் எந்த குழுவினருக்கும் விரிவாக்கப்படலாம். உதாரணமாக, ஒரு பெண் மற்ற பெண்களின் சார்பாக பாவங்களை அறிக்கை செய்யலாம். சபையின் ஒரு அங்கத்தினர் சபை மற்றும் மற்ற அங்கத்தினர்களின் சார்பாக பாவ அறிக்கை செய்யலாம். சமுதாயத்தில் உள்ள ஒருவர் முழு சமுதாயத்தின் சார்பாக பாவங்களை அறிக்கை செய்யலாம். பின்னர் அவர்கள் அந்த பாவங்களை மன்னித்து, இந்த குழுவினரின்/மக்களின் பாவங்களை மன்னிக்க கர்த்தரைக் கேட்க வேண்டும். இப்படியே இது ஒரு வேண்டுதல் ஜெபமாக மாறுகின்றது. இப்படிப்பட்ட வேண்டுதல் ஜெபம் தான் மோசே, தானியேல், நெகேமியா, இன்னும் மற்றவர்களினாலும், இயேசுவினாலும் நிறுவப் பட்டது. ஆண்டவராகிய இயேசுவானவர் யோவான் 20:23 இல்: *"எவர்களுடைய பாவங்களை மன்னிக் கின்றீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும். எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும்"* என்றார். இத்தகைய ஜெபம் வலுவானது. தீவிரமானது. அதன் முடிவுகள் வெகு தூரத்துக்கானவை. ஆகவே, மக்களை, இடங்களை, சமுதாயத்தை, தேசங்களை நாம் எப்போதும் குற்றம்சாட்டுகின்றோம். நாம் மன்னித்து, ஆசீர்வாதங் களைச் சொல்லுவோம் என்றால், நமது ஜெபத்தினால் கர்த்தர் சமுதாயங்களையும், தேசங்களையும் மாற்றுவார்.

பின் இணைப்பில் தரப்பட்டு இருக்கின்ற விரிவான 'தலைமுறைகளின் ஆசீர்வாதத்தைக் கொண்டுவருவதற்கான ஜெபம்' வேதாகம அடிப்படையில் கர்த்தரிடம் இருந்து வரும் சாபத்துடன் இணைந்து காணப்படும் பாவங்களில் இருந்து உருவாக்கப்பட்டு இருக்கின்றது. அதனை நிதானமாகவும், கவனமாகவும் தயவாய் வாசியுங்கள். அந்த ஜெபத்தில் தரப்பட்டு இருக்கும் பாவத்தை நீங்களோ அல்லது உங்கள் குடும்ப

அங்கத்தினர்களோ செய்திருக்கின்றனர் என்று நீங்கள் நினைப்பீர்கள் என்றால், நீங்கள் அந்த ஜெபத்தினைச் செய்ய வேண்டும் என்று உங்களுக்கு ஆலோசனை கூறுகின்றோம். நீங்களோ அல்லது உங்கள் மூதாதையரோ அந்த பாவங்களைச் செய்திருக்க முடியாது என்று நினைத்தால் மீண்டும் எண்ணிப்பாருங்கள்! மக்கள் இந்த பாவங்களைச் செய்தபடியினால் தான் அது வேதாகமத்தில் உள்ளது. நமது மூதாதையர் செய்திருப்பது என்ன என்று யாருக்கும் தெரியாது என்றபடியால், நீங்கள் இந்த ஜெபத்தினை '**ஒரு வேளை செய்திருந்தால்**' என்று சொல்லி ஜெபிக் கலாம். இந்த ஜெபமானது உபாகமம் 27ஐ அடிப் படையாகக் கொண்டு மரியம்மா தம்பி[8] என்பவர் உண்டாக்கிய ஜெபத்தில் இருந்து சற்று மாற்றி அமைக்கப்பட்டு உள்ளது. உங்கள் இதயத்தில் இருந்து இந்த ஜெபத்தை செய்ததும், உங்களது வாழ்வு மீது கர்த்தரிடம் இருந்து உண்டான எந்த ஒரு சாபமும் இப்போது உடைக்கப்பட்டு உள்ளது! அவரது விலைஉயர்ந்த பிள்ளையாக அவர் உங்கள் மீது பொழிய விரும்பும் எந்த ஒரு ஆசீர்வாதத்தையும் நீங்கள் இப்போது பெற்றுக் கொள்ள முடியும்.

8. மரியம்மா தம்பி: பெட்டர் தன் வெபொன்ஸ் ஆஃப் வார், 2009, அட்வாண்டேஜ் இன்ஸ்பிரேஷனல்.

## சாட்சி

## ஒரு பழமையான சாபத்தை என்னை விட்டு இயேசுவானவர் அகற்றினார்

*“எனது பெற்றோர் “மீண்டுமாய்ப் பிறந்த” கிறிஸ்தவர்களாக இருந்தாலும் எனது குடும்ப வழியில் அதிகமான தெய்வீகமற்ற காரியங்கள் இருந்தது. என்னையும் அறியாமல் நாம் எனது பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டி மற்றும் மூதாதையர் போன்று அதே பாவங்களில் விழுந்துபோனேன்! நான் என்னையே வெறுத்தேன். ஒரு குழந்தையாக நான் தற்கொலைக்கு முயன்றேன். எனக்கு ஞாபகம் தெரிந்த நாளில் இருந்து எனது சகோதரியுடன் ஒரு சீரற்ற உறவில் இருந்து வந்தேன். எனது 11 வது வயதில் நான் “மீண்டும் பிறந்தேன்”. 14 ம் வயதில் பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் பெற்றேன். எனது தற்கொலை எண்ணம் மாறியது ஆனால் நான் என்னை தொடர்ந்து வெறுத்துக் கொண்டிருந்தேன். என் மீது எதிர்மறையான வார்த்தைகள் பேசினேன். சில ஆண்டுகளுக்குப் பின்பு நான் வெறுப்படைந்து, ஒரு ஜெப ஊழியத்திற்குச் சென்றேன். எனக்கும் எனது சகோதரிக்கும் இடையேயான அந்த வெறுப்பு என்பது நூற்றாண்டுகளுக்கு முன்பாக எனது தகப்பனாரின் சமுதாயத்திற்கும் எனது தாயின் சமுதாயத்திற்கும் உண்டாயிருந்த தீர்க்கமுடியாத வெறுப்பின் காரணமாகவே உண்டாயிருந்தது. நான் அவர்களது பாவங்களை அறிக்கை செய்து, இந்த பிரிவினைக்காக இரு தரப்பினரையும் நான் மன்னித்தேன். கர்த்தரிடம் அவர்களை மன்னிக்க கேட்டேன். அந்த ஜெப ஊழியர் என் மீது இருந்த சாபத்தினை உடைத்தார். எனக்குள் பெருகிய சமாதானத்தினை நான் உணர்ந்தேன். (நான் அப்படி முன்பு உணர்ந்ததில்லை). எனக்குள் நடைபெற்ற யுத்தம் நின்றது. அந்த உள்ளான சமாதானம் எனது இதயத்தில் இருந்தது. என் மீதும் எனது சகோதரி மீதும் இருந்த வெறுப்பு மாறியது”*

# ஞானஸ்நானங்கள்

## *தண்ணீர் ஞானஸ்நானம்*

*"மீண்டுமாய் பிறந்த"* ***(யோவான் 3:3-7)*** அனுபவம் பெற்று, இயேசு கிறிஸ்துவை ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக் கொண்ட பின்பு, நாம் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று வேதாகமம் கூறுகின்றது: *"இப்பொழுது இடம் கொடு. இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாய் இருக்கின்றது."* ***(மத்தேயு 3:15).*** யோவானின் ஞானஸ்நானம் அறிக்கையிடுதலின் ஞானஸ்நானம். அது ஒரு மனிதன் தனது பாவத்தில் இருந்து மனம்திரும்பி, கர்த்தரிடமாகத் திரும்பினான் என்பதைக் காண்பிக்கின்றது. இயேசுவானவர் 100% மனிதனாய் இருந்தார். 100% கடவுளாய் இருந்தார். அவர் ஒரு போதும் பாவம் செய்ததில்லை. ***(2 கொரிந்தியர் 5:21; 1 பேதுரு 1:19, 2:22).*** ஆனால் நம்முடனும், நமது பாவங்களுடனும் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளவே அவர் யோவானால் ஞானஸ்நானம் பெற்றார்.

> ஞானஸ்நானம் என்பது அவரது சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்துடன் சேர்க்கப் படுவதற்கான ஒரு வெளிப்புற அடையாளம்.

ஞானஸ்நானம் பெறுவது என்றால் "மூழ்குவது". தண்ணீரினால் கிறிஸ்தவர்கள் பெறும் ஞானஸ் நானமானது பெற்றுக்கொள்ளும் அந்த நபர் கிறிஸ்துவின் மரணம், அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதல் உடன் தன்னை அடையாளப் படுத்திக் கொள்வதையே காண்பிக்கின்றது. தண்ணீரில் மூழ்குவது பழைய பாவ வாழ்விற்கு மரித்து, அடக்கப்பண்ணப் படுவதைக் குறிப்பிடுகின்றது. தண்ணீரில் இருந்து வெளியே வருவது இயேசு கிறிஸ்துவின் உடனான புதிய வாழ்விற்குள் உயிர்த் தெழுவதைக் குறிப்பிடுகின்றது.[9]

> **சாட்சி**
>
> **இரட்டிப்பான ஞானஸ்நானம்!**
>
> *"நான் ஞானஸ்நானம் கொடுத்த ஒரு மனிதன் எழும்பி வரும் போது அன்னிய பாஷைகளில் பேசிக் கொண்டே வெளியே வந்தார். அது தண்ணீர் ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தினை எனக்கு உறுதிப்படுத்தியது."*

---

9. *அருள்திரு.டெரிக் பிரின்ஸ், ஃபௌண்டஷன்ஸ் ஃபார் கிறிஸ்தியன் லிவிங், டெரிக் ப்ரின்ஸ் மினிஸ்ற்றிஸ், 2004. அனுமதியுடன்.*

***(ரோமர் 6:1-7; 1 கொரிந்தியர் 15:3-4; கொலோசெயர் 2:12).***

இயேசுவானவரின் வார்த்தைகளில் இருந்தும், அப்போஸ்தலரின் போதனைகளில் இருந்தும், ஞானஸ்நானம் என்பது விசுவாசியின் வாழ்வில் மிகவும் முக்கியமானது என்பது தெளிவாகின்றது. ***(மாற்கு 16:16; அப்போஸ்தலர் 2:37-38; கலாத்தியர் 3:27; மத்தேயு 22:11).*** ஆதி சபையில் விசுவாசிகள் விசுவாசத்தினால் இயேசுவை ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக்கொண்ட பின்பு எவ்வளவு விரைவாக ஞானஸ்நானம் பெற முடியுமோ அவ்வளவு விரைவாக ஞானஸ்நானம் பெற்றனர் என்பதைத் தெளிவாகக் காணலாம். ***(அப்போஸ்தலர் 8:35-38, 9:17-18, 10:42-48, 16:27-33).*** தன்னைப் பின்பற்றுபவர்கள் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று இயேசுவானவர் கட்டளையிட்டார். இயேசு கிறிஸ்துவிற்குக் கீழ்படிவதில் *ஞானஸ்நானம் இரண்டாவது படி.* ***(அப்போஸ்தலர் 2:38).***

## பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்

*"பரிசுத்த ஆவியினால் நிரம்பியிருங்கள்"* ***(எபேசியர் 5:18).***



*''மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவர் என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார்.''* ***(மத்தேயு 3:11).***

*"பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்."* ***(லூக்கா 11:13).***

*"மேலான வல்லமையை"* நமக்குத் தரும் போது அவர் நமக்கு பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் தருகின்றார். ***(லூக்கா 24:49; அப்போஸ்தலர் 1:8).*** இந்த ஞானஸ்நானம் மேலிருந்து வரும் பரிசுத்த ஆவியில் முழுவதுமாக முழ்குவது.. இது நேரடியாக

கர்த்தரிடம் இருந்து வரலாம் ***(அப்போஸ்தலர் 2:1-4. 4:31, 10:44-47)*** அல்லது பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்ற யாராவது தலையின் மீது கைகளை வைப்பதினால் பெற்றுக் கொள்ளப்படலாம். ***(அப்போஸ்தலர் 8:14-19, 9:17, 19:6).***

பரிசுத்த ஆவியானவரை நேரடியாக கர்த்தரிடம் இருந்து பெற்றுக் கொண்டிருந்தாலும் அல்லது மற்றவர்கள் கரங்களை வைப்பதின் மூலமாகப் பெற்றுக் கொண்டிருந்தாலும், அதன் நோக்கம் நாம் அவிசுவாசிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை வலுவாக சொல்லக் கூடிய அளவிற்கு கர்த்தரிடம் இருந்து அசாத்திய வல்லமையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே. இப்படித்தான் அப்போஸ்தலர் 2 இல் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் வெளிப்பட்டது. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் பெற்ற பின்பு பேதுரு தைரியமானவராகி, வலுவான தீவிரத்துடன் நற்செய்தியை வல்லமையுடன் பிரசங்கித்தார்.


நம்மில் பரிசுத்த ஆவியானவர் வசிக்கையில், அன்பு, சந்தோசம், சமாதானம், தயவு, நற்குணம், சாந்தம், விசுவாசம், சுய கட்டுப்பாடு போன்ற கனிகளைக் கொடுக்கும் வண்ணமாக நமது குணத்தை மேம்படுத்தி நமக்குத் திறன் தருகின்றார் ***(கலாத்தியர் 5:22).***

இதுவே நாம் மற்ற விசுவாசிகளின் வாழ்விலும், மற்றவர்கள் நம்முடைய வாழ்விலும் காண வேண்டிய பரிசுத்த ஆவியானவரின் கனி. அப்போஸ்தலர் நடபடிகளில் இந்த கனி குறித்து அதிகமான

புதிதாய்த் திருமணம் முடித்த ஒரு தம்பதியர் வெள்ளைப் புறா ஒன்று வசித்து வந்த ஜன்னலை உடைய ஒரு வீட்டில் குடிபுகுந்தனர். வெகு விரைவில் அவர்களுக்குள் முதலாவது ஒரு வாக்குவாதம் உண்டானது. அதனைத் தொடர்ந்து அதிகமான வாக்குவாதங்கள் உண்டானது. அவர்கள் இடையே வாக்குவாதங்கள் உண்டான போதெல்லாம் அந்த புறா வெளியே பறந்து விடுவதைக் கவனித்தனர். அவர்கள் ஒருவரை ஒருவர் மன்னித்து, ஒருமனமாகி, சமாதானம் உண்டான போதெல்லாம் அந்த புறா திரும்பிவந்ததை அவர்கள் கவனித்தனர். சில காலத்திற்குப் பின்பு அந்த புறா எப்போதும் தங்களை விட்டுப் போய் விடாதபடி தாங்கள் இணைந்து வாழ உதவி செய்ய வேண்டும் என்று அந்த தம்பதியினர் கர்த்தரைக் கேட்டனர்.

*ஆர்.டி.கெண்டால், சென்சிடிவிட்டி டு த ஹோலி ஸ்பிரிட்,* 2001

உதாரணங்கள் உள்ளன. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் விசுவாசிகளை இதயத்திலும், சிந்தனையிலும் ஒருமுகப் படுத்தி, தங்களுடன் உள்ளதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் அளவிற்கு ஒருவரை ஒருவர் நேசிக்க திறன்படுத்துகின்றது. ***(அப்போஸ்தலர் 2:42-47, 4:32-35).***



இந்தக் **கனி** நம்மில் இல்லை என்றால், அது ஏன் என்று கேட்க வேண்டும். ஜெபத்தினாலும், நிதானமாய்க் கவனிப்பதினாலும் அந்த கனி தரமுடியாதபடி நம்மைத் தடுக்கின்ற காரணங்களையும் அல்லது **அடிப்படையான** பிரச்சனைகளையும் நாம் கண்டறிந்து கொள்ளலாம்.

*''நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர் களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்.'' **(யோவான் 13:35).***

இந்த அசாத்திய வல்லமை மற்றும் அன்புடன், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தினால் நாம் இன்னும் அதிகமான ஈவுகளைப் பெற்றுக் கொள்கின்றோம். 1 கொரிந்தியர் 12:7-11 இவற்றை அறிவு, ஞானம், பெரிதான விசுவாசம், அறியாத பாஷைகள், இந்த பாஷைகளின் வியாக்கியானம், அறிவான வார்த்தைகள், ஆவிகளைப் பகுத்துணர்வது, அற்புதங்கள்

**சாட்சி**
**இயேசுவானவர் எனக்குப் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுத்தார்**

*"நானும், எனது இரண்டு நண்பர்களும் இந்தப் புத்தகத்தின் செய்தியை வாசித்தோம். எங்களது பாவங்களை அறிக்கை செய்து, பாவங்களை மன்னித்து, எங்களைக் காயப்படுத்தியவர் களை மன்னித்து, சில முக்கியமான காரியங்களுக்காக ஜெபித்தோம். நாங்கள் விடுதலை அடைந்ததை உணர்ந்தோம்! பின்னர் நாங்கள் பரிசுத்த ஆவியானவர் எங்களை நிரப்பக் கேட்க நாங்கள் அழைத்த போது, நாங்கள் பரிசுத்த ஆவியானவராலும், அக்கினியினாலும் ஞானஸ்நானம் பெற்றோம் என்று உறுதிப்படுத்துகின்ற விதத்தில் எங்களது இதயத்தில் எரிந்து கொண்டிருக்கும் அக்கினியின் உணர்வை நாங்கள் மூன்று பேரும் உணர்ந்தோம்!"*

மற்றும் சுகப்படுதல் என்று அட்டவணைப் படுத்துகின்றது.

பரிசுத்த ஆவியானவர் நமது இதயத்தில் வந்ததும் நாம் மீண்டுமாய்ப் பிறக்கின்றோம். **(ரோமர் 8:9-11; 2 கொரிந்தியர் 13:5; கொலோசேயர் 1:27).** அதன் பின்பு, ஒரே முறை உண்டாகும் சம்பவமான பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ் நானத்தினை நாம் பெற்றுக் கொள்ளமுடியும். **(மத்தேயு 3:11).** தொடர்ந்து நாம் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட வேண்டியது அவசியம். யோவான் 20:22 இல், இயேசுவானவர் தனது சீஷர்கள் மீது ஊதி, "பரிசுத்த ஆவியானவரை நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள்" என்றார். அப்போஸ்தலர் 2:4 இல், அதே மக்களுடன் சேர்த்து, அத்தனை விசுவாசிகளும் ஞானஸ்நானம் பெற்றனர். பின்னர் அப்போஸ்தலர் 4:31 இல், அதே மக்கள் (மீண்டு மாய்) பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப் பட்டனர். நாம் தொடர்ந்து பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு, பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட வேண்டும்.

நமது வாழ்வில் பரிசுத்த ஆவியானவரை அதிகமாகப் பெற்றுக் கொள்ள அல்லது பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தினைப் பெற்றுக் கொள்ள நமது பரலோகப் பிதாவை நாம் கேட்க வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் அத்தனை ஈவுகளையும் நமக்குத் தரவும் நாம் அவரைக் கேட்டு, இயேசுவிற்கு ஒரு வலுவான சாட்சியாக இருக்கவும், சக கிறிஸ்தவர்கள் மற்றும் அவிசுவாசிகள், இன்னும் நமது எதிராளிகள் மீதும் அன்புடன் இருக்கவும் திறனைத் தரக் கேட்க வேண்டும். "பரிசுத்த ஆவியானவர் உங்களில் வரும் போது நீங்கள் பெலனடைவீர்கள்'' என்று வாக்குப்பண்ணப்பட்டதை நாம் பெற்றுக்கொண்டோம் என்று நாம் திருப்தியடையும் வரை நாம் தொடர்ந்து கர்த்தரை வலியுறுத்திக் கேட்க வேண்டும். **(லூக்கா 11:13; அப்போஸ்தலர் 1:8).** நாம் சாட்சியாய் நிற்பதற்கான வல்லமை, இயேசுவானவர் செய்து கொண்டிருந்த அத்தனைக் காரியங்களையும் செய்யும் வல்லமை, மற்றவர்களை நேசிக்கின்ற வல்லமை, வெற்றிகரமான வாழ்வு வாழுவதற்கான வல்லமை அகிய வல்லமையை பெற்றுக் கொள்வோம்.

ஆவிக்குரிய வளரச்சி என்பது தொடர்ந்து நடைபெறுகின்ற ஒரு காரியம். கிறிஸ்தவராக முதிர்ச்சி அடைய, நாம் ஜீவனுள்ள கர்த்தருக்கு சமீபமாக நெருங்கி வர வேண்டியது அவசியம். வேதாகமத்தினை நாம் தொடர்ந்து வாசித்து, அவரது

வார்த்தையை நாம் தியானிக்க வேண்டும்; சுவிசேஷத்தில் உண்மைகளை நாம் விசுவாசிக்க வேண்டும். கர்த்தருடைய வாக்குறுதிகளுக்கு நாம் பதில் தர வேண்டும். தொடர்ந்து மனம் திரும்ப வேண்டும். தொடர்ந்து மன்னிக்க வேண்டும். இயேசுவிற்கு நாம் தொடர்ந்து மறுபடியும் நம்மை அர்ப்பணிக்க வேண்டும்; கர்த்தருடைய அன்பினால் நிரப்பப்படவேண்டும். நம் மூலமாகவும், நம்மிலும் அவர் கிரியை செய்ய அவரை அழைக்க வேண்டும். அவரது பரிசுத்த ஆவியினால் நிரம்பி இருக்க வேண்டும் என்று அவரைக் கேட்க வேண்டும். அவரது கட்டளைகளுக்கு நாம் தொடர்ந்து கீழ்படிய வேண்டும்.

ஜெப ஊழியத்தில், ஒவ்வொரு மனம் திரும்புதல் நேரத்தையும், மன்னிப்பின் நேரத்தையும், இயேசுவானவரை நாம் நமது இதயத்திலும், வாழ்விலும் மிக ஆழமாக வரும்படியாக இயேசு கிறிஸ்துவையும், பரிசுத்த ஆவியானவரையும் ஜெபத்துடன் அழைப்பது நல்லது. இதுவே மனம்திரும்புதல் என்னும் பகுதியில் விவரிக்கப்பட்டு உள்ள 'ஆவிக்குரிய சுவாசம்' என்பது. 'பாவம் வெளியேறி, இயேசுவானவர் உள்ளே வருதல்' என்று இது சுருக்கமாக சொல்லப்படமுடியும். அப்படியே, நமது மனதிலும், வாழ்விலும் தெய்வீகமற்ற காரியங்கள் இடம் பெறுவதற்கு நாம் இடம் தரக் கூடாது. ***(மத்தேயு 12:43-45).*** நாம் பரிசுத்த ஆவியானவர் நமது இதயத்தில் வந்து, நிரம்பி வழியும் அளவிற்கு நிரப்பும்படியாக அழைக்க வேண்டும்.

யாராவது ஒருவருடன் நாம் ஜெபிக்கையில், பரிசுத்த ஆவியானவரை அவர்கள் தங்களை நிரப்ப அழைக்கும் போது, காத்திருந்து, கவனித்து, கர்த்தர் அவர்களில் செய்கின்றதை ஆசீர்வதிக்க வேண்டும். பின்னர் அந்த நபரையும் ஆசீர்வதிக்க வேண்டும்.

*இந்த நோக்கத்திற்காக இதயத்தில் இருந்து சத்தமாக ஜெபிக்க வேண்டிய ஒரு ஜெபம்.*

**சுத்திகரிப்பிற்கும், தூய்மைப்படுத்தலுக்கும் ஜெபம்**



*"பரலோகப் பிதாவே, என்னை முழுவதுமாக, ஆவி, ஆத்துமா, சரீரத்தை உமக்கென்று தருகின்றேன். உமது பரிசுத்த ஆவியினால் நான் முழுவதுமாக நிரம்பி, நான் உம்முடையவனாக இருக்கும்படியாக என்னை முழுவதுமாக நிரப்பும்படியாக அழைக்கின்றேன். இயேசுவின் நாமத்தில். ஆமென்."*

# கர்த்தருக்கு செவிகொடுத்து கீழ்ப்படிவது

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் அதிகமான வேத பகுதிகள் நமது ஆண்டவராகிய கர்த்தருக்கு செவிகொடுத்து, கீழ்படிவதின் அவசியத்தினை முக்கியப்படுத்துகின்றது. இயேசுவானவரும் அதனை முக்கியத்துவப்படுத்துகின்றார். அவர் இதனைக் கூறும் இன்னும் சில வேதபகுதிகள்:

*"என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது."* ***(யோவான் 10:27).***

*"ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்."* ***(மத்தேயு 7:24 மற்றும் தொடர்ந்து வரும் பகுதி).***

*"அதற்கு அவர்: தேவனுடைய வசனத்தைக் கேட்டு, அதின்படி செய்கிறவர்களே எனக்குத் தாயும் எனக்குச் சகோதரருமாயிருக்கிறார்கள் என்றார்."* ***(லூக்கா 8:21).***

*"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கிக் 'கர்த்தாவே! கர்த்தாவே!' என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை."* ***(மத்தேயு 7:21; லூக்கா 6:46-49).***

மத்தேயு மற்றும் லூக்காவில் முந்தின வேத பகுதிகளில் இயேசுவின் வார்த்தைகளில் இருந்து நாம் காண்கின்றபடி, கர்த்தருடைய சித்தத்திற்கு நாம் கீழ்ப்படிவது நித்திய மதிப்பு உடையது. ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தர் பேசுவதற்கு செவிகொடுப்பதும், அவர் சொல்லுகின்றதை செய்வதும் மிகவும் முக்கியம். *"அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள்"* ***(யோவான் 2:5).***

*"போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது. ஒருவன் அந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால், அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு*

*எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோலிருக்கும்." **(1 கொரிந்தியர் 3:11-15).***

**சாட்சி**

**நான் இயேசுவை சந்தித்தேன்**

*"பல வருடங்களாக நான் வருத்தமாகவும், தற்கொலை எண்ணத்துடனும் வாழ்ந்து கொண்டிருந்தேன். நான் அந்த தற்கொலை எண்ணங்களில் இருந்து மனம் திரும்பி எனது இதயத்தில் இயேசுவானவரை வர வேண்டும் என்று அழைத்தேன். எனக்கு முன்பாக இயேசுவானவர் வருகின்றதை ஒரு தரிசனத்தில் கண்டேன். அவர் மிகவும் பெரியவராகவும், பார்ப்பதற்கு மிகவும் கனிவாகவும் இருந்தார். அவர் என்னைத் தமது கரங்களில் எடுத்து, என்னை நோக்கி, 'இப்போது எனக்குச் சாட்சியாயிரு. நான் எப்போதும் உன்னுடன் இருக்கின்றேன் என்பதை நினைவில் கொள்' என்று கூறினார். நான் சந்தோசத்தினால் நிறைந்து, எனக்குத் தெரிந்த ஒவ்வொருவரிடமும் எனக்கு நடந்ததைக் கூற ஆரம்பித்தேன். சில நேரம் மக்களிடம் இயேசுவைப் பற்றிக் கூறுவது எளிது அல்ல. அந்த நேரங்களில் எல்லாம் அவர் எனக்காகச் செய்தது என்ன என்பதையும், அவர் என்னுடன் இருக்கின்றார் என்பதையும் நினைத்துக் கொள்வேன்."*

வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்வைப் பெறுவதற்கு ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தருக்குச் செவி கொடுப்பது மிகவும் இன்றியமையாதது!

கர்த்தர் நம்முடன் பல வழிகளில் பேசுகின்றார். நாம் வேதாகமத்தை வாசித்துத், தியானிக்கையில், வார்த்தைகள் தனித்து நின்று, நம் மீது தாக்கத்தை உண்டு பண்ணலாம். அது சில நேரம் மிக வலுவாக இருந்து, நம்முடைய சரீரத்தை நடுங்கச் செய்யலாம் அல்லது நம்மை அழச் செய்யலாம். (சில நேரம் அதிகமாகக் கூட) சில நேரம் கர்த்தர் நமக்குக் காட்சிகள் அல்லது கனவுகள் அல்லது நம்மைச் சூழ நாம் காணும் காரியங்களின் மூலமாகக் காரியங்களை வெளிப் படுத்தலாம். நமது எண்ணத்தில் ஒரு நினைவு போன்று வரக்கூடிய் *"மெல்லிய சப்தம் மூலமாக"* அவர் பேச விரும்பு கின்றார். ***(1 இராஜாக்கள் 19:12).*** நம்மில் தூய்மையான, நீதியான, நேர்மறையான சிந்தனை வரும் போதெல்லாம், பரிசுத்த ஆவியானவரே நம்முடன் பேசுகின்றார். நினைவில் கொள்ளுங்கள், ஆறுதல் தருபவர் ஆறுதல் தருகின்றார். குற்றம் சாட்டுகின்றவன்

குற்றம் சாட்டுகின்றான்.

கர்த்தர் நம்முடன் பேசுவதைக் கேட்க இன்னொரு வழியும் உள்ளது. நாம் சற்று நேரம் அவரை ஆராதித்து, மனம்திரும்பி, அவசியம் என்றால் மன்னித்து, நமது இருதயம் அவருடன் சரியாகலாம். ***(சங்கீதம் 139:23-24).*** பின்னர் **அமைதியாக** அமர்ந்து, அவரிடம் ஒரு கேள்வி கேளுங்கள். நமது சிந்தனையில் வருகின்ற முதலாவது நினைவு, குறிப்பாக அது நாம் இதுவரை சிந்தித்து இராத ஒரு காரியம் என்றால், நிச்சயமாய் நம்முடன் பேசுவது கர்த்தர் தான். (அது வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கும் அவரது வார்த்தையுடன் இசைந்து காணப்படும் என்றால்).

> 'கர்த்தருக்குப் பணிவிடை செய்யும்படியாக நான் எனது வேலையை விட்டு விட்டேன்' என்று மக்கள் கூறுவதைக் கேட்டு இருக்கின்றேன். அவர்களுக்கு எனது பதில் என்னவென்றால், 'நீங்கள் உங்கள் வேலையில் கர்த்தருக்கு ஏன் பணிவிடை செய்ய முடியவில்லை என்பதே?'
>
> (டன்கன் வாட்கின்சன், IRNET, 2004)

கர்த்தர் பேசுகையில், அவர் என்ன சொல்லுகின்றார் என்பதற்கு நாம் கவனம் தர வேண்டும் என்றும், அவருக்குப் பதில் தர வேண்டும் என்றும் விரும்புகின்றார். கர்த்தருடைய பிரசன்னத்தை உணரும் 'அந்த இடத்தை' விட்டு நாம் நகரக் கூடாது. அவரது நெருக்கத்தை விட்டு விலகி விடக் கூடாது. அதற்கு மாறாக, அவர் இன்னும் நமக்கு எதனை வெளிப்படுத்து வார் என்று அறிந்துக் கொள்ளும் படியாக, நாம் இன்னும் அமைதியாக தொடர்ந்து அமர்ந்திருக்க வேண்டும்.

அவரிடம் இன்னும் கூடுதலான விளக்கங்களைக் கேட்கலாம். உதாரணமாக, நாம் செய்ய வேண்டும் என்று விரும்புகின்ற காரியம் பற்றிக் கூடுதல் விவரம் கேட்கலாம். அவர் நம்மை ஏதாகிலும் செய்யக் கேட்பார் என்றால், நாம் அதனை உடனடியாகச் செய்து அவருக்குக் கீழ்படிய வேண்டும். சிறப்பானதைச் செய்ய வேண்டும். மற்ற மக்களுக்கு வித்தியாசமாகத் தெரிந்தாலும் வேதாகமத்தில் அனேக மக்கள் இதனைச் செய்தது உண்டு (உதாரணம் ஆதியாகமம் 6-10 இல் நோவா). நாம் செய்ய வேண்டும் என்று அவசியப்படுவதை அவர் செய்யச் சொல்லும் போது, பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்வார் என்று நம்பி நாம் செயல்பட வேண்டும். இவ்வாறு அவர் நமக்குக் கூறுவதை நாம் செய்கையில், அவரால் மட்டுமே செய்ய முடிகின்ற காரியத்தை கர்த்தர் நமக்குச் செய்வார். சிறையில்

இருந்து பேதுரு அற்புதமாகத் தப்பின சம்பவத்தில், ***(அப்போஸ்தலர் 12:7 -8).*** தன்னிடம் சொல்லப்பட்டக் காரியத்தை பேதுரு செய்தார். (தனது காலணியை அணிந்து, மேலாடையிட்டு, தூதனைப் பின்பற்றினார்) அதே நேரம், சங்கிலிகளை அறுத்து அவரை விடுவிக்க கர்த்தர் தூதனை அனுப்பினார்!

பேசுவது கர்த்தர் தானா அல்லது நமது மாமிசம் பேசுகின்றதா அல்லது இது எதிராளியின் யோசனையா என்று அறிந்து கொள்ள நிதானித்து அறிவது மிகவும் அவசியம். அப்படி நிதானித்து அறிவதற்கு அது ஒளியின் இராஜியத்தில் இருந்து உண்டானதா அல்லது இருளின் இராஜியத்தில் இருந்து உண்டானதா என்று காண்பது தேவை. நிதானித்து அறிவதற்கு ஒரு எளிதான ஒரு வழிமுறை உண்டு. அது இருளின் இராஜியத்துடன் எதாவது ஒரு வகையில் தொடர்புகொண்டு இருக்கும் என்றால், அதனில் இருந்து நாம் விலக வேண்டும். அதனுடன் நமக்கு சம்மந்தம் இல்லை. பிசாசானவன் **யோசனைத் தருகின்றான். *(ஆதியாகமம் 3:1).*** கர்த்தர் **கட்டளையிடு கின்றார். *(ஆதியாகமம் 1:3 மற்றும் தொடர்ந்து வரும் பகுதி, 2:16-17).***

> ஒரு வயதான மனிதர் தனது வீட்டின் முற்றத்தில் அமர்ந்து இருந்தார். தனது வாழ்வில் நடந்த காரியங்களை நினைத்து, அவர் பெற்றுக் கொண்ட ஆசீர்வதங்களுக் காகவும், அவரால் செய்ய முடிந்ததான பெரிதான ஊழியத்திற்காகவும் கர்த்தருக்கு நன்றி செலுத்தினார். அப்போது கர்த்தர் அவரிடம், "ஆனால் மகனே உன்னை நான் ஆப்பிரிக்காவிற்கு ஒரு மிஷனெரியாக அழைத்து இருந்தேன்" என்றார். அந்த மனிதர் அதிர்ச்சி அடைந்தார். 'எனது மகனுக்கு அத்தனை உடல் நலப் பிரச்சனை இருந்ததே. எனது மகனின் உடல் நிலை காரணமாக நாங்கள் வீட்டில் இருக்க வேண்டியதாயிற்று. இங்கு தான் எனது குடும்பத்தினரின் உதவி கிடைத்தது' என்று பதிலளித்தார். கர்த்தர் அவரிடம் மீண்டுமாய், 'நீ எனக்குக் கீழ்படிந்து, ஆப்பிரிக்கா சென்று இருந்தால் அப்படி நடந்திருக்காது' என்று பேசினார். அந்த மனிதர் தனது வாழ் முழுவதும் மீதியான காலம் மக்கள் தங்கள் வாழ்வில் கர்த்தர் நியமிக்கும் அழைப்பிற்குப் பதில் தரும்படியாக உற்சாகப்படுத்தினார்.
>
> (ஜோன் ஹண்டர், ஹீலிங்க் த ஹோல் மேன் ஹண்ட்புக், 2006)

புதிதான அல்லது முக்கியமான ஒன்றைக் கர்த்தர் உங்களிடம் செய்யச் சொல்லும் போது, அவர் அதனைத் தனது வார்த்தையினால் **<u>உறுதிப்படுத்துவார்.</u>** மேலும் அதற்கு இரண்டு அல்லது மூன்று

*சாட்சிகளும் இருக்கும். **(உபாகமம் 19:15; மத்தேயு 18:16).** மற்ற மக்கள் உங்களிடம் "தீர்க்கதரிசன வார்த்தையுடன்" வருவார்கள் என்றால், அது பொதுவாக கர்த்தர் **<u>உங்களிடம் ஏற்கெனவே பேசி இருக்கும் காரியத்திற்கு ஒரு உறுதிப்பாடாகவே இருக்கும்.</u>** பேசுவது கர்த்தருடைய சத்தம் தான் என்பதை உறுதிப்படுத்த கர்த்தர் இந்தச் செய்திகளை மற்ற மக்களுக்குக் கொடுக்கின்றார். அவர் கூறுவதின் உண்மையை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். சில நேரம் தீர்க்கதரிசனத்தின் விவரம் தெளிவாக இருக்காது. **(1 கொரிந்தியர் 13:9).** அந்தத் தீர்க்கதரிசனம் என்ன என்பதை அறிந்து கொள்ளவும், சரியான பதில் கொடுக்கவும் ஜெபத்துடன் நிதானிக்க வேண்டும். அதற்கு நாம் ஏதாகிலும் செய்ய வேண்டியது அவசியம் என்றால், நாம் கீழ்படிந்து, அதனை எவ்வளவு விரைவாகச் செய்ய முடியுமோ அவ்வளவு விரைவாக செய்ய வேண்டும் என்று அவர் விரும்புகின்றார்.*

*நமது சித்தத்தினை விட கர்த்தருடைய சித்தத்திற்கு நாம் முக்கியத்துவம் தரும் போது, நாம் அவரைச் சரணடைகின்றோம். அது ஒரு ஆளுகை மாற்றம். நமது வாழ்வினை நாம் ஆளுவதில் இருந்து நமது வாழ்வை அவர் ஆளுகை செய்வதற்கு மாறுகின்றது; பாவத்தையும் சுயத்தையும் பின்பற்றுவதில் இருந்து, இயேசுவைப் பின்பற்றுகின்றவர்களாகி, பரிசுத்த ஆவியானவரின் நிர்வாகத்தின் கீழ் கர்த்தருடைய பணிவிடையாளர்களாக மாறுகின்றோம். அவர் நாம் எங்கே போக வேண்டும் என்று விரும்புகின்றாரோ அங்கே போகின்றோம், அவர் நாம் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகின்றாரோ அதனைச் செய்கின்றோம், அவர் நாம் என்ன பேச வேண்டும் என்று விரும்புகின்றாரோ அதனைப் பேசுகின்றோம். நாம் எப்படி மாற வேண்டும் என்று அவர் விரும்புகின்றாரோ அப்படி நாம் மாறுகின்றோம். நமது சித்தத்தை கர்த்தருக்குக் கீழ்படிவதில் நாம் அர்ப்பணித்தால்,* 'உமது இராஜியம் வருவதாக, உமது சித்தம் பூமியில் செய்யப்படுவதாக' *என்னும் கர்த்தருடைய ஜெபம் நமது வாழ்வில் செயல்படுகின்றது. இதற்கு ஒரு விலை உண்டு. அது நாம் நமது சுய ஆசைகள் மற்றும் திறமைகளுக்கு 'மரித்தால்' மட்டுமே கர்த்தருடைய அசாத்திய திறமைகள் நமது வாழ்வில் செயல்பட ஆரம்பிக்கும்.*

*இதனை இந்தப் பாடலின் வரிகளில் சுருக்கமாகக் கூறப்பட்டு*

*இருக்கின்றதைக் காணலாம்: 'எல்லாம் என் இயேசுவிற்கு, நான் அர்ப்பணித்தேன், எல்லாம் நான் அவரிடம் தந்தேன்...'*

*ஆவிக்குரிய முதிர்ச்சிக்கு பவுல் அப்போஸ்தலனின் ஜெபம் இதோ:*

*''இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக் குடும்பத்துக்கும் நாமகாரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு, நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.''* ***(எபேசியர் 3:14-21).***

*தனது ஆவிக்குரிய வளர்ச்சி குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவது இது தான்:*

''கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்.'' ***(பிலிப்பியர் 3:14).***

## அழைப்பு



அனேக மக்கள் இயேசுவானவர் தங்களது வாழ்வில் கொடுத்திருக்கும் அழைப்பை நிறைவேற்றுவதில்லை. இதற்குக் காரணம் அவர்கள் தங்களது குறிப்பிட்ட அழைப்பையும் ஊழியத்தையும் அறியாமல் இருப்பதாக இருக்கலாம். நமது அழைப்பு என்பது கர்த்தர் நமக்குக் கொடுத்த திறமைகளையும், ஈவுகளையும் சரியாகப் பயன்படுத்திக் கொள்வது **அல்ல.** நம் முன்பாக அவர் வைத்த இந்த வேலையைச் செய்ய அவரது அசாதாரணமான ஈவு நமக்கு அவசியம். இப்படியே, நாம் கர்த்தரை முழுவதுமாகச் சார்ந்து இருக்கும்போது, அவரது பெலத்தில் இந்த செயலானது நிறைவடைந்தது என்பதை நாம் அறிந்துகொள்வோம்.

முதலாவது, இயேசுவை அர்ப்பணிப்புடன் பின்பற்றுவதே நமது அழைப்பு. வேறுயாருக்காகிலும் நாம் வேலை செய்யலாம் அல்லது வியாபாரம் செய்யலாம், எதைச் செய்தாலும், நாம் முழுவதுமாக இயேசுவிற்கு அர்ப்பணிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் ஜெபத்தில் நம்மையே இயேசுவானவருக்கு அர்ப்பணிக்க வேண்டும். துதியில் அர்ப்பணிக்கவேண்டும். இயேசுவைப் பற்றிய சாட்சியில் அர்ப்பணிக்க வேண்டும். நம்மை சுத்திகரிக்க ஆண்டவராகிய இயேசுவிற்கு அர்ப்பணிக்க வேண்டும். இது மட்டுமே நமது ஒரே நோக்கமாக இருந்து, நோக்கத்தை விட்டு திசைதிருப்பும் காரியங்களை எந்தவிதமான உயர்ந்த அழைப்பு இல்லாமல் இருப்பவர்களுக்கு விட்டு விடலாம். சி. எச். ஸ்பர்ஜன் கூறுவதைக் கூறட்டும், “மற்றவர்கள் அரசியலில் இருக்கலாம். பணப்

> நீங்கள் கர்த்தருக்காக செய்யும் அத்தனை காரியங்களையும் அட்டவணைப் படுத்துங்கள். பின்னர் உங்களையே கேளுங்கள்: 'நான் இவைகளைச் செய்ய வேண்டும்' என்று அவர் கூறியதால் நான் இந்தக் காரியங் களைச் செய்து கொண்டிருக்கின்றேனா? அதற்கான பதில் ‘இல்லை’ அல்லது ‘நிச்சயமாகத் தெரியவில்லை’ என்று இருக்கும் என்றால், நீங்கள் மறுபடியும் யோசிக்க வேண்டியது அவசியம்.
>
> (டன்கன் வாட்கின்சன், IRNET, 2004)

பிரச்சனைகளைத் தீர்க்கலாம். அறிவியல் பற்றி கலந்துரையாடலாம். குற்றச்சாட்டுகளைத் தீர்க்கலாம். ஆனால் நாம் நம்மை ஆண்டவராகிய இயேசுவிற்குப் பணிவிடை செய்ய, அவரது ராஜரீக ஆசாரியத்துவத்தின் அபிஷேகிக்கப்பட்ட அங்கத்தினர்களாக ஒப்புக் கொடுப்போம். இதுவே **ஒவ்வொரு** விசுவாசியின் புனிதமான கடமை."

**சாட்சி**

**கர்த்தர் எங்களை உயர்த்தினார்**

*"நானும் எனது மனைவியும், இந்த அழைப்பிற்க்கான ஜெபத்தையும் சேர்த்து, இந்த புத்தகத்தின் பக்கங்களில் உள்ள அத்தனை ஜெபத்தையும் ஏறெடுத்தோம். சில வாரங்களிலேயே நான் எனது வாழ்வில் ஒரு கடினமான காரியம் ஒன்றைச் செய்ய வேண்டும் என்று கர்த்தர் உணர்த்த ஆரம்பித்தார். நான் பல ஆண்டுகளாக செய்து கொண்டிருந்த ஊழியத்தை விட்டு விட்டு, பிரயாண போதனை ஊழியத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று கூறினார். 3 மாதங்களில் ஆண்டவர் கற்பனை செய்ய முடியாத ஏதோ ஒன்றை செய்ய ஆரம்பித்தார். நான் எனது வேலையை விடவும், எனது மனைவி எனக்கு ஆதரவாக இருக்கவும் ஒரு வழியை கர்த்தர் திறந்தார். கண்களில் ஆனந்தக் கண்ணீருடன் எனது மனைவி, 'முதல் தடவையாக, நமது குடும்பத்திற்கு நம்பிக்கை இருக்கின்றது' என்றார்"*

இரண்டாவது, பெரிய கட்டளையை அவர் **எல்லா** விசுவாசிகளுக்கும் கொடுத்தார். ***(மத்தேயு 28:18-20; மாற்கு 16: 15-18; லூக்கா 24:46-48).*** ஒவ்வொரு மக்கள் கூட்டத் திற்கும், ஒவ்வொரு மனிதனுக்கும் இந்த சுவிசேஷ நற்செய்தி சொல்லப் படாதவரை அவர் திரும்பி வரப் போவதில்லை. இதுவே அவர் ஒவ்வொரு விசுவாசிக்கும் கொடுத்திருக்கும் பொறுப்பு.

இயேசுவானவர் மக்களுக்கு தனிப்பட்ட வேலை அல்லது அழைப்பையும் கொடுக் கின்றார். அது பெரிய கட்டளைக்கு சம்பந்தப்பட்ட ஒரு குறிப்பிட்ட வேலையாக இருக்கலாம்.

இந்த புத்தகத்தினைத் தொகுத்தவர்கள் கீழ்கண்ட ஜெபத்தினை கண்டறிந்த போது தங்களுக்கான குறிப்பிட்ட அழைப்பு என்ன என்பதைக் குறித்த நிச்சயம் இல்லாமல், கர்த்தரைத் தீவிரமாகத் தேடிக் கொண்டிருந்தனர்.[10] கீழ்கண்ட ஜெபத்தை ஜெபித்த மூன்று வாரங்களுக்குள், ஆண்டவர் அவர்களுக்கான சிறப்பான அழைப்பு என்ன என்பதை வெளிப்படுத்தினார்!

உங்களது வாழ்வில் கர்த்தருடைய அழைப்பை செயல்படுத்த

10. எஸ்தர் பேக்கர், ஐ ஒன்ஸ் வாஸ் அ புத்திஸ்ட் நன், 2009, இண்டெர்வர்சிடி ப்ரெஸ்.

வேண்டும் என்றால் இந்த ஜெபத்தை நீங்கள் ஜெபிக்கலாம்.

**அழைப்பை செயல்படுத்த ஜெபம்**



*"பரலோகப் பிதாவே, நீர் எந்த மக்களுக்காக என்னை அழைத்தீரோ அந்த மக்களுக்கான உமது இதயத்தை எனக்கு தயவாய்த் தாரும். இயேசுவின் நாமத்தில். ஆமென்."*

*நமது வாழ்வில் கர்த்தருடைய அழைப்பை நாம் அறிந்து கொண்டதும், அதனைச் செய்வது நமக்குச் சிறந்தது. காரணம் அது கர்த்தர் நமக்குத் தந்த சிறப்பான காரியம்.நமக்கான அவரது சரியான திட்டம் இது தான் இதற்காகாவே நாம் படைக்கப்பட்டு இருக்கின்றோம் என்று நிச்சயமாய் அறிந்து கொள்ளலாம்.*

*உங்களது காலை அசைக்க விருப்பம் இல்லை என்றால், உங்களது காலடிகளை வழி நடத்த வேண்டும் என்று கர்த்தரைக் கேட்கக் கூடாது.*

*''நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவிற்குள் சிருஷ்திக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கின்றோம். அவைகளில் நாம் நடக்கும்படி, அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கின்றார்.''* ***(எபேசியர் 2:10)***

*இயேசுவானவர் எப்போதும் நம்முடனே இருப்பதாக வாக்குப் பண்ணுகின்றார்!*


*"நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்."* ***(மத்தேயு 28:20).***

# ஜெப ஊழியத்திற்கான நடைமுறை காரியங்கள்

*ஜெப ஊழியத்தைச் செய்யும் சபை அல்லது போதகர் நடைமுறை காரியங்களைக் குறித்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நெறிமுறையை உடையவர்களாக இருக்க வேண்டும். இவை இல்லாத பட்சத்தில், இதோ சில வழிமுறைகள்.*

## *ஜெப ஊழியத்திற்கான ஆலோசனை*

**ஜெப ஊழியமானது தலைமை போதகரின் அதிகாரம் மற்றும் ஒப்புதலுடனும், சட்டத்திற்குட்பட்டும் செயல்பட வேண்டும்.**



*குறிப்பு: இந்த ஊழியத்தில், அந்த ஜெப உதவியைப் பெறும் மனிதர் மனம்திரும்புதலுக்கும், மன்னிப்பிற்கும் தனது வார்த்தைகளில்* **சத்தமிட்டு** *ஜெபிக்க வேண்டும். அப்படி செய்வதினால் ஜெப ஊழியரும் அதனைக் கவனித்து, அவர்களை வழி நடத்தி, அதன் பின்னர் அவர்களுடன் இணைந்து ஜெபிக்கமுடியும்.* ***(மத்தேயு 18:19).*** *அந்த மனிதர் முன்பு எப்போதும் ஜெபித்திராவிட்டால் அவர்களை ஜெப ஊழியர் ஜெபத்தில் வழி நடத்துவது அவசியம். ஆனால் அதன் பின்பு அந்த மனிதர் தனது சொந்த வார்த்தைகளில் ஜெபிக்க வேண்டும். பொதுவாக தனது சொந்த வார்த்தைகளில் ஜெபிக்கும் மனிதரிடத்தில் ஜெபமானது இருதயத்தில் இருந்து உண்டாகும். அவர்கள் இப்படி ஜெபிக்க 'மத' ரீதியான மொழி அவசியமில்லை என்பது அவர்களுக்கு விவரிக்கப்படவேண்டும். கர்த்தர் அவர்கள் இருதயத்தை அறிவார்.*

- *கூடுமானவரை அமைதியான ஒரு இடத்தை தேர்வு செய்யுங்கள்.*
- *ஜெப ஊழியத்தை ஜெபத்துடன் ஆரம்பியுங்கள். அந்த நேரத்தை கர்த்தருக்கு அர்ப்பணித்து, அவரது வழி நடத்துதல் மற்றும் வழி காட்டுதலுக்காக ஜெபியுங்கள்.*
- *ஒரு மனிதருக்கு இரண்டு நபர் ஊழியம் செய்வது பொதுவாக*

நல்லது. ஊழியம் செய்கின்ற குழுவில் குறைந்த பட்சம் ஒரு நபராவாது ஜெபிக்க வந்திருக்கும் அந்த நபரின் பாலினமாக இருக்க வேண்டும். உதாரணமாக பெண்ணிற்கு பெண், ஆணிற்கு ஆண் என்பது போல். முடிந்தவரையில், ஒரு பெண் ஒரு ஆணுடன் அல்லது ஒரு ஆண் ஒரு பெண்ணுடன் ஜெபிக்க அனுமதிக்க வேண்டாம். திருமணமான தம்பதியினர் ஜெபிக்க வந்தால், அவர்களுக்குள் ஒரு மனம் உண்டாகும் வரை தனித்தனியாக ஜெபித்துப் பேசுவது நல்லது. அதன் பின்னர் இணைந்து மன இசைவிற்காக ஜெபிக்கலாம்.

- அந்த ஜெப ஊழியம் பெறும் நபர் தனக்காக ஜெபிப்பவரை தங்கள் இதயத்தில் இருந்து நம்ப சற்று நேரம் எடுக்கலாம். குறிப்பாக அவர்கள் ஆழமான காயங்கள் அல்லது உணர்வுப்பூர்வமான காயங்கள் பெற்று இருந்தால் சற்று நேரம் ஆகும்.
- ஊழியம் செய்யும் போது எப்போதும் பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதல் மற்றும் வழி காட்டுதலுக்காக கவனியுங்கள். அந்த ஊழிய குழுவில் யாராவது ஒருவருக்கு ஞானத்தின் வார்த்தையோ அல்லது காட்சியோ இருக்கின்றது என்று நம்பினால், அவர்கள் அதனை அப்போது சொல்லி, அடுத்து இனி என்ன செய்யலாம் என்று இணைந்து முடிவு செய்ய வேண்டும்.
- வேதாகமத்தில் இருந்து வேதவார்த்தைகளை சரியாகப் பயன்படுத்தி, பிரச்சனையை வேதாகம கண்ணோட்டத்தில் மட்டுமே பார்க்க வேண்டும். ஊழியம் செய்யும் ஒவ்வொரு நபரும் ஊழியத்தைப் பெறும் ஒவ்வொரு நபரும் சந்திக்கின்ற பிரச்சனைகள் குறித்து கர்த்தரின்/வேதாகம கண்ணோட்டத்தைக் கொடுக்க தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும்.

  "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு." ***(2 தீமோத்தேயு 2:15).***

- *இந்த முக்கியமான கட்டளையைப் பின்பற்றுங்கள்:* "மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்." ***(மத்தேயு 7:12).***

- இரகசியம் காப்பது, அப்படி என்றால் '**யாரிடமும் புரளி பேசாமல் இருப்பது**' மிகவும் முக்கியம். எனினும், இரகசியம் காக்கப்படும் என்று நாம் **வாக்குப்பண்ணமுடியாது.** காரணம் அந்த நபர் பகிர்ந்து கொண்ட காரியத்தில் ஏதேனும் பிரச்சனை உண்டு என்றால் அந்த செய்தியை தலைமைப் போதகருடம் **பகிர்ந்து கொள்ள வேண்டிய நிலை** ஏற்படும். உதாரணமாக குழந்தைகள் பாதிப்பு. (இரகசியம் காக்கப்படும் என்று வாக்குப்பண்ணினால், அது வேறு யாரிடமும் சொல்லப்படக் கூடாது) அந்த நபர் ஏதாவது சட்டத்திற்கு விரோதமாக செய்ததாக அறிக்கை செய்தால், (அல்லது முன்பு செய்ததாக கூறியிருந்தால்) அவர்களிடம் அந்த சட்டத்தைப் பற்றிப் பேசுவது அவசியம். அவர்கள் ஒரு வேளை அந்த ஊழிய நேரத்தை நிறுத்தி விடக் கூட விரும்பலாம். அவர்கள் செய்ததற்கு பதிலாக சில காரியங்கள் செய்யவதை கர்த்தரே விரும்புகின்றார் என்று அவர்களுக்குச் சொல்ல வேண்டும். அது ஒரு பணத் தீர்வாக அல்லது காயப்படுத்திய நபரிடம் கேட்கும் மன்னிப்பாகக் கூட இருக்கலாம்.
- ஒரு மரியாதையான அணுகுமுறை வேண்டும். குறிப்பாக நிதானமின்றி இருப்பது, சத்தம் போடுவது, அல்லது ஊழியம் பெறுகின்ற நபரை மிரட்டுவது போன்ற காரியங்களைச் செய்யக் கூடாது. ஊழியம் பெறும் நபர் இடைப்பட்ட நேரத்தில் நிறுத்தச் சொன்னால் உடனே நிறுத்தி விட வேண்டும். அவர்கள் விரும்பினால் மற்றொரு நேரம் திரும்பி வருவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும்.
- அந்த ஊழியம் பெறும் நபர் சரியாக ஒத்துழைக்கவில்லை என்றால், அவர்களை விட்டு விட வேண்டும். வ்ற்புறுத்தக் கூடாது. அவர்கள் இந்த விதமான ஊழிய அனுபவம் பெற ஆயத்தம் இல்லாமல் இருக்கலாம். அது கர்த்தருடைய நேரத்தில் செய்யப்பட வேண்டும்.
- அவர்கள் செய்ததற்காக, சொன்னதற்காக அல்லது அவர்களுக்குச் செய்யப்பட்டதற்காக அவர்கள் மீது குற்றம்சாட்டக் கூடாது.
- அந்த நபர் பகிர்ந்து கொள்ளும் செய்தியைப் பயன்படுத்தக் கூடாது. அவர்களுக்கு விரோதமாக அந்த செய்தியை

நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பிரசங்கங்களிளோ அல்லது தனிப்பட்ட நிலையிலோ பயன்படுத்தக் கூடாது.

- அந்த ஊழியம் பெறும் நபரைக் **(கண்களைத் திறந்து!)** கவனிக்க வேண்டும். அவர்களுடன் ஜெபிக்கும் போதும் கவனிக்க வேண்டும். அவர்களுக்கு அல்லது உங்களுக்கு எது வேண்டுமானாலும் நடக்கலாம்!
- **எப்போதும் கர்த்தருக்கு மகிமை கொடுங்கள்.** பெருமை வராமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள் கர்த்தர் செய்ததற்கு நீங்கள் பெருமை கொள்ளக் கூடாது.

## குழந்தைகளுக்கு ஊழியம் செய்யும் போது அவசியமான கூடுதல் நெறிமுறைகள்

**ஊழியம் செய்யும் முன்பும், செய்யும் போதும், செய்த பின்பும் குழந்தையின் பாதுகாப்பு மிகவும் முக்கியம்.**

- *ஒவ்வொரு குழந்தையும் ஆவி, ஆத்துமா, சரீரம் உடைய ஒரு நபர். மோசமான சூழ்நிலைகள், பரிவான கவனிப்பின்மை காரணமாக குழந்தைகள் பாதிக்கப்படுவார்கள்.*
- *குழந்தையுடன் ஜெபிக்கும் முன்பாக அவர்களது பெற்றோர்(கள்) அல்லது பாதுகாப்பாளரின் அனுமதியைப் பெற வேண்டும். அந்த குழந்தையும் ஜெபிக்கவும், ஜெப உதவி பெறவும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.*
- *எல்லா நேரத்திலும் குறைந்த பட்சம் நம்பிக்கையான இரண்டு பெரியவர்கள் அவர்கள் உடன் இருக்க வேண்டும். மெதுவாக, பேசி அல்லது அவர்களுடன் இயல்பாக இருந்து அந்த குழந்தையின் நம்பிக்கையை வளர்க்க வேண்டும்.*
- *அவர்களுக்கும் சுய விருப்பம் உண்டு என்பதை நினைவு கூர வேண்டும். அவர்களிடமும் விவரிக்காமல் அல்லது அனுமதி பெறாமல் எதுவும் செய்யக் கூடாது.*
- *அந்த குழந்தைக்குப் போதிக்க வேண்டும். தவறான புரிந்து கொள்ளுதல் இருந்தால் அதனை உணர அந்த குழந்தைக்கு உதவ வேண்டும். அவர்கள் சரியான தேர்வு செய்ய உதவ வேண்டும்.*
- *அவர்களிடம் 'உனது அப்பா உன்னை அடித்தாரா?' என்று 'தூண்டுதல்' கேள்விகளைக் கேட்காமல், அதற்கு மாறாக 'உன் அப்பா அடுத்து என்ன செய்தார்?' என்று கேட்க வேண்டும்.*
- *பரிசுத்த ஆவியானவர் அந்த குழந்தையுடன் நேரடியாகப் பேச எதிர்பார்க்க வேண்டும்,* ***(1 சாமுவேல் 2:18; மத்தேயு 18:3 –4).***
- *அந்த குழந்தை பேசவோ அல்லது பகிரவோ விரும்பவில்லை என்றால், சற்று இடைவேளை விட்டு, சூழலை இலகுவாக்க வேண்டும். அவர்கள் இன்னும் பேச விரும்பவில்லை என்றால் அவர்கள் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.*

- குழந்தையுடனான ஜெப நேரம் ஒரு மணி நேரத்திற்கு மேல் நீடிக்கக் கூடாது.
- அந்த குழந்தை அடிக்கப்பட்டு அல்லது மோசமாக நடத்தப்பட்டு இருந்தால், அவர்கள் அதில் சம்பந்தப்பட்ட நபரை மன்னிக்க ஊக்கப்படுத்த வேண்டும். அதற்கான நேரம் கொடுக்கப்பட வேண்டும்.
- குழந்தை மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது என்றால் அது கவனிக்கப்பட வேண்டும். அப்படி குழந்தை பாதிக்கப்பட்ட சந்தேகம் இருந்தால் அல்லது அத்தகைய குற்றச்சாட்டு உண்டானால், அந்த குழந்தையின் உடனடியான நன்மையைக் கருதி கண்காணிப்புப் போதகருடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அப்படி என்றால் அந்த பாதிப்பு தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் அந்த குழந்தை வாழ்ந்து கொண்டிருக்கும் இடத்தை விட்டு மாற்றப்படவும் வேண்டும் என்று அர்த்தம்.

## *விடுதலைக்கான கூடுதல் வழிகாட்டுதல்*

*இப்படி விவரிக்கப்பட்ட வழியில் மக்களுடன் ஜெபித்ததும், விடுதலை உண்டாகலாம். ஆனால் அதில் அசுத்த ஆவிகளின் வெளிப்பாடு பொதுவாக இருக்காது. சில நேரம், இந்த ஊழியத்தை பெற்றுக் கொள்கின்றவர்கள் சில வித்தியாசமான வெளிப்பாடுகளை சந்திக்கலாம். (உதாரணமாக இயல்பிற்கு மாறான சோர்வு, நடுக்கம், கண்களை சுழற்றுதல்) அப்படி என்றால் இது இன்னும் கையாளப்பட வேண்டிய குறிப்பிட்ட பாவம் இருக்கின்றது என்பதைக் காண்பிக்கின்றது. இது சம்பவிக்க ஆரம்பித்தால், அந்த ஜெப ஊழியத்தைப் பெறும் நபரிடம் அந்தக் குறிப்பிட்ட பாவம் என்ன என்பதை அறிந்துகொள்ளப் பேச வேண்டும். அந்த நபர் மனம் திரும்பினால் அல்லது அந்த குறிப்பிட்ட பாவத்திற்காக இதயத்தில் இருந்து மன்னிக்கையில், அந்த வெளிப்பாடுகள் நின்று விடும். காரணம் எதிராளியின் சட்ட ரீதியான உரிமை அகற்றப்படுகின்றது.* ***(நீதிமொழிகள் 26:2; எபேசியர் 4:27).*** *வழக்கமாக பிசாசின் செயல்பாடு ஒரு மனிதனை விட்டு எந்த விதமான அடையாளமும் காண்பிக்காமல் அகன்று விடும். ஆனால் சில நேரம் அது விக்கல், இருமல் அல்லது கொட்டாவி போன்றவை சம்பவிக்கலாம். பிசாசின் வெளிப்பாடு ஒரு ஊழியத்திற்குத் தடையாக இருக்கும் என்றால், அந்த ஜெப ஊழியர் இயேசுவின் நாமத்தில் அதிகாரம் எடுத்து, பிசாசைத் துரத்த வேண்டும்.*

*எந்த அசுத்த ஆவியுடனும் பேசவோ அல்லது சத்தமிடவோ அவசியம் இல்லை. மாறாகக் கர்த்தரைத் துதித்து, அவரிடம் ஜெபித்து, ஆவியில் ஜெபித்து (அன்னிய பாஷையில்) இயேசுவின் இரத்தத்தினால் தூய்மைப்படுத்துவதையும், மன்னிப்பின் வேலையையுமே நமது கவனத்தில் கொண்டிருக்க வேண்டும். அந்த நபர் தனது பாவத்தை அறிக்கை செய்கையில், மனம் திடும்பி அல்லது இதயத்தின் ஆழத்தில் இருந்து மன்னிக்கையில், கர்த்தர் அவர்கள் பாவங்களை மன்னித்து, அந்த பாவத்தை வைத்து ஆளுகை செய்து கொண்டிருக்கும் பொல்லாப்பின் காரியத்தில் இருந்து விடுதலைக் கொடுக்கின்றார். பின்னர் அவர்களில் கர்த்தர் செய்த தூய்மைப்படுத்தலை அறிந்து கொள்வார்கள். அவர்கள் விடுதலை அடைந்து, சமாதானம் பெறுவார்கள்.*

*இந்த விதமான அனுபவங்களைப் பெற்ற சில மக்கள் மறுபடியும் பிறந்த அனுபவமுடைய கிறிஸ்தவர்கள் என்பதை இந்த புத்தகத்தை தொகுத்தவர்கள் கண்டறிந்து உள்ளனர். ஒவ்வொரு கிறிஸ்தவ விசுவாசியும் 'கிறிஸ்துவை உடையவர்' என்பதால், அவரிடம் அசுத்த ஆவி இருக்கும் என்பது சாத்தியமில்லை என்று சில கிறிஸ்தவர்கள் கூறுவது உண்டு. நீங்கள் பிசாசைப் பற்றி என்ன நம்பினாலும் சரி, ஒரு கிறிஸ்தவன் பொல்லாத ஆவியினால் ஆளுகை செய்யப்படலாம் என்பது தெளிவாகத் தெரிகின்றது. இயேசு கிறிஸ்துவிடம் அதிகமாக அர்ப்பணித்து, நமது வாழ்வை அவர் ஆளுகை செய்ய அனுமதிக்கும் போது, அவர் நமது பாவங்களையும் நம்மிலும், நம்மைச் சுற்றிலும் இருக்கும் பாதிப்புகளையும் வெளிப்படுத்தி, நாம் அவரிடம் கேட்கும், போது அவற்றை அகற்றுவார். நமது பாவ இயல்பை சிலுவையில் நாம் அடித்து மற்றவர்களை மன்னிக்கையில், நமது பரலோகப் பிதா நம்மைப் பொல்லாப்பில் இருந்து விடுவிக்கின்றார். **(மத்தேயு 6:12-13).***

## பரிந்துரைக்கப்படும் ஊழிய நேரத் திட்டம்

**குறிப்பு:** ஒரு ஊழிய நேரமானது 15 நிமிடத்தில் இருந்து சில மணி நேரங்கள் வரை செல்லலாம். ஆகவே ஒரு நபருக்கு 3 மணி நேரத்திற்குத் திட்டமிட வேண்டும். அந்த 3 மணி நேரத்தில் அந்த நபருக்கு உதவி செய்ய முடியாமல், நேரம் குறைவாய் இருந்தால், அந்த நேரத்தை முடித்து, இன்னொரு நாளில் மற்றொரு சந்திப்பு திட்டமிடப்பட வேண்டும்.

1. ஜெப ஊழியத்திற்காக வழிகாட்டு நடைமுறைகளைப் பயன்படுத்துவது (மேலே உள்ள), அந்த ஊழியத்தைப் பெறும் நபர் தங்களது இதயத்தில் உள்ள பாரத்தை உங்களுடன் பகிர்ந்துக் கொள்ள அவரை ஊக்கப்படுத்தும். அவர்கள் கர்த்தரிடம் நெருங்கி வர அவர்களுக்கு உதவி செய்ய நீங்கள் இருக்கின்றீர்கள் என்று அவர்களுக்கு உறுதியளிக்க வேண்டும். சரியான வேதபகுதிகளை அவர்களுக்கு வாசியுங்கள், உதாரணமாக யாக்கோபு 5:16.

2. **2 தீமோத்தேயு 2:15** ஐ நினைவு கூருங்கள்: *"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு."*

3. அந்த நபருடன் பேசி அவர்கள் வாழ்வில் **மனம்திரும்புதல்** மற்றும்/அல்லது **மன்னிப்பு** அவசியப்படும் காரியங்களை வலியுறுத்துங்கள். அது ஒரு வேளை தெளிவாகத் தெரியலாம். ஒரு வேளை அவர்கள் அதற்காக ஜெபிக்க வேண்டும் என்று கூட எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். இதனை வேதாகமத்தில் இருந்து வேத வார்த்தைகளைப் பயன்படுத்தி உணர்வுப்பூர்வமாகச் செய்ய வேண்டும். **நினைவுகூருங்கள்,** பரிசுத்த ஆவியானவரே உணர்த்துகின்றவர்நாம் அல்ல. கர்த்தருக்கு முன்பாக முழுவதும் உண்மையாக இருக்க நினைவு கூருங்கள்.

4. நீங்களும் அவரது ஜெபத்தைக் கேட்டு அவர்களது ஜெபத்துடன் ஒரு மனப்படுவதற்கு ஏதுவாக அந்த ஊழியம் பெறும் நபரை **சத்தமாக** ஜெபிக்க வேண்டிக் கொள்ள வேண்டும். பாவத்தை **அறிக்கையிடுவது** வேதாகமத்தில் மிகவும்

சத்தமாகவே சொல்லப்பட்டு உள்ளது.

5. ஊழியம் பெறும் நபரைக் கவனியுங்கள். கர்த்தர் என்ன செய்கின்றார் என்பதை அறிய அவர்களை **நெருங்கிக் கவனியுங்கள்**. எப்போதும் பரிசுத்த ஆவியானவரைக் கவனிக்கையில், நீங்கள் தொடர வேண்டுமா அல்லது நிறுத்த வேண்டுமா அல்லது திசையை மாற்ற வேண்டுமா என்பதை அவர்கள்து உணர்ச்சி காண்பித்து விடும்.

6. அவர்கள் ஜெபிக்கையில் உண்மையான சம்பவங்களைக் கூறி, மக்களின் பெயர்களைக் கூறி, கர்த்தருடன் மிகவும் **குறிப்பாகவும், உண்மையாகவும்** இருக்க உதவ வேண்டும். உதாரணமாக, 'ஆண்டவருக்கு ஸ்தோத்திரம், ஆண்டவருக்கு ஸ்தோத்திரம், ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்' என்று சொல்லுவதற்குப் பதிலாக 'நான் எனது சகோதரரை அடித்து விட்டேன், அவளுடன் மிகவும் கோபமாக இருந்தேன், தயவாய் என்னை மன்னியும்' என்று சொல்ல வேண்டும். இது அவர்களது பாவங்களுக்காக அவர்கள் பொறுப்பெடுத்துக் கொள்ள உதவுகின்றது. பாவத்தின் விளைவுகளுக்காக இன்னும் அதிகமாக மனம்திரும்பி, சரியாக மன்னிக்க அவர்களை சரியாக ஜெபிக்கச் செய்யுங்கள்.



7. மனம் திரும்புதல் ஜெபத்தை அவர்கள் நிறைவு செய்ததும், அவர்களுக்கு 1 யோவான் 1:8-10 ஐ வாசியுங்கள். இந்த குறிப்பிட்ட பாவம் மன்னிக்கப்பட்டது என்பதை அவர்களுக்கு நிச்சயப்படுத்துங்கள்.

8. தெய்வீகமற்ற உறவுகளைக் குறித்து மன்னித்து, மனம்திரும்பி, ஜெபத்தில் தெய்வீகமற்ற உறவுகளை நீங்கள் உடைக்க வேண்டும். 'ஆவியின் பட்டயமாகிய' வேதாகமத்தைப் தீர்க்கதரிசன விதமாகப் பயன்படுத்தி அந்த 'உறவுகளை' அறுத்து விடுங்கள். பேசப்பட்ட அத்தனை சத்தியங்களையும், எதிர்மறையான வார்த்தைகளையும் மறுதலித்த பின்பு, அந்த மனிதனின் மீது இருக்கும் வல்லமையை இயேசுவின் அதிகாரமுள்ள நாமத்தினால் உடைத்து, அவர்களை இயேசுவின் இரத்தத்தினால் கழுவும்படியாக கர்த்தரிடம் கேளுங்கள்.

9. இயேசுவானவரும் பரிசுத்த ஆவியானவரும் தங்களது இதயத்தில் ஆழமாக வந்து மீண்டுமாய் அவர்களை கர்த்தருடைய அன்பினால் நிரப்பி, பரிசுத்த ஆவியினால் நிரம்பி வழியும்படியாக நிரப்பும் அளவிற்கு அழைக்க அந்த மனிதரை வழி நடத்த வேண்டும்.

10. அந்த ஊழியம் பெறும் நபர் தன்னிடம் இயேசுவானவர் பேசும்படியாகக் கேட்க அழைக்க வேண்டும். (சிறிய ஜெபத்தில்). அதன் பின்னர் **அமைதியாக** அவரைக் கவனிக்கக் கேட்க வேண்டும். அது ஒரு சிறிதான ஜெபமாக இருக்க வேண்டும். அதன் பின்னர் அவர்களிடம் கர்த்தர் பேசுகின்றதை அமைதியாகக் கேட்க நீண்ட நேரம் எடுத்துக் கொள்ள வேண்டும். கர்த்தர் அவர்களுக்கு ஒரு வார்த்தையையோ, வேத பகுதியையோ, அல்லது ஒரு 'உணர்வையோ' அல்லது ஏதேனும் ஒன்றை செய்த உணர்ச்சியையோ கொடுக்கலாம்.

11. நீங்கள் அவரது ஆசீர்வாதங்களுக்காக அமைதியாக ஜெபிக்கையில், கர்த்தர் அந்த மனிதருக்கு ஊழியம் செய்ய நேரம் கொடுங்கள்.

12. அதன் பின்னர் சில நேரம் கழித்து, அந்த நபருக்கு என்ன நடந்தது என்றும், அவர்கள் எப்படி உணருகின்றனர், கர்த்தர் தங்களுக்கு செய்ததை எப்படி உணருகின்றனர் என்பதை விவரிக்க வேண்டும். அவர்கள் கர்த்தரிடம் பெற்றுக் கொண்டதற்கு ஏற்புடைய வேத பகுதி இருக்கும் என்றால் அதனை அவர்களுக்கு சத்தமாக வாசிக்க வேண்டும். உதாரணமாக, அவர்கள் ஒரு பிரகாசமான வெளிச்சம் கண்டிருந்தால், "நான் உலகத்திற்கு ஒளியாக இருக்கின்றேன் என்று இயேசுவானவர் கூறினார்" ***(யோவான் 8:12)*** என்னும் வேதபகுதியைக் காண்பியுங்கள். அந்த நபருக்காக கர்த்தர் ஒரு 'வார்த்தை' அல்லது 'காட்சியை' உங்களுக்குத் தரலாம்.

13. அவர்கள் விரும்பினால் அந்த ஜெப வேளை அவர்களுக்கு எப்படி இருந்தது என்று கூறும்படியாகக் கேளுங்கள்.


14. அவர்களை ஆசீர்வதித்து அனுப்பி விடுங்கள்.

15. அந்த ஊழிய நேரத்திற்குப் பின்பு, உங்கள் குழுவில் உள்ள மற்றவர்களுடன் ஜெபியுங்கள். உங்களைக் கர்த்தர் தூய்மைப்படுத்தக் கேளுங்கள். குறிப்பாக நீங்கள் கேட்டவைகளின் காரணமாய் உங்கள் நினைவை தூய்மைப்படுத்தக் கேளுங்கள். அவரது அன்பினாலும், அவரது பரிசுத்த ஆவினாலும் கர்த்தர் உங்களை நிரப்பக் கேளுங்கள்.

# பின் இணைப்பு

# புதிய ஏற்பாட்டில் உள்ள மனம்திரும்புதல் அட்டவணை

*“எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமை யற்றவர்களாகி,”* ***(ரோமர் 3:23)***



பாவம் கர்த்தருடன் உள்ள உறவை உடைத்து, அவரை விட்டு நம்மைப் பிரிக்கின்றது. நூறு பாவங்கள் உடைய இருபத்திஒரு புதிய ஏற்பாட்டு அட்டவணை உள்ளது. இந்த அட்ட்வணையில் பத்து கட்டளைகளும் உள்ளது. அதில் நான்காவது கட்டளை மட்டும் இல்லை ஓய்வு நாளை அனுசரியுங்கள் ***(ரோமர் 14:5-6)*** அவைகள் இயேசுவின் புதிய கட்டளைக்கு ஆழமான அர்த்தத்தைத் தருகின்றது: *“நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.”* ***(யோவான் 13:34)***

நமது பாவங்கள் குறித்த அறிவு நமது சிந்தனையில் எங்கோ உள்ளது. அதனை நினைவு கூருவது சற்று கடினமாக இருக்கலாம். பரிசுத்த ஆவியானவர் அதனை அறிவார். அவர் நமக்கு உதவி செய்வார்.

*“தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.”* ***(சங்கீதம் 139:23-24)***

*“என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.”* ***(யோவான் 14:26)***

நீங்கள் இந்த வேதப்பகுதிகளை வாசிக்கையில் நீங்கள் எந்த இடத்தில் பாவம் செய்தீர்கள் என்பதை உங்களுக்குக் காண்பிக்கக் கேளுங்கள்.

*மத்தேயு 15:18-20*

*மாற்கு 7:21-23*

*ரோமர் 1:29-32*

*ரோமர் 13:7-9*

*ரோமர் 13:13-14*

*1 கொரிந்தியர் 5:9-11*

*1 கொரிந்தியர் 6:9-10*

*2 கொரிந்தியர் 12:20-21*

*கலாத்தியர் 5:19-21*

*எபேசியர் 4:17-19*

*எபேசியர் 4:25-31*

*எபேசியர் 5:3-4*

*கொலோசெயர் 3:5-6*

*கொலோசெயர் 3:8-9*

*1 தீமோத்தேயு 1:9-10*

*2 தீமோத்தேயு 3:1-5*

*தீத்து 3:3-5*

*1 பேதுரு 2:1*

*1 பேதுரு 4:2-4*

*வெளிப்படுத்தல் 21:8*

*வெளிப்படுத்தல் 22:14-15*

மனம்திரும்புதலின் நன்மைகள் திரளானவை. அத்தகைய நன்மைகளைக் கூறும் சில வேதபகுதிகள்:

*சங்கீதம் 19:12-13*

*சங்கீதம் 32:1-5*

*சங்கீதம் 66:16-20*

*நீதிமொழிகள் 28:13*

*ஏசாயா 55:7*

*லூக்கா 13:3*

*அப்போஸ்தலர் 17:30*

*1 பேதுரு 3:7,* 12

## *சில பொதுவான மனம்திரும்புதல் காரியங்கள்*

இது ஒரு பூரணமான மனம்திரும்புதல் காரியங்கள் பற்றிய அட்டவணை **அல்ல.** ஆனால் இது வழிகாட்டுதலுக்கு மட்டும்தான். நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு மாறான ஒரு செயலில் ஈடுபட்டால் அல்லது செய்தால், அது பாவம். நாம் அதனை நிறுத்த வேண்டும், அதனில் இருந்து மனம்திரும்ப வேண்டும், அவரது மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கர்த்தர் விரும்புவார். சில நேரம் நாம் பரிசுத்த ஆவியானவர் தவறு என்று காண்பித்து, நமக்கு உணர்த்துகின்ற ஏதேனும் ஒன்றை நாம் செய்யும் போது, அது ஒரு வேளை நாம் விரும்ப முடியாத ஒன்றாகக் கூட இருக்கலாம்.

*"சரியற்ற ஒன்றைச் செய்கின்றதாக நீங்கள் நம்பினால், நீங்கள் பாவமே செய்கின்றீர்கள்."* ***(ரோமர் 14:23*** பின்பாகம்; ***யாக்கோபு 4:17)***

ஆண்டவரே, உமது வார்த்தை கூறுவது என்னவென்றால்...

| | |
|---|---|
| அசட்டை | *லூக்கா 9:62; வெளிப்படுத்தல் 2:4; 3:2-3, 16* |
| அறியாமை | *ஏசாயா 5:13; ஓசியா 4:6; அப்போஸ்தலர் 17:30-31* |
| அன்பின்மை | *யோவான் 15:17; ரோமர் 1:31; கலாத்தியர் 5:14; 1 யோவான் 4:7-8* |
| அற்பத்தனம் | *சங்கீதம் 112:4,5,9; நீதிமொழிகள் 19:17; மத்தேயு 5:42; லூக்கா 3:11; 6:38; அப்போஸ்தலர் 2:44-45; 1 யோவான் 3:17* |
| அவிசுவாசியைத் திருமணம் செய்வது | *யோசுவா 23:12-13; 1 இராஜாக்கள் 11:2-4; எஸ்றா 9:12; 2 கொரிந்தியர் 6:14* |
| அசுத்த ஆராதனை | *லேவியராகமம் 19:26, 31; உபாகமம் 17:2-7, 18:9-14* |
| ஆபாசப்படம் (காண்க இச்சை) ஜெபமின்மை | *1 சாமுவேல் 12:23; மாற்கு 14:37-38; பிலிப்பியர் 4:6; 1 தெசலோனிக்கேயர் 5:16-18* |
| ஆவிக்குரிய சுகம் (வேதாகமத்திற்குப் புறம்பாக) | *2 நாளாகமம் 16:12-13; கொலோசெயர் 2:8* |

| | |
|---|---|
| ஆவியானவரை எதிர்ப்பது | *அப்போஸ்தலர் 7:51; 1 தெசலோனிக்கேயர் 5:19-21; 2 தீமோத்தேயு 3:5; எபிரேயர் 10:29* |
| இச்சை | *யாத்திராகமம் 20:17; கொலோசெயர் 3:5; யாக்கோபு 4:2* |
| இச்சை | *மத்தேயு 5:28-29; மாற்கு 7:21; ரோமர் 1:26-27; கலாத்தியர் 5:19; 2 தீமோத்தேயு 2:22; 1 பேதுரு 4:3* |
| இயேசுவை மறுதலிப்பது | *மத்தேயு 10:32-33; எபிரேயர் 10:29; 1 யோவான் 2:22-23* |
| இரக்கமின்மை | *மத்தேயு 7:12; யாக்கோபு 1:27, 2:14-17* |
| ஈர்ப்பு | *எசேக்கியேல் 13:18, 20* |
| உடலில் வரைதல் | *லேவியராகமம் 19:28* |
| உலக ஆசை | *ரோமர் 12:2; 2 தீமோத்தேயு 3:4; தீத்து 2:12; 1 யோவான் 2:15-17* |
| தவறாக நடத்துதல் | *1 கொரிந்தியர் 6:10* |
| விபசாரம் | *மத்தேயு 5:28-32; 1 கொரிந்தியர் 6:9-10* |
| குறிக்கோள் | *மத்தேயு 6:33; கலாத்தியர் 5:20* |
| தாயத்துகள் | *எசேக்கியேல் 13:20* |
| கோபம் | *நீதிமொழிகள் 15:18; மத்தேயு 5:22; கலாத்தியர் 5:20; எபேசியர் 4:26-27; யாக்கோபு 1:19-21* |
| ஜோதிடம் | *ஏசாயா 47:13-14; எரேமியா 10:2* |
| தவறான எண்ணங்கள் | *மாற்கு 7:21; ரோமர் 12:2; பிலிப்பியர் 4:8* |
| தவறான வார்த்தைகள் | *நீதிமொழிகள் 18:21; மத்தேயு 5:22; மத்தேயு 12:36-37; எபேசியர் 4:29; பிலிப்பியர் 4:8; யாக்கோபு 1:26, 3:10* |
| கசப்பு | *எபேசியர் 4:31; எபிரேயர் 12:15* |
| தூஷணம் | *யாத்திராகமம் 20:7; 2 தீமோத்தேயு 3:2* |
| பெருமை பேசுதல் | *யாக்கோபு 4:16* |
| புரளி பேசுதல் | *எபேசியர் 4:31; யாக்கோபு 4:1-2* |
| லஞ்சம் | *யாத்திராகமம் 23:8; உபாகமம் 10:17, 16:19-20; யோபு 36:18; பிரசங்கி 7:7; லூக்கா 3:14* |

| | |
|---|---|
| ஏமாற்றுதல் | *நீதிமொழிகள் 20:23; மாற்கு 7:22; லூக்கா 16:10-13; ரோமர் 13:6-7* |
| குற்றச்சாட்டு | *ரோமர் 14:13; எபேசியர் 4:2; பிலிப்பியர் 4:8* |
| கறை | *லேவியராகமம் 19:35; நீதிமொழிகள் 20:23; லூக்கா 3:12-14; ரோமர் 13:6-7* |
| கடன்/தசம பாகம் தராதது | *மல்கியா 3:8-12; ரோமர் 13:7-9; யாக்கோபு 5:1-6* |
| பிரிவினை | *சங்கீதம் 133 (பிரிவினைக்கு எதிரானது); கலாத்தியர் 5:14-15* |
| கனவீனம் | *உபாகமம் 5:16; 1 கொரிந்தியர் 11:28-30; எபேசியர் 6:2* |
| கர்த்தருக்குக் கீழ்படியாமை | *உபாகமம் 28:1 முன்பாகம்; சங்கீதம் 2:12; லூக்கா 6:46-49; யோவான் 14:23-24; யாக்கோபு 1:22-25, 4:17* |
| பெற்றோருக்குக் கீழ்படியாமை | *யாத்திராகம் 20:12; எபேசியர் 6:2; கொலோசெயர் 3:20* |
| விவாகரத்து | *மல்கியா 2:15-16; மாற்கு 10:2-12; 1 கொரிந்தியர் 7:10-11; எபிரேயர் 13:4* |
| சந்தேகம் | *மத்தேயு 21:21-22; மாற்கு 9:23-24; யாக்கோபு 1:5-8* |
| போதைப்பழக்கம் | *நீதிமொழிகள் 23:29-35; ஏசாயா 5:11-12; கலாத்தியர் 5:21; எபேசியர் 5:18; 1 தீமோத்தேயு 3:2-3* |
| சுயமுனைப்பு | *மாற்கு 10:44; 2 தீமோத்தேயு 3:2* |
| பயம் | *ஏசாயா 41:10, 43:1; மத்தேயு 10:28-33; ரோமர் 8:15; தீமோத்தேயு 1:7; 1 யோவான் 4:18* |
| காமவிகாரம் *(பாலியல் பாவம் என்பதை காண்க)* | |
| ஜோசியம் சொல்லுவது | *லேவியராகமம் 19:26 பின்பாகம்; உபாகமம் 18:10; எரேமியா 10:2; அப்போஸ்தலர் 16:16* |

| | |
|---|---|
| பெருந்தீனி | *சேக்கியேல் 16:49; எபேசியர் 5:5; தீத்து 1:12* |
| கோள் பேசுதல் | *லேவியராகமம் 19:16; ரோமர் 1:29-30; 2 கொரிந்தியர் 12:20* |
| பெருமை | *அப்போஸ்தலர் 2:44-45; எபேசியர் 5:5; 1 தீமோத்தேயு 6:10* |
| வெறுப்பு | *மத்தேயு 5:43-45; 1 யோவான் 2:9-11, 3:15, 4:20-21.* |
| ஓரினச்சேர்க்கை | *லேவியராகமம் 18:22; ரோமர் 1:26-27; 1 கொரிந்தியர் 6:9-10* |
| கைரேகைகள் | *உபாகமம் 18:10; எரேமியா 10:2* |
| விக்கிரகங்கள் | *யாத்திராகமம் 20:4,5; உபாகமம் 4:15-19, 6:13-18, 7:25-26, 12:2-4; எரேமியா 10:3-5; 1 யோவான் 5:21* |
| விக்கிரகாராதனை | *யாத்திராகமம் 20:3-4; உபாகமம் 6:13-18, 32:16-18; சங்கீதம் 106:34-39; ஓசியா 4:12; 1 கொரிந்தியர் 6:9-11; கலாத்தியர் 5:19-20; 1 பேதுரு 4:3; 1 யோவான் 5:21* |
| பொறுமையின்மை | *எண்ணாகமம் 21:4-5; யாக்கோபு 1:12; 2 பேதுரு 3:9* |
| பொறாமை | *நீதிமொழிகள் 14:30; ரோமர் 13:12-14; 1 கொரிந்தியர் 3:3; யாக்கோபு 3:16-18, 4:1-3* |
| நியாயம்தீர்ப்பது (குற்றப்படுத்துவது) | *மத்தேயு 7:1-2; ரோமர் 14:13: யாக்கோபு 4:11-12* |
| சோம்பல் | *நீதிமொழிகள் 24:30-34; 1 கொரிந்தியர் 9:27; யாக்கோபு 1:22; 2 தீமோத்தேயு 2:15* |
| பொய் சொல்லுதல் | *யாத்திராகமம் 20:16; எபேசியர் 4:25; கொலோசெயர் 3:9; வெளிப்படுத்தல் 21:8* |
| மந்திரம் | *எசேக்கியேல் 13:18, 20; அப்போஸ்தலர் 19:18-19; வெளிப்படுத்தல் 9:21, 22:15* |
| மாய்மாலம் | *மத்தேயு 7:3-5, 23:1-33; லூக்கா 13:14-16; கலாத்தியர் 2:11-13* |

| | |
|---|---|
| தற்காப்புக் கலைகள் | *யாத்திராகமம் 20:3-4; 1 கொரிந்தியர் 6:9-11; கலாத்தியர் 5:19; 1 யோவான் 5:21; வெளிப்படுத்தல் 22:15* |
| கொலை | *யாத்திராகமம் 20:13; மத்தேயு 5:21-22; 1 யோவான 3:15; வெளிப்படுத்தல் 21:8* |
| முறுமுறுத்தல் | *யாத்திராகமம் 16:2; 1 கொரிந்தியர் 10:10; யாக்கோபு 5:9* |
| கர்த்தரை முழுமையாக நேசியாமல் இருப்பது | *யாத்திராகமம் 20:3; உபாகமம் 6:5; மத்தேயு 6:33; மாற்கு 12:29-30; யாக்கோபு 1:5-8; வெளிப்படுத்தல் 2:4-5, 3:15-16* |
| சத்தியம் செய்தல் | *மத்தேயு 5:33-37; யாக்கோபு 5:12* |
| சுய முயற்சியைச் சார்ந்து இருப்பது | *சங்கீதம் 118:8-9; ரோமர் 4:3; கலாத்தியர் 2:16, 3:6-12; எபேசியர் 2:8-10; எபிரேயர் 11:6* |
| பட்சபாதம் | *அப்போஸ்தலர் 10:34-35; ரோமர் 2:11; எபேசியர் 6:9; கொலோசெயர் 3:25; யாக்கோபு 2:1-9* |
| பெருமை | *2 நாளாகமம் 32:26; நீதிமொழிகள் 16:5; 2 தீமோத்தேயு 3:2; யாக்கோபு 4:6, 10; 1 பேதுரு 5:5* |
| முன்கோபம் | *சங்கீதம் 37:8; நீதிமொழிகள் 14:17, 29:22; எபேசியர் 4:31; தீத்து 1:7* |
| எதிர்ப்பு | *எண்ணாகமம் 16 முன்பாகம், 27:12-14; உபாகமம் 9:7; 1 சாமுவேல் 15:23; யோவான் 2:5, 14:15* |
| புறக்கணிப்பு | *ஏசாயா 49:14-16 முன்பாகம்; மத்தேயு 5:43-45; எபேசியர் 1:5-6; 1 தெசலோனிக்கேயர் 4:9; 1 யோவான் 2:7* |
| பரிசுத்த சுயநலம் | *ரோமர் 2:8; பிலிப்பியர் 2:3-4; யாக்கோபு 3:16* |
| சுய நீதி | *மத்தேயு 23:6-7; லூக்கா 18:9-14; பிலிப்பியர் 3:8-9* |
| சுய சித்தம்/ பிடிவாதம் | 1 சாமுவேல் 15:23; 2 நாளாகமம் 30:8-9; ரோமர் 2:5 |
| பாலியல் பாவம் | *யாத்திராகமம் 20:14; அப்போஸ்தலர் 15:20; 1 கொரிந்தியர் 3:16-17, 6:18-20; கலத்தியர் 5:19-21; 1 தெசலோனிக்கேயர் 4:3; எபிரேயர் 13:4* |

| | |
|---|---|
| திருடுதல் | *யாத்திராகமம் 20:15; லூக்கா 19:8; எபேசியர் 4:28* |
| தற்கொலை எண்ணம் | *யாத்திராகமம் 20:13; அப்போஸ்தலர் 16:27-28; 1 கொரிந்தியர் 3:16-17, 6:19-20; எபேசியர் 2:10; யாக்கோபு 1:18* |
| நம்பிக்கையின்மை/ நம்பாதது | *சங்கீதம் 118:8; மத்தேயு 13:58; மாற்கு 9:19-24; லூக்கா 1:37* |
| மன்னிக்க முடியாமை | *மத்தேயு 6:14-16; மத்தேயு 18:21-35; மாற்கு 11:25-26* |
| நன்றியில்லாமை | *உபாகமம் 28:47-48; லூக்கா 17:17-18; பிலிப்பியர் 4:8; 2 தீமோத்தேயு 3:2* |
| பரிசுத்தமின்மை | *லேவியராகமம் 11:44; ரோமர் 1:29; 2 தீமோத்தேயு 3:2; 1 பேதுரு 1:15-16* |
| வைராக்கியம் | *லேவியராகமம் 19:18; சங்கீதம் 94:1; ஒபதியா 15; மத்தேயு 5:43-48, 6:14-15; ரோமர் 12:19; எபிரேயர் 10:30-31* |
| வன்முறை | *சங்கீதம் 7:16; நீதிமொழிகள் 16:29; 1 தீமோத்தேயு 3:3; தீத்து 1:7-8* |
| மனைவியை அடிப்பது | *நீதிமொழிகள் 31:10-31; எபேசியர் 5:25-26; கொலோசெயர் 3:19; 1 தீமோத்தேயு 3:3; தீத்து 1:7; 1 பேதுரு 3:7* |
| பில்லிசூனியம் | *லேவியராகமம் 19:31; உபாகமம் 18:9-14; 1 சாமுவேல் 15:23; அப்போஸ்தலர் 19:19; கலாத்தியர் 5:19-21; வெளிப்படுத்தல் 21:8* |
| வருத்தம் | *மத்தேயு 6:25-34; பிலிப்பியர் 4:6-7; யாக்கோபு 5:7* |

# உங்கள் குடும்ப சரித்திரத்தை உண்டாக்குங்கள்


ஒரு குடும்ப வரைபடம் என்பது ஒரு காட்சி வடிவில் நமது குடும்பங்களில் உள்ள பல தரப்பட்ட தலைமுறைகளைப் பார்க்க நம்மை அனுமதிக்கின்றது. குறிப்பாக, அந்த வரைபடமானது நமது குடும்பங்களில் பல தலைமுறைகளுக்கும் மேலாக உள்ள ஆசீர்வாதங்களை/ மற்றும் அல்லது சாபங்களை அடையாளம் காண உதவுகின்றது. குடும்பங்கள் சிக்கலானவை. அதன் வடிவங்கள் மறைந்து இருக்கலாம். ஆகவே, எந்த ஒரு வடிவங்களானாலும் அந்த வரைபடத்தை உண்டாக்கி, ஆய்வு செய்ய முடியும்.

நாம் ஒரு குடும்ப சரித்தர வரைபடம் உண்டாக்கும் போது மக்களைக் குறிப்பிட அடையாளங்களையும், குடும்ப உறவுகளைக் குறிப்பிட கோடுகளையும் நாம் பயன்படுத்துகின்றோம். இதன் மூலம் அந்த வரைபடத்தை எளிதாக அமைத்துக் கொள்ளலாம், ஆகவே குடும்பத்தின் அங்கத்தினர்களை வரைய,

1. ஒரு ஆண் கட்டத்தினால் குறிப்பிடப்படுகின்றார். □

   மேலும் ஒரு பெண் வட்டத்தினால் குறிப்பிடப்படுகின்றார். □


2. திருமணம் என்பது ஆணையும் பெண்ணையும் இணைக்கின்ற ஒரு நேர் கோட்டினால் குறிப்பிடப்படுகின்றது



தம்பதியினர்

3. திருமணத்தில் உண்டான குழந்தைகள் திருமண கோட்டில் இருந்து பிரியும் ஒரு கிளையினால் குறிப்பிடப்படுகின்றனர் (கீழே காணவும்)

இது மூன்று குழந்தைகளை உடைய ஒரு தம்பதியினரைக் காண்பிக்கும் குடும்ப சரித்திர வரைபடத்தின் உதாரணம்




தம்பதியர்

தம்பதியினரின் குழந்தைகள்

இந்த உதாரணத்தில் தம்பதியினரின் முதல் குழந்தை பெண் குழந்தை, இரண்டாவது ஆண் குழந்தை, மூன்றாவதும் பெண் குழந்தை


கீழ்க்காணும் படத்தில், இப்போது குழந்தைகளுக்குத் திருமணமாகி விட்டது



தம்பதியினர்

தம்பதியினரின் திருமணமான குழந்தைகள்

கீழ்க்காணும் உதாரணத்தில், இரண்டாம் தலைமுறையில் உள்ள அத்தனை குழந்தைகளுக்கும் இப்போது குழந்தைகள் இருக்கின்றன. இப்போது அந்த வரைபடமானது மூன்று தலைமுறைகளைக் காண்பிக்கின்றது:



பெரிய பெற்றோர்.

பெற்றோர்,

குழந்தைகள்

மேலே உள்ள உதாரண வரைபடத்தில், பெரிய பெற்றோரின் முதல் குழந்தை ஒரு மகள். அவருக்குத் திருமணமாகி ஒரு மகளும் இரண்டு மகன்களும் உள்ளனர். அந்த பெரிய பெற்றோரின் இரண்டாவது குழந்தை ஆண். அவருக்குத் திருமணமாகி ஒரு மகள் இருக்கின்றார். பெரிய பெற்றோரின் மூன்றாவது குழந்தையும் மகள். அவருக்குத் திருமணமாகி இரண்டு மகன்கள் உள்ளனர். மூன்றாவது தலைமுறையினர் யாவரும் ஒன்று விட்ட சகோதரர்கள்.

உங்களது குடும்ப வரைபடத்தில், நீங்கள் அறிந்து வைத்திருக்கும் அத்தனை தலைமுறையினரையும் சேர்க்கலாம்.

உங்களது குடும்பத்திற்காக ஒரு வரைபடம் வரையுங்கள். உங்கள் குடும்பத்தின் அத்தனை அங்கத்தினர்களையும், தலைமுறை தலைமுறையாக, ஒரு பெரிய பெற்றோரிடம் இடம் இருந்து ஆரம்பித்து, மேலே காண்பிக்கப்பட்டபடி உங்கள் குடும்ப சரித்திர வரைபடம் வரையுங்கள். அந்த தனிப்பட்டவர்களை எளிதில் அடையாளம் காண் ஏதுவாக அவர்களது பெயர்களையும்

அந்த வரைபடத்தில் சேர்க்கலாம். உங்கள் அம்மாவின் வழியினருக்கு ஒன்றும், உங்கள் அப்பாவின் வழியினருக்கு ஒன்றும் என்று தனித்தனியாக வரைபடங்கள் வரைய வேண்டும்.

பின்னர் ஒரு எளிதான அடையாள முறை மூலம் (உதாரணமாக வண்ணங்கள், அடையாளம், அல்லது எழுத்து) நீங்கள் கருதுகின்ற குணாதிசயங்கள் எதினாலாவது பாதிக்கப்பட்டு இருக்கின்றார்களா என்று அடையாளமிடவும். கீழே கொடுக்கப்பட்டு இருக்கின்ற பாதிப்புகளின் அட்டவணையைப் பயன்படுத்தி, ஒரு நேரத்தில் ஒரு குணாதிசயத்தைக் கவனிக்கவும். நீங்கள் கவனிக்க வேண்டும் என்று விரும்புகின்ற வேறு சில பிரச்சனைகளும் குடும்பத்தில் இருக்கின்றது என்பதை நீங்கள் கண்டறியலாம். அதனை அதே முறையில் உங்கள் குடுமப வரைபடத்தில் அடையாளமிடவும்.


1. திருமண பிரச்சனைகள் (பிரிவு/விவாகரத்து/பல தார திருமணம்/ கள்ளத்தொடர்புகள்
2. மோசமான வியாதி/இளவயது மரணம்
3. பணத் தோல்வி
4. குடும்பத்தில் சந்தோசமின்மை/பிரிவு
5. தீவிரமான சுகவீனம் (மனம், சரீரம்)
6. மகப்பேறு பிரச்சனைகள்/குழந்தையின்மை
7. விபத்துகள்
8. அடிமைத்தனங்கள்
9. நிறைவேறாத நோக்கம்
10. பாலின பாதிப்பு/தவறாக நடத்தப்படுவது

இந்தப் பாதிப்புகளில் அதிகமானவை உங்கள் குடும்பத்தில் இல்லாமல் இருக்கலாம் அல்லது மறைத்து வைக்கப்பட்டு இருக்கலாம்.

குடும்ப வரைபடத்தை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதற்கு உதாரணம்

இந்த குடும்ப வரைப்படத்தில் ஒவ்வொரு குடும்பத்தின் இரண்டாவது குழந்தைகளும் (அனைத்தும் ஆண்கள்) மன

அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டு உள்ளனர் என்பதைக் கவனிக்கவும்.



*X= இள வயதில் மரித்தவர்கள்*

*/= திருமண உறவு பிரிவு*

*கறுப்பு நிற அடையாளம் = மன நல வியாதி அல்லது மன அழுத்தம்*

வேறு வண்ணங்கள் அல்லது அடையாளங்களைப் பயன்படுத்தி, நீங்கள் வேறு பாதிப்புகளைக் காண்பிக்கலாம்.

உங்களது குடும்பத்தைக் கவனிக்கையில் நீங்கள் ஜெபியுங்கள். நீங்கள் காண வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் விரும்புகின்ற காரியங்களை உங்களுக்குக் காண்பிக்க பரிசுத்த ஆவியானவரைக் கேளுங்கள்.

நீங்கள் எத்தனை வரைபடங்கள் வேண்டுமானாலும் வரைந்து, ஆசீர்வாதங்கள் அல்லது பாதிப்புகள், அணுகுமுறை மற்றும் செயல்கள் (தெய்வீகமான மற்றும்/அல்லது பாவமான) போன்றவைகளைக் காண்பிக்கலாம். நல்ல அம்சங்களுக்காகக் கர்த்தருக்கு நன்றி செலுத்துவது நல்லது. ஆனால், பாதிப்புகளின் காரியங்கள் அல்லது அடிக்கடி உண்டாகும் பாதிப்புகள் இருக்கும் என்றால், உங்களது குடும்பம் ஆசீர்வாதமாக இல்லை. அது ஒருவேளை சாபத்தின் கீழாக இருக்கலாம்.

அதன் காரணங்கள் என்ன, அதற்கு தீர்வு என்ன, உங்களையும், உங்கள் குடும்பத்தையும் விடுவிக்க உங்களுக்காக இயேசுவானவர் செய்தவைகளைப் பெற்றுக் கொள்வது எப்படி என்பதைக் கண்டறிய ‘தெய்வீக சுதந்திரத்தை மீட்டெடுத்தல்’ என்னும் அத்தியாயத்தை வாசியுங்கள்.

## *தலைமுறைகளின் ஆசீர்வாதத்தைக் கொண்டுவர ஜெபம்*[11]

*வேதாகமத்தின்படி எதிர்மறையான விளைவுகளை (சாபங்களை) உண்டாக்கக்கூடிய பாவங்களை அறிக்கை செய்து, அதனில் இருந்து மனம்திரும்ப ஒரு ஜெபம் கீழே கொடுக்கப்பட்டு இருக்கின்றது. இதில் ''**ஒருவேளை**'' என் வார்த்தை சேர்க்கப்பட்டு ஜெபிக்கப்படலாம். காரணம் நாம் மூதாதையர்கள் என்ன பாவம் செய்தனர் என்று நாம் அறிவதில்லை. பின்னர் எதிர்மறையான விளைவுகள் நம்மை விட்டு (நமது குடும்ப அங்கத்தினர்கள், நமது சபைகள் மற்றும் தேசத்தை) அகற்றக் கேட்கலாம். நிரந்தரமான ஆசீர்வாதங்களை நமக்குக் கொண்டுவர அவரை நாம் கேட்க வேண்டும்.*



*"அன்புள்ள பரலோகப் பிதாவே, ஆதாம் மற்றும் ஏவாள் துவங்கி எனது தலைமுறையினர் அத்தனை பேரும் உமக்கு விரோதமாகப் பாவம் செய்தோம் என்று அறிக்கை செய்கின்றேன்; பொல்லாப்பானதைச் செய்து, பொல்லாதவர் களாக நடந்து கொண்டோம் **(2 நாளாகமம் 6:37).***

*"சாபமானது என் மீது, எனது சபையின் மீது, மற்றும் எனது தேசத்தின் மீது வரும் என்று வேதாகமம் கூறும் வழிகளில் எல்லாம் பாவம் செய்திருக்கின்றோம் என்று நான் அறிக்கை செய்கின்றேன்.*

*"தயவாய் என்னையும், ஆதாம் மற்றும் ஏவாள் துவங்கி எனது ஒவ்வொரு மூதாதையரையும் மன்னியும்.*

**ஒரு வேளை செய்தால் அல்லது செய்திருந்தால்:**

- *நாங்கள் உம்மிடமாகத் திரும்பவில்லை, அல்லது உமக்கு அனைத்து மகிமையையும் கொடுக்கவில்லை **(வெளிப்படுத்தல் 16:9).***
- *உம்மை முழு இதயத்துடன், ஆத்துமாவுடன், எண்ணத்துடன், பெலத்துடன் நாங்கள் நேசிக்கவில்லை **(உபாகமம் 6:4-5; மாற்கு 12:30; 1 கொரிந்தியர் 16:22; 1 யோவான் 5:21).***
- *நாங்கள் உம்மைப் புறக்கணித்து விட்டோம், உமது கட்டளைகளை அசட்டை செய்து விட்டோம், எங்களது வழிகளில் நாங்கள் நடந்து விட்டோம். **(உபாகமம் 11:28; உபாகமம் 27:15-26, 28:15; ஏசாயா 24:5-6; ஏசாயா 53:6; எரேமியா 11:3).***

---

11. *இது பாவங்களின் முழு தொகுப்பு அல்ல. ஆனால் இது வேதாகமத்தில் வரும் சாபம் என்பதுடன் தொடர்புடையது மட்டுமே.*

• எங்களைப் படைத்தவராகிய உம்மை நாங்கள் ஆராதிக்கவில்லை. எங்களையும், மற்ற மக்களையும், ஒவ்வொரு விதமான விக்கிரகங்களையும் சேர்த்து நாங்கள் படைப்பை ஆராதித்து விட்டோம். ***(யாத்திராகமம் 20:4-6; உபாகமம் 4:15-19; உபாகமம் 27:15; ரோமர் 1:21-23; எபேசியர் 5:5; 1 யோவான் 5:21; வெளிப்படுத்தல் 21:8).***

• நாங்கள் உம் மீது நம்பிக்கை வைக்காமல், எங்களையும் மற்றவர்களையும் நம்பி விட்டோம் ***(சங்கீதம் 118:8; எரேமியா 17:5)***

• நாங்கள் பில்லிசூனியம் செய்து, மற்ற தவறான காரியங்களில் ஈடுபட்டோம் ***(உபாகமம் 11:28; உபாகமம் 27:15; வெளிப்படுத்தல் 21:8).***

• எங்களது பெற்றோருக்குக் கீழ்படியாமல் அவர்களைக் கனவீனப்படுத்திவிட்டோம் ***(உபாகமம் 27:16; யாத்திராகமம் 20:12; எபேசியர் 6:2).***

• நாங்கள் அத்தனை விதமான பாலியல் பாவங்களையும், இச்சை, காம விகாரம், விபசாரம். பெற்றோர்களின் துணைவருடன் பாலியல் உறவு, ஓரினச் சேர்க்கை, உறவினர்களுடன் பாலியல் உறவு போன்ற பாவங்களை நாங்கள் செய்து விட்டோம். ***(ஆதியாகமம் 38:9-10; யாத்திராகமம் 20:14; உபாகமம் 27:20-23; எசேக்கியேல் 22:10-11; மத்தேயு 5:27-28; ரோமர் 1:26-27; 1 கொரிந்தியர் 6:9, 15-20; எபேசியர் 5:5; வெளிப்படுத்தல் 22:15).***

• நாங்கள் அவிசுவாசிகளைத் திருமணம் செய்து, அவிசுவாசிகளுடன் உடன்படிக்கை செய்து விட்டோம் ***(நெகேமியா 13:23-25; 2 கொரிந்தியர் 6:14-15).***

• தற்கொலைகள், கொலைகள், கருக்கலைப்பு மூலம் அப்பாவி மக்களைக் கொல்லுதல் போன்றவைகளை நாங்கள் செய்து விட்டோம். ***(ஆதியாகமம் 9:5; யாத்திராகமம் 20:13; உபாகமம் 28:47-48; சங்கீதம் 71:6; சங்கீதம் 139:13-17; ஏசாயா 49:1, 5; மத்தேயு 5:21-22; மாற்கு 8:34; ரோமர் 13:9-10).***

• எங்களது சுற்றுப்புறத்தாரை நேரடியாகவும், சில நேரம் இரகசியமாகவும் தாக்கி உள்ளோம். ***(உபாகமம் 27:24; மாற்கு 12:31; 1 யோவான் 3:15).***

• நாங்கள் லஞ்சத்தை ஏற்றுக் கொண்டு, அப்பாவி மக்களின் மரணத்திற்குக் காரணமான அளவிலும் லஞ்சத்தை வாங்கிக்கொண்டு இருக்கின்றோம். ***(உபாகமம் 27:25).***

• தண்டனையால் கொல்லப்பட்ட மக்களை அந்த நாளிலேயே நாங்கள் புதைக்கவில்லை. ***(உபாகமம் 21:23; கலாத்தியர் 3:13).***

• எங்களுக்காக நீர் அமைத்த சபையில் பங்கு பெற்று, உண்மையாக தசம பாகமும் கொடுக்கவில்லை. ***(உபாகமம் 12:11; மல்கியா 3:9)***

• வறுமையைக் கண்டும், தேவையுள்ளவர்களுக்குப் பகிர்ந்துக் கொடுக்காமல் எங்களது கண்களை மூடிக்கொண்டோம். ***(நீதிமொழிகள் 28:27; மத்தேயு 25:41-46).***

• அந்நியர்கள், தகப்பன் அற்றவர்கள், விதவைகள் போன்றவர்களிடம் இருந்து நீதியைத் தடுத்து விட்டோம். ***(உபாகமம் 27:19; ஏசாயா 58:6-7; யாக்கோபு 1:27).***

• நாங்கள் உமது பரிசுத்த நாமத்தைக் கனப்படுத்தவில்லை. ***(உபாகமம் 28:58; சகரியா 5:4; மல்கியா 2:2; வெளிப்படுத்தல் 16:9).***

• நாங்கள் உம்மையும், மற்ற மக்களையும், எங்களையுமே சபிக்கின்றோம். ***(2 சாமுவேல் 19:21; யோபு 2:9; சங்கீதம் 109:17; மத்தேயு 5:22; 1 கொரிந்தியர் 11:29; யாக்கோபு 3:10; வெளிப்படுத்தல் 16:9,11).***

• உம்மால் தேர்வு செய்யப்பட்ட இஸ்ரவேலை நாங்கள் சபித்து விட்டோம். ஆசீர்வதிக்கவில்லை. ***(ஆதியாகமம் 12:3; ஏசாயா 45:17; ரோமர் 11:28 பின்பாகம், 29).***

• நாங்கள் பொய் சொல்லி, தவறாகப் பேசி விட்டோம் ***(சகரியா 5:4; வெளிப்படுத்தல் 21:8; வெளிப்படுத்தல் 22:15).***

• நிலத்தைத் திருடி, மற்ற மக்களின் எல்லைக்குள் சென்று விட்டோம் ***(உபாகமம் 19:14; உபாகமம் 27:17; நீதிமொழிகள் 22:28).***

• மதுபானம் மற்றும் போதைகளினால் நாங்கள் போதைக்கு அடிமையாகி விட்டோம் ***(நீதிமொழிகள் 23:29-35; ரோமர் 13:13; 1 கொரிந்தியர் 11:27).***

• நாங்கள் உமது சுவிசேஷத்தை பறைசாற்றவில்லை ***(லேவியராகமம் 19:14; உபாகமம் 27:18; லூக்கா 17:2; கலாத்தியர் 1:8; 2 பேதுரு 2:14).***

• உமது கிருபையை மட்டும் நம்புவதற்குப் பதிலாக, எங்களது சுய முயற்சியினால் எங்களையே இரட்சிக்க முயற்சி செய்தோம் ***(மாற்கு 1:15; ரோமர் 4:1-24; குறிப்பாக 24. ரோமர் 10:9, 13; கலாத்தியர் 3:6-12; எபேசியர் 2:8-10).***

“நான் என்னாலும், ஆதாம் மற்றும் ஏவாள் துவங்கிய என்னுடைய மூதாதையரினாலும் உண்டாக்கப்பட்ட ஒவ்வொரு தவறான எண்ணத்தையும், வார்த்தையையும், செயலையும் அறிக்கை செய்கின்றேன். நான் இந்தப் பாவங்களை விட்டு விடுகின்றேன். தயவாய் இது வரையும் நாங்கள் அறிந்தும் அறியாததுமாய் செய்த ஒவ்வொரு பாவங்களுக்காகவும் என்னையும், எனது மூதாதையர்களையும், எனது சபையையும், எனது தேசத்தையும் மன்னியும்.

“எனது பாவங்களுக்காக மரித்து, நியாயப்பிரமாணத்தினால் கொடுக்கப்பட்ட சாபத்தில் இருந்து எங்களை விடுவித்ததற்காக இயேசுவே உமக்கு நன்றி. எங்களது எல்லா பாவத்தின் காரணமாய் உண்டான சாபத்தை நீர் உம் மீது எடுத்துக் கொண்டீர். ***(கலாத்தியர் 3:13-14).*** இதில் எனது விசுவாசத்தின் காரணமாய், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அதிகாரம் எடுத்து, என் மீதும், எனது குடும்பம், எனது சபை மற்றும் எனது தேசத்தின் மீது இருக்கும் சாபத்தை உடைக்கின்றேன்.

“பரலோகப் பிதாவே, என்னையும், எனது குடும்பத்தையும், எனது சபையையும், எனது தேசத்தையும் தூய்மையாக்கி, பொல்லாப்பில் இருந்து விடுவித்து, பரலோகின் கீழே இருக்கும் அத்தனை ஆசீர்வாதங்களினாலும் 1000 தலைமுறைகளுக்கு எங்களை ஆசீர்வதிக்க உம்மைக் கேட்கின்றேன் ***(எபேசியர் 1:3)*** உமக்கு நன்றி. நான் உம்மை நேசித்து, உமக்குக் கீழ்படிகின்றேன். என்னை வலுவாக உமக்கு அர்ப்பணிக்கின்றேன். ***(உபாகமம் 30:20; யோசுவா 24:15; மாற்கு 12:30).*** பரிசுத்த ஆவியானவரே எனக்கு உதவி செய்யும். எனக்கு நீர் வேண்டும். என்னை இன்று புதிதாய் நிரப்பும்.

“பரலோகப் பிதாவே, உமது மகிமையான நாமம் துதிக்கப்படுவதாக! எல்லா ஆசீர்வாதங்களுக்கும், துதிக்கும் மேலாக உமது நாமம் உயர்த்தப்படுவதாக! ***(நெகேமியா 9:5*** *பின்பாகம்)*

“இயேசுவின் நாமத்தில் நான் ஜெபிக்கின்றேன். ஆமென்”

# *கிறிஸ்துவில் நான் யார்*

*மீண்டும் பிறந்த கிறிஸ்தவராக, நாம் கிறிஸ்துவில் இருக்கின்றேன். அவர் என்னில் இருக்கின்றார். கீழே கொடுக்கப்பட்டுள்ள அத்தனை வேதபகுதியும் முழுவதுமாய் எனக்கு உண்மையே. அதனை இன்னும் உண்மையாக்க நான் எதையும் செய்ய முடியாது. ஆனால், கர்த்தர் என்னைப் பற்றி என்ன கூறுகின்றார் என்பதை நம்பி இந்த உண்மைகளை எனது வாழ்வில் மிகத் தீவிரமானதாக மாற்ற முடியும்.*

**கிறிஸ்துவில்...**

***நான் நேசிக்கப்படுகின்றேன்:***

- *நான் கர்த்தருடைய குழந்தை **(யோவான் 1:12; ரோமர் 8:14; கலாத்தியர் 3:26, 4:6-7; எபேசியர் 1:5).***
- *நான் இயேசு கிறிஸ்துவின் நண்பன் **(யோவான் 15:15).** சகோதரன் **(எபிரேயர் 2:11).***
- *நான் கர்த்தரால் நேசிக்கப்படுகின்றேன். கர்த்தரானவர் இயேசுவானவரை நேசிப்பது போன்று என்னையும் நேசிக்கின்றார் **(யோவான் 17:23).***
- *நான் கர்த்தருடைய அன்பில் இருந்து பிரிக்கப்பட முடியாது **(ரோமர் 8:35-39).***
- *நான் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு அங்கத்தினர் **(1 கொரிந்தியர் 12:27; எபேசியர் 5:30).***

***நான் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கின்றேன்:***

- *கிறிஸ்துவின் மீது உள்ள விசுவாசத்தினால் கர்த்தருடைய பார்வையில் நான் சரிப்படுத்தப்பட்டு இருக்கின்றேன் **(ரோமர் 5:1).***
- *பாவங்களின் தண்டனையில் இருந்து விடுவிக்கப்பட்டு இருக்கின்றேன் **(ரோமர் 3:24; கொலோசெயர் 1:14).***
- *நான் பாவத்திற்கு மரித்திருக்கின்றேன். எனது வாழ்வு கிறிஸ்துவின் வாழ்வு **(ரோமர் 6:1-6; கலாத்தியர் 2:20; கொலோசெயர் 2:11).***
- *நான் என்றென்றுமாய்க் குற்றம்சாட்டப்படுதலில் இருந்து தப்பியிருக்கின்றேன் **(ரோமர் 8:1 மற்றும் 8:31-34).***
- *கர்த்தரிடம் நான் தைரியமாக உதவி கேட்டு வர முடியும் **(எபிரேயர் 4:16; எபேசியர் 2:18, 3:12).***

***நான் முக்கியமானவன்:***

- *தகுதியற்று பெறப்பட்ட பாக்கியம், நம்பிக்கை, மற்றும் சந்தோசத்தின் இடத்தில் நான் இருக்கின்றேன்* ***(ரோமர் 5:2).***
- *நான் உண்மையான திராட்சைச் செடியின் கொடி, கிறிஸ்துவின் வாழ்விற்கு வழித்தடம்* ***(யோவான் 15:1, 5).***
- *நான் கர்த்தருக்கு சொந்தமானவன்* ***(1 பேதுரு 2:9).***
- *நான் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்த ஜாதியின் அங்கத்தினன்* ***(1 பேதுரு 2:9-10).***
- *உன்னதங்களின் சகல ஆசீர்வாதங்களினாலும் நான் ஆசீர்வதிக்கப்பட்டு இருக்கின்றேன்* ***(எபேசியர் 1:3).***

***நான் பாதுகாப்பாக இருக்கின்றேன்:***

- *இயேசுவினால் நான் கர்த்தரில் மறைக்கப்பட்டு இருக்கின்றேன்; கர்த்தரே இதனைச் செய்தார்* ***(கொலோசெயர் 3:3; 1 கொரிந்தியர் 1:30).***
- *கர்த்தருடைய பெரிதான இரக்கம், கிருபை மற்றும் தயவிற்கு நான் ஒரு உதாரணம்* ***(எபேசியர் 2:7).***
- *என்னில் கர்த்தரால் ஆரம்பிக்கப்பட்ட நல்ல வேலை நிறைவடையும் என்று நான் நம்பிக்கையுடன் இருக்கின்றேன்* ***(பிலிப்பியர் 1:6).***
- *நான் கர்த்தரால் பிறந்தவன். பிசாசானவன் என்னைத் தொட முடியாது* ***(1 யோவான் 5:18).***
- *நான் நிலை நிறுத்தப்பட்டு, அபிஷேகிக்கப்பட்டு, கர்த்தரால் முத்திரையிடப்பட்டு இருக்கின்றேன்* ***(2 கொரிந்தியர் 1:21-22)***

***எனக்கு ஒரு நோக்கம் உண்டு:***

- *நான் கர்த்தரைப் போன்று உண்மையாகவும், நீதியாகவும், பரிசுத்தமாகவும் இருக்கும்படியாக அழைக்கப்பட்டு இருக்கின்றேன்* ***(எபேசியர் 4:24; 2 கொரிந்தியர் 5:21).***
- *நான் தேர்ந்து எடுக்கப்பட்டு, அவருக்கு கனிதரும்படியாக இயேசுவானவரால் நியமிக்கப்பட்டு இருக்கின்றேன்.* ***(யோவான் 15:16).***
- *நான் பூமிக்கு உப்பாகவும், உலகிற்கு வெளிச்சமாகவும் இருக்கின்றேன்* ***(மத்தேயு 5:13-14).***
- *நான் கர்த்தருடைய ஆசாரியத்துவத்தில் கர்த்தருடைய இராஜரீக ஆசாரியன் (****1 பேதுரு 2:9).***
- *என்னைப் பெலப்படுத்தும் கிறிஸ்துவினால் என்னால் எதையும் செய்ய முடியும்* ***(பிலிப்பியர் 4:13).***

***எனக்கு மகிமையான நித்திய சுதந்திரம் உண்டு:***

- *நான் கிறிஸ்துடன் சுதந்திரவாளியாய் கர்த்தருடைய மகிமையிலும், பாடுகளிலும் பங்கடைகின்றேன்* ***(ரோமர் 8:17; கலாத்தியர் 4:6-7).***
- *நான் பரலோகக் குடிமகனாய், இப்போது பரலோகில் அமர்த்தப்பட்டு உள்ளேன்* ***(பிலிப்பியர் 3:20; எபேசியர் 2:6,19).***
- *வருங்கால மகிமையின் நம்பிக்கைக்காக நான் அழைக்கப்பட்டு உள்ளேன்* ***(எபேசியர் 4:4).***
- *நான் இருளில் இருந்து மீட்கப்பட்டு, கர்த்தருடைய இராஜியத்திற்கு மாற்றப்பட்டு உள்ளேன்* ***(கொலோசெயர் 1:13; 1 தெசலோனிக்கேயர் 5:5)***
- *நான் கிறிஸ்துவினால் நிரம்பி உள்ளேன். கிறிஸ்துவே மகிமையின் நம்பிக்கை!* ***(கொலோசெயர் 1:27; 1 கொரிந்தியர் 3:16).***

**எனவே கிறிஸ்துவில் நிலைத்து இருங்கள்!**

***(யோவான் 15:7-10; எபிரேயர் 3:6; 1 யோவான் 2:27-28; 2 யோவான் 9).***

# வேதாகமத்தை கற்றுக் கொள்வது எப்படி[12]

## வேதாகம வாசிப்புத் திட்டங்கள்

முடிந்தால் ஒவ்வொரு ஆண்டும் வேதாகமத்தினை முழுவதுமாக வாசித்து முடிப்பது ஆவிக்குரிய வாழ்வின் வளர்ச்சிக்கு மிகவும் நல்லது. ஒவ்வொரு நாளும் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் இருந்து நாம் வாசிக்கும் போது அதிகமான வாசிப்பு முறைகள் உள்ளது. பழைய ஏற்பாட்டில் 929 அத்தியாயங்களும், புதிய ஏற்பாட்டில் 260 ஏற்பாடுகளும் இருக்கின்றன. நீங்கள் உங்கள் திட்டப்படியே வேதாகமத்தினை வாசிக்கலாம். ஆனால், ஒவ்வொரு நாளும் பழைய ஏற்பாட்டில் இருந்து 2 அல்லது 3 அதிகாரங்களும், புதிய ஏற்பாட்டில் இருந்து 1 அதிகாரமும் வாசிக்கலாம் என்று நாங்கள் ஆலோசனை தருகின்றோம். இப்படிச் செய்வதினால், நீங்கள் ஓராண்டில் வேதகாமத்தை முழுவதுமாக வாசித்து முடிப்பீர்கள். நீங்கள் எங்கு வரை வாசித்திருக்கின்றீர்கள் என்பதை நினைவுபடுத்த உங்கள் வேதாகமத்தில் அடையாளக் குறியிடுங்கள். பல விதமான வேதாகம வாசிப்புத் திட்டங்களுடனும், பல விதமான பாஷைகளில் இணைய தள வேதாகமங்களும், வேதாகம அப்ளிகேஷங்களும் இருக்கின்றது. www.youversion.com மற்றும் www.biblegateway.com போன்றவைகளை அணுகலாம்.

## வேதாகம தியானமும், கர்த்தருடைய வார்த்தையை ஜெபிப்பதும்

கர்த்தருடைய வார்த்தையை வாசிப்பதுடன், கர்த்தருடைய வார்த்தையைத் தியானிப்பதும் மிகவும் முக்கியம். **(யோசுவா 1:8; சங்கீதம் 1:1-3; சங்கீதம் 119:15-16; எபிரேயர் 4:12).** கர்த்தருடைய வார்த்தையில் நிரம்பி இருப்பது ஆவிக்குரிய கனி மற்றும் முதிர்ச்சிக்கு நேராக வழி நடத்தும். வேதாகமத்தைத் தியானிக்க பல் வழிகள் உள்ளன. உதவிகரமாக இருக்கும் சில வழிமுறைகள்.

- கர்த்தருடைய வார்த்தையை அனுதினமும் தியானிக்க ஒரு முடிவு செய்யுங்கள். உங்களால் இப்போது வேதாகமத்தில் புரிந்துக்கொள்ள முடியாத காரியங்கள் குறித்து நீங்கள்

12. கம்பெல் மெகல்பைன், எக்ஸ்பிலைனிங்க் பிபிலிகல் மெடிடேஷன், 2004, சாவரீன் வொர்ல்ட் லிமிடட்

வருத்தப்படவேண்டாம்.

*“உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்.”* ***(சங்கீதம் 119:18).***

*“உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருகிறது.”* ***(சங்கீதம் 119:105).***

- வேதாகமத்தில் எந்தப் புத்தகத்தை அல்லது பகுதியை வாசிக்க வேண்டும் என்று ஆண்டவரிடம் ஜெபித்துக் கேளுங்கள்.
- நிதானமாயிருங்கள்... உங்களுக்கும் ஆண்டவருக்கும் இடையே அனைத்தும் சரியாக இருக்கின்றதா என்பதைக் கவனியுங்கள். அவரது நனமை மற்றும் கிருபைக்காக அவருக்கு நன்றி செலுத்த நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். அவர் யார் என்பதற்காக அவரைத் துதியுங்கள். அவரை ஆராதியுங்கள்.
- தன்னுடைய எண்ணங்களை அவர் உங்களுக்குத் தரும்படியாக அவருக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்.
- இப்போது, கர்த்தர் உங்களுக்குக் காண்பித்த வேதாகம பகுதிக்கு சென்று, அதனை சில முறை மெதுவாக வாசியுங்கள்.

  1. எந்த எண்ணங்களை நீங்கள் பெற்றுக் கொண்டீர்கள்?
  2. கர்த்தர் உங்களுக்குக் கற்றுக் கொடுப்பது என்ன? (உதாரணமாக, ஒரு எச்சரிக்கை, பின்பற்ற வேண்டிய உதாரணம், அவரது குணத்தைப் பற்றிய குணாதிசயம், அவருக்கு நன்றி செலுத்துவதற்கான காரியங்கள்)
  3. ஜெபத்தில், அவர் உங்களுக்குப் போதிப்பதற்குப் பதில் கொடுங்கள். பின்னர், உங்கள் குடும்பம், சபை, தேசம் மற்றும் இஸ்ரேல் உள்ளிட்ட ஒவ்வொரு தேசங்களுக்காக உங்கள் ஜெபத்தைப் பெரிதாக்குங்கள்.[13]

கேள்விகளுக்கான பதில்களை எழுதுங்கள். உங்கள்

13. இந்த வகையான ஜெபம் குறித்து கூடுதல் விவரத்திற்கு, தயவாய் லிடியா ஃபெல்லோஷிப் இண்டெர்னேஷனலின் www.lydiafellowshipinternational.org என்ற முகவரியை அணுகவும்.

குறிப்பிட்ட தேவைக்கு அந்த வேத பகுதி பேசுவதில் இருந்து கர்த்தர் உங்களது சிந்தனையை வேறு ஒரு திசைக்குத் திருப்பலாம். அவரைக் கட்டுப்படுத்த வேண்டாம்.

உங்களுக்கு அதிகமான நேரம் இருக்கும் போது, இதற்கு இணையான பகுதிகளை அல்லது வேதாகமக் குறிப்புகளைக் காணவும்.

அந்த நாளின் மீதி நேரம் முழுவதும், கர்த்தர் உங்களிடம் பேசியது என்ன என்பது பற்றியே சிந்தியுங்கள்.

## சுகத்திற்காக ஜெபிப்பது[14]

இயேசுவானவர் இதே ஊழியத்தை அனைத்து விசுவாசிகளுக்கும் கொடுத்தார் ***(மத்தேயு 28:18–20; மாற்கு 16:15–18; லூக்கா 24:46–49; யோவான் 20:21–22).*** அவரது விசுவாசிகள் எல்லா இடத்திற்கும் சென்று, சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததும், அவர்கள் கூறியதை அனேகமான அற்புதமான அடையாளங்களுடன் உறுதிப்படுத்தினார் ***(மாற்கு 16:20; அப்போஸ்தலர்*** முழு புத்தகம்!)

இயேசுவைப் பற்றிய நற்செய்தியைப் பிரசங்கிப்பதுடன் வியாதியஸ்தர்கள் சுகமடைவதும் மற்ற அற்புத அடையாளங்கள் நடப்பதும் இணைந்தே வருகின்றது (அந்த நற்செய்தி என்னவெனில் இயேசுகிறிஸ்துவின் மூலமாக மனம்திரும்புகின்ற நபர்களுக்கு மன்னிப்பு உள்ளது என்பதே).

வியாதியஸ்தர்களை சுகமாக்க வேண்டும் என்று இயேசுவானவர் ஒவ்வொரு விசுவாசிக்கும் கட்டளையிட்டார் ***(மத்தேயு 10:1, 8; மாற்கு 6:12–13; 16:15–20; லூக்கா 9:1–2).*** வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்க மட்டும் அல்ல அவர்களை சுகமாக்கவும் அவர் நம்மிடம் கூறியிருக்கின்றார். சிலருக்குக் கர்த்தர் சுகமாக்கும் வரம் கொடுத்து இருக்கின்றார் ***(1 கொரிந்தியர் 12:9, 28).*** மக்கள் சுகமடைய வேண்டும் என்று நாம் ஜெபிக்கும் தருணத்தில், கர்த்தரால் மற்றவர்களை சுகமாக்க நம்மைப் பயன்படுத்த முடியும். பயன்படுத்துவார். வாக்குப்பண்ணினவர் பொய் சொல்லுவதில்லை ***(எபிரேயர் 6:18).***

நாம் சுகத்திற்காக ஜெபிக்கையில் இந்த மூன்று வாக்குத்தத்தங்கள் நமக்கு நம்பிக்கையைத் தருகின்றது:

1. “அவரது தழும்புகளால் நாம் சுகமானோம்.” ***(ஏசாயா 53:5; 1 பேதுரு 2:24).***
2. “நாம் அவரது புதிய (மேன்மையான) உடன்படிக்கையில் இருக்கின்றோம்.” ***(எபிரேயர் 9:12–15).***
3. “தேவனுடைய இராஜியம் நம்மில் இருக்கின்றது” ***(லூக்கா 17:21).***

---

14. சுகப்படுத்துதல் என்பதின் அதிகமான காரியங்கள் ரேண்டி கிளார்க் என்பவரின் க்லோபல் அவேகனிங்க் (2010) செமினார் மற்றும் சார்லஸ் மற்றும் ஃப்ரன்செஸ் ஹண்டரின் டிவிடி செமினார் மூலமாகத் தூண்டப்பட்டது.

சுகத்திற்கும் அற்புதத்திற்கும் நம்மை ஜெபிக்கத் தூண்டும் வேறு சில வேதாகமப் பகுதிகள்:

*"தேவனால் எல்லாம் ஆகும்."* ***(மத்தேயு 19:26).***

*"கர்த்தரானவர் இயேசுவை நேசிப்பது போன்று நம்மையும் நேசிக்கின்றார்!"* ***(யோவான் 17:23).***

*"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிறகிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன்."* ***(யோவான் 14:12-14).***

*"அல்லாமலும், உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக்குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்திலிருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."* ***(மத்தேயு 18:19).***

*"நாம் நினைப்பதற்கும் மேலாகக் கர்த்தரால் செய்ய முடியும்."* ***(எபேசியர் 3:20).***

இயேசுவானவர் மக்களைத் தொட்டு ஜெபித்தார். அப்படியே நாமும் ஜெபிக்கலாம். கர்த்தர் நமது கரங்களை சுகமாக்க பயன்படுத்த கேட்கவேண்டும். நாம் அப்படி செய்யும் முன்பாக, நாம் யாருக்காக ஜெபிக்கின்றோமோ அந்த மக்களிடம் அவர்களைத் தொட்டு ஜெபிப்பது சௌகரியமானதா என்று கேட்க வேண்டும். சரீரத்தில் எந்த பாகத்தில் சுகம் வேண்டுமோ அந்த இடத்தைத் தொட்டு ஜெபிக்க வேண்டும். மற்ற 'அந்தரங்க' இடங்களைத் தொடக்கூடாது.



அதன் பின்னர் நாம் அந்த மனுசருக்காக ஜெபிக்கலாம். அவரகளை ஆசீர்வதித்து, கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கக் கேட்டு, சுகப்படுத்தும் வார்த்தைகளைப் பேசலாம். நமது ஜெபத்தில் சுகம் பெறுவதற்கு நாம் கர்த்தருடைய வாக்குறுதிகளை நினைவுகூர்ந்து ஜெபிக்க வேண்டும். ("உமது தழும்புகளால் இந்த மனிதர் சுகமடையட்டும்; காரணம் நான் உமது புதிய உடன்படிக்கையினால் மறுபடியும்

பிறந்த விசுவாசி சுகம் உண்டாவதாக; காரணம் உமது இராஜியம் என்னில் உள்ளது இந்த மனுசர் சுகமடையட்டும்") "**இயேசுவின் அதிகாரமுள்ள நாமத்தில் நாங்கள் சுகமாக்குகின்றோம்**".

அவர்களைத் தொட்டு ஜெபிக்க ஆரம்பிக்கையில், "இந்த வியாதி எப்போதில் இருந்து உண்டானது?" அல்லது "இந்த வியாதி உங்கள் வாழ்வில் உண்டான போது உங்களது வாழ்வு எப்படி இருந்தது?" என்பது போன்ற கேள்விகளைக் கேட்பது மிகவும் உதவியாக இருக்கும். அந்த வியாதி உண்டான நேரத்தில் அதிகம் வேதனை உண்டாக்கிய சம்பவங்கள் நடந்திருக்கலாம். அதற்குக் காரணமான நபரை மன்னிக்கக் கர்த்தரிடம் கேட்க நான் உதவி செய்யலாம். மன்னிக்க முடியாததன்மை சுகமாக்குதலைத் தடை செய்கின்றது. ஜெபம் பதிலளிக்கப்படுவதில் இருந்தும் தடுக்கின்றது **(மத்தேயு 11:22-25).** மன்னிக்கமுடியாத தன்மையே வியாதிக்கும் வலிக்கும் காரணமாக இருக்க முடியும் **(மத்தேயு 18:34-35).** மன்னித்து மற்றவர்களையும் மன்னிக்க உற்சாகப்படுத்துவது மிகவும் முக்கியம். மன்னிப்பு சுகத்தைத் தருகின்றது.

நாம் ஜெபிக்கும் போது அந்த மனுசருக்கு என்ன நடக்கின்றது என்பதையும் நாம் கேட்கலாம். சில நேரம் அவர்கள் வெப்பம் அல்லது குளிர்ச்சி அல்லது சில உணர்வுகள் போன்றவைகளை அனுபவிக்கலாம். அவர்கள் அப்படி ஏதேனும் ஒன்றை அனுபவித்தால் அவர்களுக்காக நாம் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். கர்த்தர் செய்யும் செயலுக்கு ஆதாரம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, நாம் கர்த்தருக்கு நன்றி செலுத்த வேண்டும்.



சரீர உறுப்பை சுகமடையும்படியாக அறிவுறுத்த இயேசுவானவர் நமக்கு அதிகாரம் கொடுக்கின்றார். உதாரணமாக: "கால்களே இயேசுவின் நாமத்தில் சரியடைவாயாக", "இரத்தத்தில் சர்க்கரை அளவு இயேசுவின் நாமத்தில் சாதாரண நிலைக்கு வருவதாக" என்று சொல்லுவது. வலியும் வியாதியும் அகன்று போ என்று நாம் சொல்ல முடியும். உதாரணமாக "தலைவலியே இயேசுவின் நாமத்தில் அகன்று போ" என்று. சரீரப் பிரச்சனையை பற்றி நாம் அதிகமாக தெரிந்துவைத்திருக்கும் போது நாம் இன்னும் அதிகமாக குறிப்பாக ஜெபிக்க முடியும்.[15]

---

15. சார்லஸ் மற்றும் ஃப்ரன்செஸ் ஹண்டர், ஹௌ டொ ஹீல் த சிக், 1981, வ்ஹைடேகர் ஹௌஸ். மேலும் சார்லஸ் மற்றும் ஃப்ரன்செஸ் ஹண்டர், 7

அந்த நபர் சுகமடையவில்லை என்றால் நாம் ஜெபிப்பதை விட்டுவிடக் கூடாது! இன்னும் நீண்ட நேரம் ஜெபியுங்கள். இப்படி அதிகமான நேரம் ஜெபித்து, இனி நேரம் இல்லை என்னும் போது, அவர்கள் தங்கள் சுகத்திற்காக ஜெபிக்க வேண்டும் என்று ஆலோசனை தர வேண்டும். நாமும் அவர்களது சுகத்திற்காக ஜெபிக்க வேண்டும். தன்னுடைய சீஷர்கள் எப்போதும் விட்டு விடாமல் ஜெபிக்க வேண்டும் என்று இயேசு வானவர் கற்றுக் கொடுத்தது உண்டு ***(லூக்கா 18:1-8).***

> **சாட்சி**
> **கர்த்தர் அவளது கையை சுகமாக்கினார்**
>
> *“சுகத்திற்காக எப்படி ஜெபிக்க வேண்டும் என்று நான் ஒரு முதிர்ந்த பெண்ணிற்குக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தேன். அவர் ஒரு இளம் பெண்ணின் முதுகு வலிக்காக ஜெபித்துக் கொண்டிருந்தார். அவர் அந்த பெண்ணின் தோளைப் பிடித்து, அந்த பெண்ணின் வலி அவளை விட்டு விலகிப் போகும்படியாக கட்டளையிட்டார். இப்படி அவர் சில நிமிட நேரம் ஜெபித்தார். பின்னர் “என்ன நடந்தது?” என்று கேட்டேன். அந்த இளம் பெண்ணிற்கு முதுகு வலி இன்னும் இருந்தது. ஆனால் அந்த முதிர்ந்த பெண்ணின் கை முற்றிலுமாக சுகமடைந்தது. அந்த பெண்மணியின் கையில் சில எழும்புகள் உடைந்திருந்தது என்பதை நான் அறிந்திருக்கவில்லை. சில ஆண்டுகளுக்கு அவரால் அந்த கையை முழுவதுமாக பயன்படுத்த முடியவில்லை.”*

நமது ஜெபங்களுக்குப் பதிலாக கர்த்தர் கொடுக்கும் ஒவ்வொரு குறைந்த பட்ச சுகத்திற்காகவும் நாம் இயேசுவிற்கு நன்றி செலுத்த வேண்டும். கர்த்தர் மக்களை சுகமாக்குகின்றார். காரணம் அவர் அவர்களைத் தன்னிடமாக இழுக்க விரும்புகின்றார்.

*“தேவ தயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல்...”* ***(ரோமர் 2:4 முன்பாகம்).***

*இயேசுவானவர் தான் அதிகமான அற்புதங்கள் செய்திருந்த பட்டணங் களையும், நகரங்களையும் புறக்கணித்தார் “காரணமவர்கள் தங்களது பாவத்தைக் குறித்து மனம் திரும்பி, கர்த்தரிடமாய்த் திரும்பவில்லை.”* ***(மத்தேயு 11:20).***

கர்த்தர் நமது ஜெபத்திற்குப் பதில் தருகின்றார். நமது ஜெபத்திற்கான பதிலை நாம் அதிகமாகக் காண்கையில், நாம்

அதிகமாக ஜெபிக்கவும், இன்னும் அதிகமான காரியங்களுக்காக ஜெபிக்கவும், முடியாதவைகளாகத் தோன்றும் உறவுகள், திருமணங்கள், சபைகள், பட்டணங்கள், மாகாணங்கள் மற்றும் தேசங்கள், தொழில்கள், விவசாயம், என்று எவற்றிற்கெல்லாம் கர்த்தருடைய சுகமாக்கும் கரங்கள் அவசியப்படுகின்றதோ அவற்றிற்கெல்லாம் ஜெபிக்க நாம் உற்சாகப்படுத்தப்படுவோம். கர்த்தரே நாம் கேட்பதற்கும், நினைப்பதற்கும் மேலாக நமக்குள்ளே கிரியை செய்ய வல்லவர். ***(எபேசியர் 3:20).***

## மற்றவர்களுடனும், கர்த்தருடனும் நாம் சரியாக இருப்பது பற்றி வேதாகமம் என்ன கூறுகின்றது

மற்றவர்களுடனும், கர்த்தருடனும் நாம் சரியாக இருப்பது பற்றி வேதாகமம் என்ன கூறுகின்றது என்பதை நீங்கள் ஆய்வு செய்ய உங்களுக்கு இந்த வேதாக தியானம் உதவுகின்றது. நீங்கள் ஆய்வை தனியாகவோ அல்லது ஒரு சிறிய மக்கள் குழுவினருடனோ சேர்ந்து செய்யலாம். இது உங்களுக்கும் உங்கள் வாழ்வு மற்றும் ஊழியத்திற்கும் எப்படி பொருந்துகின்றது என்பதைக் கவனியுங்கள்.

1. இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மையமான செய்தி என்ன? *(லூக்கா 24:47; அப்போஸ்தலர் 26:18)*

2. மன்னிப்பை பெறுவதற்கு நாம் என்ன செய்வது அவசியம்? *(சங்கீதம் 32:1-5; 1 யோவான் 1:8-10)*

3. மன்னிக்கப்படுவதின் நன்மைகள் என்ன? *(ரோமர் 6:23; யாக்கோபு 5:16; அப்போஸ்தலர் 3:19-20)*

4. நம்மிடம் தவறாக நடந்து கொண்டவர்களை நாம் ஏன் மன்னிக்க வேண்டும்? *(மத்தேயு 6:12, 14-15, 18:22-35; எபிரெயர் 12:14-15)*

*5. உங்களுக்கு விரோதமாக தொடர்ந்து பாவம் செய்யும் ஒரு நண்பர்/கணவர்/மனைவி போன்றவர்களிடம் உங்கள் அணுகுமுறை எப்படி இருக்க வேண்டும்? (மத்தேயு 18:21-22; கொலோசெயர் 3:13)*

*6. மனம்திரும்புதல் என்றால் என்ன?*
*(லூக்கா 3:8; அப்போஸ்தலர் 26:20; கொரிந்தியர் 7:9-10 நீதிமொழிகள் 28:13)*

*7. ஒரு மனுசன் தனது நடக்கையை எப்படி சீர்ப்படுத்தமுடியும்? (ரோமர் 7:25 (18-25); எபிரேயர் 12:24)*

**சிறு குழுவினருக்கான கலந்துரையாடல் கேள்விகள்:**

*8. காயப்படுத்தும்படியாய்/வருத்தப்படுத்தும்படியாய் நீங்கள் செய்த ஒன்றை மன்னிக்கும்படியாக உங்கள் நண்பர்/கணவர்/மனைவி போன்றவர்களிடம் எப்படி மன்னிப்பு கேட்க முடியும்?*

**அமைதியில் உங்களுக்கான தனிப்பட்ட தியானம்:**

*9. கர்த்தரைக் காயப்படுத்தும்படியாக அல்லது வருத்தப்படுத்தும்படியாக நீங்கள் செய்த ஒன்றை மன்னிக்கும்படியாக கர்த்தரிடம் நீங்கள் எப்படி கேட்பீர்கள்?*

# பணம் குறித்து வேதாகமம் சொல்லுவது என்ன

இந்த வேதாகம ஆய்வு பணம் குறித்து வேதாகமம் என்ன சொல்லுகின்றது ஆராய உதவி செய்கின்றது. இதனை நீங்களோ அல்லது சிறு குழுவினராகவோ ஆய்வு செய்யலாம். அது உங்களுக்கும் உங்கள் வாழ்விற்கும் எப்படி பொருந்துகின்றது என்பதைக் கவனியுங்கள்.

**கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதில் தாருங்கள்.** நீங்கள் பதிலை வேதாகமத்தில் கண்டு கொள்வீர்கள். இன்னும் அதிகமாகப் புரிந்து கொள்ள, வேதாகமங்களில் உள்ள வசனங்களை வாசியுங்கள்.

*1. நமது பணப் பிரச்சனைக்குத் தீர்வு என்ன? (மத்தேயு 6:33; லூக்கா 12:33-34; 1 தீமோத்தேயு 6:17-19)*

*2. கர்த்தரைத் தேடுவதற்கும் அதிகமாக பணத்தைத் தேடினால் என்ன நடக்கும்? (பிரசங்கி 5:10-11; 1 தீமோத்தேயு 6:10; மத்தேயு 6:24; கொலோசெயர் 3:5; யாத்திராகமம் 20:4-6)*

*3. தசமபாகம் என்றால் என்ன? நமது தசம பாகத்தை யாருக்குத் தர வேண்டும்? (ஆதியாகமம் 28:22 பின்பாகம்; மல்கியா 3:8-12; மத்தேயு 22:21)*

*4. கொடுக்க வேண்டிய வரியைக் கொடுத்து, லஞ்சம் கொடுப்பதை நாம் ஏன் தவிர்க்க வேண்டும்? (யாத்திராகமம் 23:8; நீதிமொழிகள் 15:27; மத்தேயு 22:17-22; ரோமர் 13:6-7)*

*5. கடன் பற்றி வேதாகமம் சொல்லுவது என்ன? (ரோமர் 13:8; நீதிமொழிகள் 22:7)*

*6. ஏழைகளுக்கு உதவி செய்வது பற்றி வேதாகமம் என்ன கூறுகின்றது? (உபாகமம் 15:10; நீதிமொழிகள் 19:17; லூக்கா 6:34-36; லூக்கா 12:33-34; 2 கொரிந்தியர் 9:6-12; 1 யோவான் 3:17)*

*7. நாம் எதில் முதலீடு செய்ய வேண்டும் என்று வேதாகமம் கூறுகின்றது? (லூக்கா 8:1-3; யாக்கோபு 5:1-4; 3 யோவான் 5-8)*

*8. சபைத்தலைவர்களும், ஊழியத்தலைவர்களும் தாங்கள் பெற்றுக் கொள்ளும் காணிக்கையில் இருந்து ஏன் தசமபாகம் தர வேண்டும்? (எண்ணாகமம் 18:26-29; 1 தீமோத்தேயு 3:1-5)*

**சங்கீதம் 23:1** *ஐ தியானியுங்கள். அந்த வார்த்தையில் கர்த்தர் உங்களுக்குக் காண்பிக்கின்றவைகளுக்கு ஜெபித்து பதில் தாருங்கள்.*